பிஸ்மில்லாஹி

# நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ்க்கோவை

போட்டியில் பரிசு பெற்றவர்

கவிமணி மு. சண்முகனார்
இளையான்குடி

(பகுதி) இரண்டாவது

கவிமணி. த. கா காதர் கனி
இளையான்குடி

வெளியீடு உரிமை :

நாச்சிகுளத்தார் பதிப்பகம்

உதயமார்த்தாண்டபுரம் 614706

தஞ்சை மாவட்டம்

முதற் பதிப்பு : 1978
உரிமை: நாச்சிகுளத்தார் பதிப்பகத்தாருக்கே

விலை - ரூ. 9-00

## நாச்சிகுளத்தார் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | நெஞ்சில் நிறைந்த நினைவுகள் | 8 00 |
| 2. | நீதிக் களஞ்சியம் | 2 00 |
| 3. | சில்லரைக் கோவை | 3 00 |
| 4. | நல்வழி வெண்பா | 3 50 |
| 5: | வாழ்க்கைத் தத்துவம் | 2 75 |
| 6. | நாச்சி குளத்தார் நன்மொழிகள் | 2 00 |
| 7. | பேரின்ப இசைக்கொத்து | 3 00 |

மற்றும் பல அரிய நூல்களும்

இத்துடன்

நாச்சிகுளத்தார் பதிப்பித்த அரிய பெட்டகம்

சீறாப்புராணம் – 35-00

இராஜ நாயகம் 15-00

விற்பனை உரிமை :

தமிழ்மணி புத்தகப்பண்ணை

திருவல்லிக்கேணி, சென்னை-600 005

அச்சிட்டோர்:
கல்விப் பிரகாசம் அச்சகம், சென்னை-5.

# நன்றி

இந் நூலின் அச்சுக்கூலியை அன்பளிப்பாகத் தந்துதவிய வள்ளல் M. A. அஜீஸ் அவர்களுக்கும் இந்நூலின் பரிசுகளை வழங்கிய வள்ளல் ரெனு அவர்களுக்கும் அன்பு நண்பர் M. மீரா முகையதீன் அவர்களுக்கும் எங்கள் நன்றி கலந்த சலாத்தை (வணக்கத்தை) கூறிக்கொள்கிறோம்.

வஸ்ஸலாம்

நாச்சிகுளத்தார் பதிப்பகம்

பேராசிரியர் கவிக்கோ அப்துல் ரகுமான் எம்.ஏ.
அவர்களின்

# அணிந்துரை

தமிழ் இலக்கியத்தில் இருவகை விபத்துக்கள் நேர்ந்தன. 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்' என்பதைப் புரிந்து கொள்ளாமல் இலக்கணத்தை இறுகப் பிடித்துக் கொண்டு நாறிப் போனது: மற்றொன்று இலக்கணம் சரியாக ஒன்றைச் சுட்டிக் கொண்டிருக்க அதைப் பார்க்காமல் தவறான திசையில் சென்று தடுமாறி விழுந்தது. 'பிள்ளைத் தமிழ்' இரண்டாவது வகை விபத்தில் ஊனமடைந்த இலக்கியம்.

இலக்கணம் 'பிள்ளைத் தமிழ்' என்ற இலக்கியம் பற்றிப் பேசுகிறபோது சுரக்கிற மகிழ்ச்சி அந்தப் பெயரில் உள்ள இலக்கியங்களைப் பார்க்கிறபோது வறண்டு போகிறது. பிள்ளைகளின் மூன்றும் மாதம் முதல் இருபத்தோரும் மாதம் வரையுள்ள கால கட்டத்தைப் பருவங்களாகப் பகுத்துப் பாட வேண்டும் என்று இலக்கணம் தெளிவாகவே சொல்கிறது. வேண்டுமானால் ஆண் பிள்ளைக்குப் பதினாறும் ஆண்டு வரைக்கும், பெண் பிள்ளைக்குப் பூப்பு நிகழும் வரைக்கும் நீட்டிக் கொள்ளலாம் என்று இனியும் கொடுக்கிறது.

ஆனால் பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள் எப்படி இருக்கின்றன பெயரில்தான் 'பிள்ளை' என்ற சொல் ஒட்டிக் கொண்டிருக்கிறது. மற்றபடி அவை 'பெரியவாள் தமிழ்' தாம். பாட்டெல்லாம் பெரியவர்களின் பிரதாபங்கள். பாட்டின் முடிவில் மட்டும் திடீரென்று குழந்தைகளாகிச் சப்பாணி கொட்டுவார்கள்; செங்கீரையாடுவார்கள். படுகளத்தில் படைக்கலம் ஏந்திப் பகைவரைப் பதம் பார்த்துக் கொண்டிருப்பர் பாட்டுடைத் தலைவர்; பாவலர் திடீரென்று அவரைச் சப்பாணி கொட்டச் சொல்வார்; வேடிக்கை தான்.

தமக்குப் பிடித்தவரை எல்லாச் சிற்றிலக்கியங்களிலும் நாயகராக்கி விட வேண்டும் என்ற பேராசை இந்த விபரீதங்களுக்கு வித்திட்டு விட்டது. பிள்ளைகளின் மரக்குதிரையைப் பிடுங்கிப் பெரியவர்கள் சவாரி செய்ய ஆரம்பித்து விட்டார்கள், பாடப்படுபவருக்கு ஏற்ற-பாடப்படும் பொருளுக்கு ஏற்ற இலக்கிய வடிவங்களைத் தேர்ந்தெடுத்துப் பாட வேண்டும் என்ற உண்மை தமிழ் இலக்கிய உலகில் கைவிடப் பட்டுவிட்டது வருந்துதற்குரியது,

இலக்கணத்திற்கு மாறாக உண்டாகிவிட்ட ஒரு மரபைப் பின்பற்றிப் பல பிள்ளைத் தமிழ் நூல்கள் செய்யப்பட்டன. இஸ்லாமியப் புலவர்களும் செய்திருக்கிறார்கள். பெருமானார் முகம்மது(சல்) அவர்களைப் பற்றிச் சில பிள்ளைத் தமிழ் நூல்கள் முன்னரே இருக்கின்றன. இப்போது இரண்டு பிள்ளைத் தமிழ் நூல்கள் புதியதாய் வந்திருக்கின்றன.

பிள்ளைத் தமிழ் என்பதையே மறந்துவிட்டுப் பெருமானார் (சல்) புகழ் பாடும் இலக்கியங்கள் என்ற முறையில்தான் இவைகளைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

பெருமானார் (சல்) பற்றிய சிறப்பான குறிப்புக்களை நிறையவே தருகிறார் காதர்கனி, சண்முகம் பெருமானார்

(சல்) பற்றி இவ்வளவு நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறாரே என்று வியக்க வேண்டியிருக்கிறது.

"வானக் கதிரின் கயிற்றினிலே
வண்ண வில்லைப் பொருத்தி யிந்த
வல்லோன் அமைத்த தொட்டிலிலே
வளரும் பிறையே" என்றும்
"மண் ஊட்டா அறிவே!" என்றும்

பெருமானாரைப் பாராட்டுகின்ற இடங்களில் காதர்கனியின் சொற்கள் காதற் கனிகளாக இருக்கின்றன.

"சரிதம் திறக்கும் நூலகமே!"

"முகில்கூடக் கடல்நீரை
மோகப் பூம் பார்வையினால்
மழையாகப் பொழிவதுண்டு,"

"உம்மரும் பாதம் மண் படிந்திடுமே
சிற்றில் சிதைக்காதீர்."

"நாழிகைப் பூக்கள் மலர்ந்தே இரவும்
நகர்ந்தே வருகிறது".

என்பன போன்ற இடங்களில் சண்முகத்தின் பண்முகத்தைப் பார்க்க முடிகிறது.

பிள்ளைத் தமிழ் என்ற நடை வண்டியைப் பிடித்துக் கொண்டு நடக்காமல், சுதந்திரமாக நடந்திருந்தால் இவர்கள் நன்றாக நடந்திருப்பார்கள் என்று தோன்றுகிறது.

அப்துல் ரகுமான்
பேராசிரியர், தமிழ்த் துறைத் தலைவர்
இஸ்லாமியக் கல்லூரி

வாணியம்பாடி. 25-7-1978

# முன்னுரை

அன்புசால் அறிஞர் பெருமக்களே !

அமிழ்தெனும் இனிய தமிழில் நூல்கள் பாடுவதற்கு நமது முன்னோர்கள் அதற்கென (மரபு) வழிமுறைகளைக் கண்டு தெளிவாக்கி உள்ளனர் அதன்படியே பிள்ளைத் தமிழுக்கும் இலக்க வரம்பு செய்துள்ளனர். கண்டவர் கண்டதை கண்ட படி பாடுவது நடமில்லை—ஆண்பாற் பிள்ளைத்தமிழ் காப்பு செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிறு பறை, சிற்றில், சிறுதேர் பெண்பாற் பிள்ளைத்தமிழ் அம்புலிக்கு அடுத்து, கழங்கு. அம்மானை, பூசல் என்பது தலைப்புக்கள். இறை வாழ்த்து தனிய பாடினால், பருவம் பத்துக்குப் பத்துப் பாடல் மேனி நூறு பாடல். ஆக, மொத்தம் நூற்றி ஒன்று இவைகளிற் குறைந்தாலும் கூட்டக் கூடாது மேலும், இந்நூல் பாட கலிப்பா, சந்தம், ஆசிரியம், இம் மூன்று இனமே பிள்ளைத்தமிழுக்குள்ள இனம் இது போகமற்ற நிலையில் பாடுவது குருவிற்கு மிஞ்சிய, நிலை, நாங்கள் வெளியிட்ட (கம்பர்-நபிகள்) அறிக்கைக் கேற்ப பாடியவர். ந. மீனாட்சிசுந்தரம், ஒருவரே அவர் மற்றவர்கள் காப்புப் பருவத்ல் சிறிது மாறுபட்டு விட்டனர். இருப்பினும் இனம் பாடலின் எண்ணிக்கை அளவோடு இருந்தன. நன்றி இஸ்லாமியர்கள் பிள்ளைத் தமிழில் காப்பில் ஏழுவானவர்களைப் ஜிப்ரியலில், 2 மீக்காயில்,

3 இஸ்ராபீல் 4 ரக்கிபு-அத்தீது, 5 முன்கர்-நக்கீர், 6 ரிலுவான், 7 மாலிக், நபி ஆதம். நபி மூசா, நபி ஈஸா (மூன்று நபிமார்கள்) பாடி பிறகு செங்கீரை தொடங்கள் நலம் (இயல்பு).

ஏதோ எடுத்துக்கொண்ட முயற்சி வெற்றி பெறவேண்டும் என்ற பெருமனத்தோடு இந்நூலை தங்கள் முன் வைக்கின்றோம், தவறு இருந்தாலும் மன்னித்து ஏற்று இன்புற வேண்டுகிறோம்.

இந் நூல்களைப் பாடிய கவிமணி M. சண்முகம் அவர்களுக்கும், த. கா. காதர்கனி அவர்களுக்கும் எங்களது நன்றி.

இந்நூலின் பரிசுகளை வழங்கிய வள்ளல் ரெஜு அவர்களுக்கும் அன்பு நண்பர். மீரா (பெருங்குளம், Meerehrest-uranit, Penang) அவர்களுக்கும் இந்நூலின் அச்சுக் கூலியை ஏற்றுக்கொண்ட வள்ளல் M. A. அஜிஸ், (Sather, Company Penang,) அவர்களுக்கு எங்களது நன்றி.

மேலும் இந்நூலை நல்ல முறையில் அச்சிட்ட, அச்சகத்தார். விற்பனை உரிமை ஏற்றுக்கொண்ட தமிழ்மணி புத்தகப் பண்ணை நிறுவனத்தாருக்கும் நன்றி.

நாச்சிகுளத்தார்.

# பாயிரம்

மாட்சியொடு மாண்புசால் அறிவும் பெற்று
வல்லவனின் திருவாக்கால் உயர்ந்து, பாரில்
ஆட்சியது மிகச் செய்த அருமை நாதர்
அகிலத்தைப் புரக்கவந்த செம்மல் எங்கள்
காட்சிநிறை நபிநாதர் தம்மேற் பிள்ளைத்
கவிசொல்ல வேண்டுமெனக் கருத்தி னோடு
நாச்சிகுளத் தார்நிருபம் அனுப்பக் கண்டு
நல்லபிள்ளைத் தமிழ்நூல்கள் வந்த தம்மா

வந்திட்ட நூலெல்லாம் அறிஞர் பார்த்தே
வகைவகையாய்த் துறைதோறும் தெளிவு கண்டு
தந்திட்ட நூலிரண்டு தரமென் றார்கள்
தகைசான்ற நூல்களிலே முதன்மைத் தாக
கன்திட்டக் களிரெனவே காட்சி நல்கும்
கருத்துடைய சண்முகனார் செய்த நூலை
முந்திட்ட திதுவென்ன வைந்தோ மேனும்
முறைமரபு கோடியதால் சமன்செய் தோமே

செல்தோங்காண் மற்றொருநம் புலவன் தந்த
செழும்பிள்ளைத் தமிழ்நூலை அதன்பின் வைத்தே
உய்யவொரு வழிசெய்தோம், சமத்தில் அஃதும்
உயர்வுற்ற தாகையினால் மகிழ்வி னோடு
நைய்யாது போற்றுதற்கு ஏற்ற வண்ணம்
நாம்பரிசு விதித்திட்டோம்,மேலும் மேலும்
ஐயநபி பெருமானின் புகழைப் பாடி
அருமையுடன் இவர்கவிதை செய்க வென்றே

முது தமிழ்ப் பெரும்புலவர்
சுவாமி இராமதாசர்

# கவிஞன் குரல்

த. கா. காதர் கனி

தமிழ்த்துணைப் பேராசிரியர் டாக்டர் சாகிப் உசேன்
கல்லூரி, இளையான்குடி.

இன்ப மணம் பரப்பட்டும் (ஆமீன்)

இதயம் !
அது இறைவனின் இல்லம் !
அந்த இறையில்லத்திலிருந்து சுரப்பதே கவிதை !
இறையில்லத்தின் சுரப்புக்கு எத்தனை ஆற்றல்
இருக்க வேண்டும் !
ஆம்,
உலகப் புரட்சிகளுக் கெல்லாம் 'கனல்' கொடுத்தது
அதுதானே !
உள்ள மலர்ச்சிக்கு உன்னத கருவியானதும்
அதுதானே !
அந்தக் கவிதை வெறும் வாய்மொழி அல்ல;
இதயமொழி !
ஆம் !
கவிதையில் கவிஞனின் இதயம் பேசுகிறது
அதனைச் சுவைஞனின் இதயம் கேட்கிறது
இங்கேதான் 'இதயக்கலப்பு' உருவாகிறது
இதயக்கலப்பை ஏற்படுத்தாதவை கவிதையாகா,
இதய மொழியாகா !
அவை வாய் உதிர்க்கும் வெறும் வார்த்தைகளே !
கவிஞனின் இதயமொழி கேட்டு
சுவைஞனின் இதயம் விழிக்கிறது !
தானும் பேசத் துடிக்கிறது

வித்து ஒன்றுதான் !
விளைவு பலகோடி !
கவிஞனின் இதயமும் ஒன்றுதான் !
ஆனால் அது எத்தனை கோடி இதயங்களைப்
பேச வைத்து விடுகிறது !
அத்தனை இதயங்களும்—இறை இல்லங்களும்
பேசத் தொடங்கிவிடுமானால் அதன் ஆற்றல்...?
அல்ஹம்துலில்லா (ஹ்)
கவிதை ஆற்றல் மிக்கதுதான்!
ஆனால் அபாயகரமானதுங் கூட !
ஆம்,
அது......
தூங்காதவர்க்குத் தாலாட்டு !
தூங்குபவர்க்கு அதிர்வேட்டு !
அழுவோரைச் சிரிக்க வைக்கும் கிலுகிலுப்பை!
சிரிப்போரை அழவைக்கும் ஒப்பாரி!
அது!
சிந்தனையைத் தூண்டி இதயத்தில் ஒளியையும் ஊட்டும்!
திசை திருப்பிவிட்டு இதயத்தை மாயையிலும் வாட்டும் !
இறைவனை வந்தனை புரியவும் உதவும்!
அவனை நிந்தனை செய்யவும் பயன்படும்!
மண்ணையும் பொன்னாக்கும் !
பொன்னையும் மண்ணாக்கும்!
ஆம்
கவிதை பொன்னிறைந்த கருவூலம்தான்!
மறுக்கவில்லை
ஆனால் அதுவே போதையூட்டும் கள்ளுமாகும்
இதை மறந்துவிடக் கூடாது.
கவிதைக்கு உயிருண்டு; உடலுமுண்டு
கவிஞனின் குரல்—அவனது கருத்து—அதன் உயிர்!
அவ்வுயிரைத் தாங்கி நிற்கும் யாப்பு—அதன் உடல்!
கவிதையின் உயிரான பொருள்—கருத்து

புனிதமாக இருக்குமானுல்
கவிதையும் புனிதமாகிவிடும்
போதை தருவதாக இருக்குமானுல்
மனித சமுதாயத்தின் பாதையையே மாற்றிவிடும்;
எனவே
கவிதையை—ஆற்றல் மிகு கருவியை
மிகப் பொறுப்போடு பயன்படுத்தவேண்டும்!
ஆம்,
கவிஞனின் இதயம்
இறைவன் விரும்பும்
இல்லமாக இருந்துவிடுமானுல்
அதில் சுரக்கும் கவிதை
இறைநெறி காட்டும் இன்கவிதையாக
இனிக்கும், மணக்கும்!
கவிஞன்
அந்த இறையில்லத்தை
சைத்தானுக்கு வாடகைக்கு விட்டுவிடுவானுனுல்
அதில் பிறப்பது
அறிவை மயக்கிப் பண்பைச் சிதைக்கும்
பொல்லாத கள்ளாகி விடும்!
இந்த எண்ணத்தை
இதயத்தில் வளத்துக் கொண்டவன் நான்!
எனவே,
பொருளைப் பார்க்காது 'கவரில்' மயங்கும்
பூவுலகம் என்று தெரிந்தும்
ஒப்பற்ற பொருளை—
நாயகத்தின் அற்புதத்தை—
'கவிதைக் கவரில்'
போட்டுத் தந்துள்ளேன்!
இதயமொழி கேட்போரே,
'கவரில்' கருத்தழியாது
பொருளில் புனிதமடைய வேண்டுகிறேன்!
நான்

உடலை விட உயிரான உள்ளத்தை நேசிப்பவன் !
யாப்பைவிட கருத்துக்கு உயர்வு தருபவன் !
செய்யுளோசையை விட
இறையோசைக்கே மகத்துவம் கொடுப்பவன் !
ஆதலால்
கற்பனைகளில் மயங்காது
நாயகத்தின்
அற்புதங்களில் மயங்கியுள்ளேன் !
பாவணிகளில் அழகு காணுது
திருநபியின்
'வாய்மணி'களில் அழகைக் கண்டுள்ளேன் !
சொற்சுவையில் இனிமை காணுது
எம் பெருமான்
செயற் சுவையில் இனிமை கண்டுள்ளேன் !
பாவமுறைப் புறம் வைத்து
அண்ணலாரின்
வாழ்வமுறை முன் வைத்துள்ளேன் !
சுவைப்பவர்கள்,
"அஹா, எத்தனை அழகான கவிதைகள்,
அத்தனையும் இனிக்கிறது" என
புறத்தில் மயங்குவார்களே யாளுல்
அதனை எனது தோல்வியாகக் கருதுகிறேன் !
"அஹா, எத்தனை அற்புதமானது
நாயகத்தின் வாழ்க்கை !
அத்தனையும் சுவைக்கிறது" என
உள்ளகத்தை உணர்வார்களே யாளுல்
அதனையே வெற்றியாகக் கொள்வேன் !
அப்போதுதான்
நான் கவிதை பாடிய பயன் பெற்றவளுவேன் !
என் கவிதைகள்
'மணிவிளக்கில்'

ஒளி வீசியுள்ளன !
'அறமுரசில்'
முழக்கம் செய்துள்ளன !
'கண்ணீர்க் காவியத்தின் கதா பாத்திரங்கள்'
செந்நீர் சிந்த வைக்கும் சீதனத்தைச் சாடியது !
பெண் தன் சுமை தாளாது விட்ட 'பெருமூச்சு'
கண்மூடிச் சமுதாயத்தைச் சிந்திக்க வைக்கும்
'சிறுகதை' !
இவ்வாறு எத்தனையோ கவிதைகள், கதைகள்
அத்தனையும் உதிரிகள் !
'நபிகள் நாயகத்தின் மீது பாடிய பிள்ளைத் தமிழ்'—
இதுதான்
கொத்தாகப் பூத்து
நூலாக மணக்கும்
முதற் கவிதை !
தேனீ படாத பாடு பட்டேன் !
புனிதருக் கெல்லாம் புனிதரான
நபி பெருமான்மீது பாடும்போது
கற்பனை கலந்து விடக் கூடாது—
இல்லாதைச் சொல்லிவிடலாகாது என்று
பயந்து பயந்து மிக்கப்பொறுப்போடு
இறையருளால் நிறைவு செய்துள்ளேன் !
இதயத்தில் பிறந்து நூலாகி வெளிவரும் வரை
எனக்கு உறுதுணையான
நல்லோருக் கெல்லாம் அந்த
வல்லோனின் அருள் கிட்டுவதாக (ஆமீன்)
ஏதேனும் குற்றங் குறைகள் இருந்தால்
பாடிய என்னையும்
சுவைக்கின்ற உங்களையும்
படைத்துக் காக்கின்ற இறைவன்
மன்னித்து
அவன் காட்டிய நல்வழியில் நம்மைச்
செலுத்துவானாக ! (ஆமீன்)

# தலைப்பிரசவம்

அல்லாஹ் ஒருவன் ! அவன்முதல்வன் !
அகிலம் புரக்கும் தனித்தலைவன் !
அண்ணல் நபியை தன்தூதாய்
அனுப்பி வைத்த கொடையாளன் !

ஆம்.
ஏகநாயகன்-இனிய மறைதந்த-தூயவன் !
கொடையாளன்தான்,
அவனின்றி உலகில்லை.
அவனின்றி அசைவில்லை
வாழ்த்துக்கும் வணக்கத்திற்கும்
அவனே உரியவன் !
அவனின் நல்லருட் கொடையாக,
அண்ணல் பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்,

"வருந் துயர் கடக்கத்
திரு மரக் கலமாய்
மானிலந் தனக்கோர்
மணிவிளக்காய்..."

இந்த அவனியில் வந்துதித்தார்கள்! இத்தகைய பெருமை நிறைந்த பெருமானார் அவர்களை,

பூச்சிறு மழலையாகப் பாவித்து
பிள்ளைத்தமிழ் நூல் பாடியிருக்கிறேன்....

இதோ...
உங்கள் கையில் தவழ்கிறதே...
நாயகத் திருமேனியின் நல்லெழில் பாடிநிற்கும்
இந்தப் பிள்ளைத் தமிழ் நூல்

—இது,
நான் உணர்ச்சிகளோடு சங்கமித்து
'இறையருள்' என்ற இல்லத்திலே
பிரசவித்த முதற் குழந்தையாகும்

இது எனக்குத் தலைப் பிரசவம்!
தலைப் பிரசவத்தைப் பற்றி தாய்க்குலம்,
பேறினுக் கெல்லாம் பெரும் பேருகவே கருதும்
அதே மாதிரி,

"ஆதிதன் தூதாய்
பேரின்ப விளக்காய்..." வந்துதித்த
அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பேரில்
நான் எழுதிய கவிதைகள் நூலுருப் பெறுவதை

'பேறினுக் கெல்லாம்
பெரும் பேருகவே' கருதுகிறேன்.
நான் முன்பு சொன்னதுபோல
இது எனக்குத் தலைப் பிரசவம்!

என் தலைப்பிரசவத்திற்கு மருத்துவராக
தாதியராக — இன்னும்பல வகையில்
உறுதுணையாய் இருந்த,
இனிய தொண்டுள்ளங்களை

என்னுல் மறக்க இயலாது
அவர்கள் உதவி காலத்திற் கிடைத்த உதவி
அதனுல்தான்,
இதை ஞாலத்தின் மானப் பெரிதாகவே மதிக்கிறேன்

அன்பன்,
கவிஞர் மு. சண்முகம்
இளையான்குடி

# நன்றியுரை

இந்த இனிய பணியை நான் மேற்கொண்டபோது எனக்கு ஆக்கமும், ஊக்கமும் அள்ளி வழங்கிய அன்புள்ளங்களை இந்நூலின் புரவலர்களாகும். வாசகர் நேயர்களுக்கு அறிமுகப் படுத்துவதில் பெருமையடைகிறேன்.

முதலாவதாக, எம் கல்லூரி முதல்வர் அவர்கள் வள்ளல் நபி நாயகத்தின் பேரில் பிள்ளைத்தமிழ் நூல் எழுதும் போட்டியில், நானும் கலந்து கொள்கிறேன் என்று அவர்களிடம் கூறியபோது, அவர்கள் அன்புடன் இசைந்து, இப் பணி தொடர வாழ்த்துரைத்ததோடு நான் அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சமாக எழுதிக் கொடுத்த கவிதைகளைச் சுவைத்தும், சிலவற்றை மனமுவந்து திருத்தியும் கொடுத்தார்கள். அந்த இனியஉள்ளத்திற்கு நானென்ன கைம்மாறு செய்யப் போகிறேன்! அவர்களின் அன்புக்கு நான் அடிமை.

அடுத்து இந்நூல் கருவாகி, உருவாகி வளர்ந்து வரும் போதெல்லாம் ஆர்வமுடன் இதனைச் சுவைத்து இப் பணியில் முன்னேற முனைப்பும், எழுச்சியும் ஏற்படச் செய்தார். எம் கல்லூரி தமிழ்த்துணைப் பேராசிரியர் திரு தொ. பரமசிவன் அவர்கள் இவருக்கு என் குன்ற நன்றியைப் படைய விடுகிறேன்.

மூன்ருவதாக செந்தமிழ்க் கவிமணி, நாச்சி குளத்தார் ஆசுப் அவர்கள் இந்நூலின் பதிப்பாசிரியரும் இவரே. எனது கவித்திறமையை இக்கரை மட்டுமல்ல; அக்கரைச் சீமையிலும் (மலேசியா) பளிச்சிடச் செய்ய அரியதொரு வாய்ப்பளித்து மூலவராக முன் நிற்பவர் இவர்தான். இந்தப் போட்டியை உலக அளவிலான தமிழ்க் கவிஞர்கள் பங்கு கொள்ளும் அள வுக்கு நடாத்தியவர் இனிக்கினற கனவுப்பூ மலரச் செய்த இவரை என் மனதில் வைத்திருப்பேன் என்றும்.

இந் நூலைச் சுவைத்து, எடைக்கல்லிட்டு மதிப்புரை யொன்று அன்புடன் வழங்கியிருக்கிருர், புதுக்கவிதையுலக முடிசூடா மன்னர் வாணியம்பாடி அப்துல் ரகுமான் அவர்கள் என் தலைப்பிரசவ தாய்மைச் சின்னத்திற்கு முத்தமிழ் வித்தகர் இவரின் இனிய வாழ்த்துக் கிடைத்ததைக் கண்டு ஒரு தாயுள் ளம் மகிழ்கிறது—அன்பால்-மலர்கிறது.

அடுத்து, என்னைக் கவிதையுலகுக்கு முதன் முதல் அறி முகப்படுத்திய இனிய நெஞ்சமே, எனது கவிதைகள் நூலு ந வாகும் பணிக்கும் பொறுப்பேற்றது குறித்து 'தமிழ்ப்பணி' ஆசிரியர், இனிய நற்பண்பாளர் பெருங்கவிக்கோ வா.மு. சேது ராமன் அவர்களுக்கு எனது குன்று நன்றியைக் காணிக்கை யாக்குகிறேன்!

வான்வறண்டு போனலும் 'அஞ்சேல்' என்று வண்ணத் தமிழ் காக்க தான் மனம் கனிந்து எனக்குப் பரிசு நல்கி என் கவிதைப் பயிருககு நீர் வார்த்திருக்கிருர்.

'சந்ததமும் சண்முகனைச்
சிந்தையிலே கொண்ட

வள்ளல் 'ரெ'ஞ அவர்கள்.

அதுபோல் இன்னெரு கொடை வளம் மிக்க இனிய உள்ளம் இருக்கிறது. அவர்தான்

*சீரார் பெருங்குணத்துச் சீமான்! சிந்தைவாழ்*
*மீராப் பெருந்தகை அவர்கள்!*

இவ்விருவரையும் என்னுள்ளம மறக்காது என்றும் எனது இனிய அன்பையும் நன்றியையும் இவர்களுக்கு செலுத்துகிறேன்! மறறும் இந்நூல் வெளிவர உதவிய மற்ற எல்லா அன்பு நெஞ்சங்களுக்கும் எம் கல்லூரி அலுவலக நண்பர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக நான் வாசகர்களை வேண்டுவது இது என் முதல் முயற்சி. குறைகளும் நிறைகளும் இருக்கலாம். நிறை வினை எண்ணி மகிழும் அதே சமயம் குறைகளைக் கண்டு, அவற்றிற்கு சமயக் கடிவாளம் மாட்ட முயலாதீர்கள்! இந்நூலுக்குப் புரவலர்கள் நீங்களே! நான் முன்பு சொன்னது போல இது எனக்குத் தலைப்பிரசவம். என் தாய்மைச் சின்னமான இந்நூலை உங்கள் கரங்களில் தவழ விடுகிறேன். அன்போடு பேணுங்கள்! இதனால் ஒரு தாய் உள்ளம் மகிழும்— அன்பால் மலரும்!

இவன்

**கவிஞர் மு. சண்முகம்**

இளையான்குடி.

# நூலாசிரியர் அறிமுகம்

புகழ்மிக்க வரலாறுகளையெல்லாம் தன்னகத்தே தக்க வைத்துக் கொண்டிருக்கும், இராமநாதபுரம் மாவட்டம் இளையான்குடி என்னும் ஊரே கவிஞரின் சொந்த ஊராகும். தந்தையின் பெயர் மு. முனியாண்டி. தாயார் பார்வதம்மாள். 18-6-46ல் தோன்றிய இவருக்கு முப்பத்திரண்டு வயதாகிறது. இவருக்கு திருமணம் 18-6-67ல் நடைபெற்றது. இவரது வாழ்க்கைத் துணைவியார் ஞானம்பாள் என்பவராவா. இந்த நல்லினம் தம்பதிக்குப் பெண் ஒன்றும், ஆண் குழந்தைகள் மூவருமாக நன்மக்கள் நால்வர் உளர். உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்பே படித்த இவர், படிக்கும் போதே தமிழ்ச் செய்யுளின் மீது ஆர்வலராகக் காணப்பட்டார். பின் இவரது எழுத்துப் பணிக்கு உரமூட்டியவர், இவரது இனிய நண்பர், நூலகருமான கவிஞர் சேதுராசன் அவர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள் இவர் எழுதியிருப்பதோடு, பல முன்னனி பத்திரிகைகளில் அவரது கவிதைப்பூக்கள் மலர்ந்து மணம் பரப்பியிருக்கின்றன. சான்றாக, 'தமிழ்ப்பணி, எழிலோவியம்,' திட்டம் (அரசு இதழ்,) குயில், கைகாட்டி, கூட்டுறவுச்சுடர் (இராமநாதபுர மாவட்டம்) மற்றும் 'தமிழ் முரசு' 'மாலைமுரசு' 'செய்தி' 'தினமலர்' அகிய வைகளிலும் இவரது எழுத்தோவியங்கள் இடம் பெற்று மக்கள் பலரின் பாராட்டையும் வரவேற்பையும் பெற்றிருக்கின்றன.

இனிக்கும் இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் ஆர்வங் கொண்ட இவர், அண்மையில் சனவரித் திங்கள் (78) 13, 14,

15 ஆகிய நாட்களில் காயல் பட்டினத்தில் நடந்த மூன்ருவது அனைத்துலக இசுலாமியத் தமிழ்மாநாட்டையொட்டி நடத்தப் பெற்ற கட்டுரைப் போட்டியில் புகழ் பெற்ற முஸ்லீம் புலவர் கள் என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை படைத்து இருக் கிருர்! பல கவியரங்குகளில் வெற்றி முரசு கொட்டி வரும் இவர் பல நாடகங்களுக்கும் பாடல்கள் எழுதிக் கொடுத்திருக் கிருர்.

இவரின் படைப்புக்கள் யாவும் பொழுதில் உதிரும்பூவல்ல காலத்தை வெல்லக்கூடிய இனிய எழுச்சிமிக்க படைப்பு! இவரின் பணி சிறக்க இறைவன் அருள் சுரக்க வேண்டுவோ மாக!

# நபிகள் நாதர் பிள்ளைத் தமிழ்

## இறை வாழ்த்து

அன்பாளன் நீயே! அருளாளன் நீயே!
அரிய பெரியோனும் நீயே!
அடியார்கள் துயரைப் பொடியாக்கி நெஞ்சில்
ஆனந்தம் தருவது நீயே!

உன் ஆணை வழியே எமையீர்த்துச் செல்ல
உயர்தூதர் நபிகள் வந்தார்!
உயர்வான மறையின் பொருளாகி நின்றே
உலகோர்க்கு நீதி சொன்னார்!

பண்பாளர் அவர்மேல் பாசமே கொண்டே
பாமாலை சூடு கின்றேன்!
பயிரிலாப் பாலையில் நீரூற்றைப் பார்த்திட
பலவாறு புலம்பு கின்றேன்!

என்பாட்டு வீணையினை எழிலாக இசைக்கிறேன்!
இறைவனே கேட்டு வப்பாய்!
இந்நூலே செகமெங்கும் நன்னூலாய் பவனிவர
இறவாத வர மளித்தாள்!

# 1. காப்புப் பருவம்

1. ஆதியிறை ரஹ்மானுன் அன்புநதிப் புனலாகும்
   ஆனந்த மயம தாமே
 ஆறுதலைக் காணுத அடியன்மனம் உன்நாமம்
   அழைக்குங்கால் மீட்சி பெறுமே?

சோதிமய மானவனே! தொழுகைஉவந் தேற்பவனே!
   தோணிகரை சேர வருளே?
 சுட்டதுமே பாத்திரம்கை விட்டதுபோல் முயற்சியது
   தோல்வியிலே மாறல் நலமோ?

மாதவத்தால் வந்துதித்த அப்துல்லா ஆமினு
   மகனுரைக் காத்து நலமாய்!
 மாயிறையே! எஞ்ஞான்றும் நேர்வழியே தான்காட்டி
   மகிழ்வோடு காத்தருளு வாய்!

தூதர்நபி யானவரை வேதமறை சொன்னவரை
   தூயோனே காத்தருளுவாய்
 தொடுவானப் பிறையாகும் வடிவான நன்னபியை
   துணைதந்து காத்த ருளவே!

2. முற்றும் துறந்தவற் கானதுணை யாகியே
முக்திநலம் தருப வன்நீ!
மும்மல மழித்துதினம் முத்தொழில் புரிந்துமே
மூவுலகுங் காப்ப வன்நீ

பெற்றதாயன்புநீ! பேணுமெழில் தந்தைநீ!
பேதமை யகற்றுவோன் நீ!
பெருமைநீ! அருமைநீ பிணியாவும் போக்கிடும்
பேர்புகழ் மருத்து வன்நீ!

உற்றதோர் துணையும்நீ! உயிர்காக்கும் நண்பன்நீ!
உயர்மறை யளித்த வன்நீ
உம்மிநபி யானவரை செம்மையுடன் காத்துமே
உவகை நலஞ் சேர்த்திடுநீ!

கற்றறி வாளன்நீ! கனியும்நீ! காட்சிநீ!
கற்கண்டு கவிதை நீயே!
கன்னல்நபி யானதிருக் காசிமுஸ்த பாநபியைக்
கனிவோடு காத்தரு ளவே!

3. அருள்மேவும் இறையவன்நீ! அன்புடைய காவலன்நீ!
ஆதரிக்கும் சற்குருவும் நீ!
அறிஞர்வழி பாதைசெல ஆற்றல்தரும் வல்லவன்நீ!
ஆனந்த சொரூ பனும்நீ!

மருள்நீக்கும் மகத்துவம்நீ! மனதிலுறை மன்னவன்நீ!
மாண்புகள் உடைய வன்நீ!
மாநிலத்தில் முதல்மனுவை மண்ணாலே படைத்திட்ட
மாபெரிய வித்த கன்நீ!

இருள்போக்கி எமையெலாம் ஈடேற வைக்கின்ற
இணையிலாத் தலைவ னும்நீ!
ஏந்தல்நபி நாயகத்தை எங்கட்குத் தந்திட்ட
இனியதா யன்பு நீயே!

வரவேண்டும் அருள்தேக்கி வல்லோனே எம்நபிதான்
வளங்காணக் காத்தரு ளவே!
வள்ளல்ரசூல் எனுமெங்கள் உள்ளமுறை நாயகத்தை
வாஞ்சையாய் காத்தரு ளவே!

4. நீக்கமற எங்கெங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளே;
நெஞ்சம் உனை எண்ணவே
நிறைபயன் தருகின்ற உயர்தொழுகை மறவாத
நிலையென்றும்நீ அருள் கவே!

போக்குவர வற்றபரி பூரணமே! ஆனந்தப்
பொருளாக விளங்கு மிறையே!
பூதலத்தில் யாவருமே நேர்வழியில் செலப்பணித்த
புகழ்நபியைக் காத்த ருளே!

நோக்குநோக் குமது திரு அருள்நோக்கை நபிமீது
நுழைத்தருளை யேகூட்டவே
நுடவாதக்கொள்கைக்குக் கொடுவாளாய்வந்திட்டார்
நும்அன்பைப் பொழிந் தாளவே!

வாக்குமனங் காயமெலாம் வாழ்ந்திருக்கும் நல்லிறையே!
வற்றாத அருள் சொரியவே
வரவேண்டும் குருவடிவாய்! வல்லோனே! மக்கநகர்
வள்ளலைக் காத்தரு ளவே!

5. மன்றத்தில் நிறைந்தவனே! மனம்வாழும் நாயகனே!
மறைதந்த புகழ் மன்னனே!
மழைபோல வான்கருணை அடியார்க்குத் தருகின்ற
மணியான அருள் மெய்யனே!

சிந்தைக்கு கந்தவனே! சித்திநலம் தருபவனே!
செகமாளும் தனிநா தனே!
தேனூறும் சிறுவில் தானூறி இனிப்பவனே!
தேடற் கரிய பொருளே!

சந்தத் திருப்புகழில் சந்தனமாய் மணப்பவனே!
தர்மநிதி தயா பரனே!
தமியேனின் துயர்களைச் சருகாகச் செய்கின்ற
சன்மார்க்க குண சீலனே!

வந்துதவ வேண்டினன்; வல்லவனே! நல்லவனே!
வரமருளும் மூல வடிவே!
வரிசைநபி யென்றுகும் எம்நெஞ்சில் வாழ்நபியை
வளமோடு காத்தரு ளவே!

## வேறு

6. சொல்லில் அமையாத சொல்லி முடியாத
தோன்றாத் துணையாகுவாய்!
சொந்தம் பிரியாத தந்தை வடிவாக
இன்பம் நிலை நாட்டுவாய்!

கல்லில் இருக்கின்ற தேரையது வாழ
கருணை முகங் காட்டுவாய்!
கவலைப் பிணிமாளத் தொழுகை தினங்கொண்டால்
கனிந்தே நலங் கூட்டுவாய்!

எள்ளில் எண்ணெய்யென இருக்கும் பெரியோனே
எண்ணமதை நீஅறிகு வாய்!
இதய மாளிகையில் சுவன ஒளிசேர
இனிய துணை செய்குவாய்!

நெல்லில் அரிசியென நிறையும் நித்திலமே!
நேயம் எமக் காக்குவாய்!
நிறைந்த குணம்கொண்ட நாதர் தமைக்காத்தே
நெஞ்சில் கனி தேக்குவாய்!

7. அஞ்ஞான இருளில்யாம் அகப்பட்டி டாமலே
அறிவுச் சுட ரேற்றுவாய்!
அலையாகத் துயர்வரினும் குலையாத நெஞ்சுறும்
ஆண்மைத் திறமூட் டுவாய்!

மெஞ்ஞான தேசிகனே! மிக்குயர்ந்த போதகனே!
மேன்மை நலங் கூட்டுவாய்!
மின்னல்போல் வாழ்க்கையில் இன்னல்கூடாமலே
மிகப் பரிவு தான்காட்டுவாய்!

விஞ்ஞானம் போகின்ற வேகத்தில் உன்நினைவே
வீழாமல் காத்து நிற்பாய்!
விதிமுடியும் வேளையிலுன் திருநாமம் சொல்கின்ற
விதமாக அருள் காட்டுவாய்!

எஞ்ஞான்றும் அணையாத இசுலாத்தின் ஒளித்தீபம்
ஏற்றிட்ட நபிநா தரை!
ஏற்றமுடன் காத்தருள வேண்டியே நின்பாலும்
இறைஞ்சினன், கருணைகாட்டே!

8. எத்தனை துன்பங்கள் எதிர்வந்த போதிலும்
என்றும் உனை மறவேன்!
எல்லாம் உனையல்லால் வேறில்லை யெனும் உண்மை
எளியேன் நானறிவேன்!

சித்தமதில் ஈமானைத் தேக்கிடுவாய் அல்லாஹ்வே!
சிந்தை களி கொள்ளுவேன்!
சினம்நேரும் போதெல்லாம் கணநேரம் உன்நினைவுச்
சிந்தனையைத்தா விள்ளுவேன்!

அத்தனும் அன்னையாய்! ஆள்கின்ற குருவெனக்
கண்பாகக் காணுகின்றேன்!
அணையாத ஒளித்தீபம் அகமேந்தி வந்திட்ட
அண்ணலைப் பாடுகின்றேன்!

உத்தம நபித்தூதை தத்துவ மணிச்சுடரை
உவகையாய் காந்தருளவே!
உலகாளும் நாயகனே! மறைதந்த தூயவனே!
உரியநபி காத்தருளவே!

9. செப்பரிய இசுலாத்தின் சீரார்ந்த கொள்கையினைச்
சிந்தையினில் தேக்கி வைத்தார்!
செல்லுங்கள் மறைவழியே சேருங்கள் நல்வழியே!
எனநீதி உரைத்து நின்றார்!

தைப்பதொரு முள்ளாகத் தடைகள்பல வந்தாலும்
தயங்காமல் சென்று முன்னே
தலையாய இசுலாத்தின் தத்துவம் பரப்பியே
சான்றாக வாழ்ந்து நின்றார்!

ஒப்பில்லா புகழ்ச் 'சீரு' உலகிற்கு அளிக்கவே
உமர்மனத் தேறிநின்றார்
ஓர்நாளும் மறவாமல் பேரிறையுன் நினைவாலே
உயர்தொழுகை செய்து நின்றார்!

வைப்பதொரு புகழெனும் எம்நபியே! மனங்கொண்டு
மாயிறையுன் அடியில் வைத்தார்!
வள்ளல்நபி நாயகத்தை உள்ளங்கவ ரோவியத்தை
வளமோடு காத்தருளவே!

10. சிந்தனையில் வந்துலவும் தேன்மறையில் சுடரேற்றி
தீன்மார்க்கம் காக்க வந்தார்!
செகந்தன்னில் ஓர்தெய்வ வணக்கத்தை வலியுறுத்தி
சீர்திருத்தங் கூறி நின்றார்!

சந்ததமும் அன்புநெறி தழையவரும் இசுலாத்தின்
தலைவாசல் காத்துநின்றார்
தரணிக்கோர் சான்றாக எம்நபியே வாழ்ந்தேதான்
தருவாகப் பயனளித்தார்!

சொந்தமென நம்மோடு சோதரப் பான்மையொடு
துணையாக வாழ்ந்திருந்தார்!
தூதர்நபி நாதர்தமை தூயிறையே! என்றென்றும்
துணைதந்து காத்தருளுவாய்!

எந்தையிறை நாயகனே! ஏந்தல்நபி நாயகத்தை
இனிதாகக் காத்தருளுவாய்
எல்லாம் அறிந்தவனே! வல்ல இறை நாயகனே!
எம்நபியைக் காத்தருளவே!

# 2. செங்கீரைப் பருவம்

## வேறு

1. சோலைகள் சூழ்ந்த சுந்தர மதீனா
துலங்கும் மன்னவரே!
தூக்கமில் வானவர் போற்றிப் புகழ்ந்திடக்
காரணம் ஆனவரே!

பாலையில் உள்ள பதிநகர் மக்கா
பாங்குடன் வாழ்ந்தவரே!
பத்தரை மாற்றுப் பசும் பொன்னாக
பாரினில் மிளிர்ந்தவரே!

பால்மதியோடு செங்கதிர் தனையும்
பரிந்தே தந்தாலும்
பற்றிய கொள்கையை விட்டுவிடோமெனப்
பகர்ந்து நின்றவரே!

ஞாலமே சிறக்க நன்மையே கொழிக்க
நானிலம் வாழ்ந்தவரே!
நாயனின் தூதே! ரசூலுல் லாவே!
ஆடுவீர் செங்கீரை!

2. அறநெறி வழுவாத் தவத்துறை வேந்தே!
அருமறை யுட் பொருளே!
அகமதில் நிறைந்த 'அகமது' வென்னும்
அண்ணல் நபி யரசே!

நிறைமதி தன்னை தரையினுக் களைத்த
நித்தில மானவரே!
நேர்மையின் உருவே! நீணிலம் உய்யவே
நேய மளித்தவரே!

குறைவிலாக் குணங்கள் நிறையெனக் கொண்ட
கோமான் நபி நீ(வி)ரே!
குபிரிருள் நீக்க குவலயம் வந்த
குணமிகு திருமணியே

மருவிலா தெழுந்த முழுமதிச் சுடரே!
ஆடுக செங்கீரை!
மாநிலந் தனக்கோர் மணிவிளக் கானீர்
ஆடுக செங்கீரை!

3. பரகதி யுணர்த்தும் அருள்தயா பரரே!
பழவினை யறுப்பவரே!
பவக்கடல் கடக்க திருமரக் கலமாய்
பாரினில் உதித்தவரே!

உரத்துடன் நெஞ்சில் உறுதியும் கொண்ட
உத்தம திருத்தூதே!
உயர் கலிமாவைத் தினமுரைக் கருளும்
உவமையி லான் திருவே!

சிறப்புடன் உமறு செந்தமிழ்ச் சீரு
செப்பிட வைத்தவரே!
தேன்தமிழ் நூலாம் முதுமொழி மாலை
திருவுறச் செய்தவரே!

வரமதை தினமும் வழங்கிடும் இறையோன்
வாழ்த்தைப் பெற்றவரே!
வள்ளல் ரசூலுல்லா வாஞ்சையுடன்தான்
ஆடுவீர் செங்கீரை!

4. தேன்மறை தந்த மாயிறை யோனின்
செல்வக் களஞ்சியமே!
தீமைகள் அகல என்விழி யன்பாய்
தேடிடும் கற்பகமே!

நானில மாந்தர் நல்வழி செல்ல
நல்லுரை தந்தவரே!
நாயனின் அருளைப் பெற்றிட லிங்கே
நல்லதோர் வழித் துணையே!

பானில வாழ்வே! பாவக வாழ்வே!
பதி மதீனு வாழ்வே!
பரிவுடன் ஏழை வருதுயர் தீர்க்கும்
பார் புகழ் நபி நீ(வி)ரே!

வான் மழையாக வந்தநல் அரசே!
ஆடுக செங்கீரை!
வானவர் ஜிப்ரயீல் போற்றிய தூதே!
ஆடுக செங்கீரை!

## வேறு

5. ஈரிதழ் திறக்கும் நூலகமே!
இறையோ னளித்த காவியமே!
இனிக்கும் நினைவால் எம்நெஞ்சில்
என்றும் வாழும் தாயகமே!

சீரறி வாளர் அப்துல்லா
சிந்தை மகிழும் ஓவியமே
சிரிக்கும் மலராய் ஆமீனு
சேர்த்தே அணைத்த அற்புதமே!

காரிருள் கிழிக்கும் கதிரொளியே!
கருத்தினைக் கவரும் புதுநிலவே!
கைத்தலம் பற்றிக் கதீஜாவை
களிகொள வைத்த கற்பகமே!

பேறினுக் கெல்லாம் பெரும்பேறே!
பிணியணு காமல் காப்பீரே!
பேதமை யகற்றி பேரன்பாய்
ஆடுக செங்கோ செங்கீரை!

## வேறு

6. ஆதிமணி ஜோதிமணி அன்புநவ நீதமணி
அண்ணல்நபி தூதர்மணியே!
அப்துல்லா ஆமீனு அகமெல்லாம் நிறைந்திட்ட
அழகொளிரும் மோனமணியே!

வேதமணி, நாதமணி வெற்றிதரும் கீதமணி,
வேந்தர்நபி போதர்மணியே!
வினையகல வந்திட்ட தினைமாவின் தித்திப்பே!
வேதம்புகழ் ஞானமணியே!

தூதரிலே தங்கமணி! சுடராக மின்னும் மணி
தூயநபி யான மணியே!
தொல்லுலகில் 'நீள்'மணியைத் தோற்றுவித்த
கண்மணியே!
துணைசெய்யும் அன்பு மணியே!

காதலுடன் செங்கீரை ஆட அழைக்கின்றேனே!
கனிவாக நபி நீ(வி)ரே!
ஹக்கனருள் பெற்றவரே! பக்கத்துணை யிருப்பவரே!
செங்கீரை யாடி யருள்வீர்!

## வேறு

7. பூவே! பூவின் நறுமணமே!
பூவில் ஊறும் சுவைத்தேனே!
பொங்கும் கடலில் உதித்தெழுந்த
புனிதம் மிக்க தெள்ளமுதே!

காவே! காவில் உலவிவரும்
கலைமான் கொண்ட கஸ்தூரி
கமழும் மேனி உடையவரே!
கண்ணூர் நபியே! கற்கண்டே!

பாவே! பாவின் உட்பொருளே!
படிக்கு மின்பத் திருப்புகழே!
பரிவாய் வந்த முகம்மதுவே
ஆடுக செங்கோ செங்கீரை!

தேவே! தேவர்க்(கு) இடரோட்டும்
திருவே! செங்கோ செங்கீரை!
சிந்தை மகிழ அழைக்கின்றேன்!
தீங்கனி ஆடுக செங்கீரை!

8. இறையோன் தூதே! நாயகமே!
இனிய பண்பின் வாழ்வகமே!
எந்நில மனைத்தும் தீன்கொடியை
ஏற்றிக் காத்த தத்துவமே!

மறைமா மலரின் நறுமணமே!
மனதிற் கிசைந்த பரிமளமே!
மக்கா வாழ்ந்த சோபிதமே!
மாண்பிற் கெல்லாம் தாயகமே!

பிறைவான் போன்ற மதிமுகமே!
பேசற் கரிய மகத்துவமே!
பிள்ளைத் தமிழின் ஓவியமே!
பெருமானாரே! நாயகமே!

அறிவிற் கறிவே! அற்புதமே!
அப்துல்லாவின் கற்பகமே!
அன்னை ஆமினு வீன்ற
அரசே ஆடுக செங்கீரை!

## வேறு

9. பொய்யுடைய மார்க்கமெலாம் போயொழிய
வையமிதில்
புனிதமுடன் நபி அவதரித்தீர்!
பொல்லாங்கை வேரறுத்து புகழ்தீனின் நெறியுரைத்து
போதனைகள்பல உரைத்தீர்!

மெய்யுடைய சன்மார்க்கம் மேதினியில் தழைத்திடவே
மிக நீங்கள் பாடுபட்டீர்!
மேன்மையுற வேண்டுமெனில் 'உழையுங்கள்'
என்றேதான்
மிக்குயர் குரல் கொடுத்தீர்!

தையலினை மணங்கொள்ள சீதனத்தைத் தடுமென்றீர்
தருமம் நிலை காண வைத்தீர்!
தமதருமை மகளார்க்கு 'மஹர்' தந்து மணமுடித்தே
சான்றாக வாழ்ந்து நின்றீர்!

கொய்யுமெழில் நறுமலரே! குறைவில்லா முழுமதியே!
செங்கீரை யாடியருள்வீர்!
கொடைவளம் மிக்கதோர் கடல்மனத் தரசே!
செங்கீரை யாடியருள்வீர்!

## வேறு

10. முன்னவன் இறைபோன் முதலோன் அருளில்
மூழ்கித் திளைத்தவரே!
முந்திய நபிமார் வேதமி றங்கிய
முடிவில் நின்றவரே!

பெண்களின் திலகம் பாத்திமா தன்னைப்
பிள்ளையாய்ப் பெற்றவரே!
பெருவர மருளும் குருவடி வாகும்
பேறினைப் பெற்றவரே!

பொன்னொளிர்சோலை பொய்கை நிறைந்த
புகழ் மதீனு வரசே!
புலியலி தன்னைப் மருகராய்ப் பெற்ற
பொற்புடை யானவரே!

கன்னல் தமிழில் கவிவாய் அழைத்தேன்!
ஆடுக செங்கீரை!
கதீஜா நாயகி கரம்பிடித் தோரே!
ஆடுக செங்கீரை!

# 3. தாலப் பருவம்

## வேறு

1. காய்ச்சி வடித்த பசும்பாலே!
கனியே! செந்தேன் கற்கண்டே!
கருணை நபியே! மஹ்மூதே!
கரும்பே! தாலோ தாலேலா!

தாய்க்கும் மேலாய் பரிவூட்டும்
தாஹா நபியே! தாலேலோ!
தவழ்வீர் தங்கத் தொட்டிலிலே
தலைவா! தாலோ தாலேலோ!

பூக்கும் மலரே! புண்ணியரே!
புகழே நிறைந்த கண்ணியரே!
பொறுமைக் கடலே! தீமைகள்தாம்
புரிவோர் தமையும் வருத்தாது

காக்கும் மனமே கொண்டவரே!
கனிவாய்ப் பேசும் இனியவரே!
கலைமறை முகம்மது காரணரே!
கண்ணே! தாலோ தாலேலோ!

2. உச்சி குளிர நீராட்டி
உவகை பொங்க உடையுடுத்தி
ஒளிரும் பவளத் திருவாயில்
உங்கள் அன்னை முத்திட்டே

இச்சை பொங்க மடியிருத்தி
இல்லந் தன்னில் மறைவாக
ஏந்தல் நபியே! உமக்கன்பாய்
இனிதா யவிமா அமுதூட்ட

அச்சமி லாது வளர்ந்தவரே!
அரிமாவாக வாழ்ந்தவரே!
அன்பால் நெஞ்சப் பிணிதீர்க்கும்
அருமை நபியே! தாலேலோ!

இச்சகந் தன்னில் இசுலாத்தை
எதிர்ப்பைக் கண்டும் அஞ்சாமல்
ஏற்றுப் போற்றிக் காத்தவரே!
எங்கள் நபியே! தாலேலோ!

3. பொன்னூர் நபியே! புகழ் நபியே!
புதுமைக் கருத்து நெல்விளையும்
நன்செய் நிலமே! நாயகமே!
நாடிய பேர்க்குத் தயாகமே!

கண்ணூர் நபியே! கவின்நபியே!
கவலையகற்ற வரும் நபியே!
காசில் அன்னை ஆமீனா
கருவே! தாலோ தாலேலோ!

தண்ணார் பொய்கைத் தாமரையே!
தமிழே! அமுதே! தத்துவமே!
சந்தம் அளிக்கும் நன்னபியே!
தருவே! தாலோ தாலேலோ!

விண்ணோர் போற்றும் வித்தகரே!
வேதநபியே! உத்தமரே!
வேதமீந்த திருத்தூதே!
வேந்தே! தாலோ! தாலேலோ!

4. + தீனம் மிக்க திருநபியே!
சீலம் பூக்கும் சிந்தையரே!
தெய்வத் தூதே! மஹ்மூதே!
திருவே! தாலோ தாலேலோ!

○ நானம் கமழும் திருமேனி
நலமே நிறைந்த பொன்மேனி!
நன்னகர் மக்காப் பதியொளிரும்
நந்தா விளக்கே! குணக்குன்றே!

வானும் மண்ணும் நிறைந்திட்ட
வல்லோன் இனிதாய் ஈந்திட்ட
வளமார் மறையின் வழிசெல்ல
வாஞ்சை யோடு தீனோரை

கானமிசைத்தே அழைத்திட்ட
கவிஞர் குயிலே! தாலேலோ!
கன்னல் சுவையே தாலேலோ!
காத்தமுன் நபியே! தாலேலோ!

---

+தீனம் — எளிமை. ○ நானம் — கஸ்தூரி.

3. ஒன்றே தேவன்! குலமொன்றும்!
உண்மை உரைத்த திருத்தூதே!
உயரிய வேதம் புர்கானை
உவந்தே தந்த மஹ்ழூதே!

நன்றே செய்யும் நாயகமே!
நமன்தான் வந்தே யணுகுங்கால்
நாவில் உயர்ந்த கலிமாவை
நவில வைக்கும் நாயகமே!

குன்றே எழிலார் குணம்வாழும்
கோவே! ஏழைக் குறைதீர்க்கும்
குருவே! தாலோ தாலேலோ!
கொள்கைச் சுடரே! தாலேலோ!

இன்றே வந்திங் கெமையாளும்
எழிலே! தாலோ தாலேலோ!
ஏந்தல் நபியே தாலேலோ!
எம்மிரு விழியே தாலேலோ!

6. ஏழைக் குடிசை நிலவொன்றை
இனிதாய் தூக்கி நீராட்டி
எழிலார் உடையும் அணிவித்தே
இதயம் மலர்ந்த நன்நபியே!

வாழைக் கன்றே! நீர்வயலே!
வண்ணத் தமிழால் காசிமொலி
வருந்தி அழைக்க விருந்தாக
வந்தீர் சந்த லயத்துடனே!

பாலைச் சிரிப்பே! பனிமலரே!
பவமே யறுக்கும் விரிகதிரே
பாகாம் வெல்லத் தமிழாலே
பரிந்தே உம்மை அழைக்குங்கால்

நாளைப் பொழுதை ஒளியாக்கி
நலமே இறைக்கும் திருத்தூதே!
நாணய மிக்கத் திருநபியே!
தாலோ தாலோ தாலேலோ!

7. ஒருமுறை உம்மைக் கண்டாலே
உவகையுஞ் சேரும்; நெஞ்சகத்தில்
உறையிருள் விலகும்; பிணியாவும்
உடனே மாறி நலமாகும்!

செருபகை சிதையும்; செல்வந்தான்
சேர்ந்திடும் எழிலாய்; சினங்கூட
தீர்ந்திடும்; தீவினை அடராது!
தேகம் சிறந்து பூரிக்கும்!

வறுமைகள் தீரும்; நோய்கூட
மாறிப் போகும்: மனக்கவலை
பனியாய் மறையும்; 'முகமதே'னப்
பகன்றல் போதும் இன்பந்தான்

வருளையே புரியும்; வளஞ் சேர்க்கும்
வல்வினை யாவும் மண்மூடும்!
வரிசை நபியே! முகம்மதுவே!
வடிவே தாலோ தாலேலோ!

8. பெரிய தந்தை அபுத்தாலிப்
பிரியத் துள்ள நறுமலரே!
பேசும் நிலவே! பெட்டகமே!
பேறினுக் கெல்லாம் பெரும்பேறே!

அரிய நீதி பலவற்றை
அவனிக்கீந்த அற்புதமே!
அன்றும் இன்றும் என்றென்றும்
அகமே நிறைந்த முகம்மதுவே!

விரியும் சுடரே! விண்மதியே!
வெங்குபிர் போக்கும் உத்தமரே!
விளக்கில் விளக்கை விளக்கத்தான்
விளக்க வந்த மணி விளக்கே!

சிரிக்கும் அழகுச் சித்திரமே!
தேனே! பாலே! தாலேலோ!
திருமதீ னாவின் அழகொளியாய்
திகழும் நபியே! தாலேலோ!

9. உடன்றனிக் கலிமா விரலுயர்த்தி
உலகில் உதித்த உத்தமரே!
உயர்நெறிக் கொள்கை இசுலாத்தை
உறுபகைக் கெதிராய் வளர்த்தவரே!

தடைபல கண்டும் அஞ்சாமல்
தாரணிக் கெல்லாம் உயர்நீதி
சாற்றிய தூதே! சரித்திரத்தின்
சரித்திரமாக வாழ்ந்தவரே!

கொடைவள மிக்கக் கார்முகிலே!
கொள்கைக் குன்றே! எம்கோவே!
குவலயம் காத்த நறுமணியே!
கோதறப் பழுத்த மாங்கனியே!

தொட(ர்)வினை யோடச் செய்கின்ற
தூதர் முகம்மது பேரொளியே!
தொழுகையின் பயனே! அருந்துணையே!
துரையே! தாலோ தாலேலோ!

10. வாழும் நெறியை உலகிற்கே
வாழ்ந்து காட்டி மெய்ப்பித்த
வள்ளல் மக்கா பதிவாழ்ந்த
வாழ்வே! காசிம் குலத்தோன்றல்

பாழும் மனத்தான் அக்கணெனும்
பாவிய தாஞேன் நும்பெருமை
பாரில் அறிய மாட்டாமல்
பலவாருக முகஞ் சுழித்து

கோழையவனே இகழ்ந்திட்டான்!
குறிப்பை யறிந்து நபிநீங்கள்
கொடியோன் செய்த பிழை பொறுத்துக்
கொண்டீர்! என்னே! பண்புடைமை!

ஆளும் இறையோன் அன்பிற்குள்
அன்றே நிறைந்தீர் தாலேலோ!
அறிவாய் அழகாய் வாழ்ந்திட்ட
அன்பே! தாலோ தாலேலோ!

# 4. சப்பாணிப் பருவம்

## வேறு

1\. இறையருள் கொண்ட திருமறை வழியே
ஏந்தல் நடந்தீரே !
இன்னு செய்தார்க் கினியவை செய்தே
இதயங் கவர்ந்தீரே !

நிறைகுணம் கொண்ட நித்தில ஒளியே !
நேயமளிப்பவரே !
நேர்மையின் உருவே ! வாய்மையின் வடிவே !
நெல்விளை மணிவயலே !

திருவினுந் திருவாய் இலங்குமெய் யிறையின்
சிந்தையில் வாழ்பவரே !
தீன்கொடி நாட்டி வான்புகழ் கண்ட
தெய்வத் திருத்தூதே !

குருவினுங் குருவே இறையவன் கொடையே !
கொட்டுக சப்பாணி !
கொள்கையிற் சிறந்த கோமான் நபியே !
கொட்டுக சப்பாணி !

2. பச்சையின் கனிகள் பாலுந் தேனும்
இனியநெய் வெள்ளரிக்காய்
இறைச்சியில் ஆடு, கோழி, முயலை
ஏற்பீர் நல்லுணவாய் !

பேச்சிலும் மூச்சிலும் பேரிசு லாத்தைப்
பேணிக் காத்தவரே !
பெரியவன் தூதே ! பெருமைகள் நிறைந்த
பேணும் புத்தகமே!

நாச்சிகு ளத்தொரு ஏழைப் புலவன்
நாளும் உவந்தேத்தும்
நானிலம் உய்ய நல்லுரை தந்த
நன்னபி நாயகமே !

காய்ச்சிய பாலின் தனிச் சுவையாகக்
கருத்தில் இனிப்பவரே !
கன்னல் நபியே ! கனிவாய் நீங்கள்
கொட்டுக சப்பாணி !

3. மாநகர் மக்கா தேனொளி விரிப்பே !
மங்கிடாப் புகழ் விளக்கே !
மறையினை இறைவன் பெயரால் ஓதி
மாண்புகள் பெற்றவரே !

நாதய மிக்க நல்லெழில் தூதே !
நாயனின் பெரும் பரிசே !
நானிய வாழ்வே ஒளிமய மாக
நலந் தருந் தீனரசே அரசே !

பாவிலே வைத்துப் பாங்குடன் பாடப்
பரிவுடன் வருவீரே !
பரமனின் இதயப் பாத்தியில் மலர்ந்த
பண்புயர் ரோஜாவே !

ஆவலாய் அழைத்தேன் ! வருவீர் நபியே !
அன்பாய் சப்பாணி
அவனியில் படர்ந்த குபிரிருள் நீங்க
கொட்டுக சப்பாணி !

4. வேதம் இறங்கிய நால்வருக்குள்ளே
வெற்றியைக் கண்டவரே !
விழிகளில் நிறையும் கருணையின் வடிவே !
விரிகடல் மனத்தரசே !

சாதனை புரிந்த மாதவ நபியே !
சரித்திர மானவரே !
தாழ்மையில் நிமிர்ந்து ஏழ்மையில் மிளிர்ந்து
தத்துவம் உரைத்தவரே !

காதம் மணத்திடும் கஸ்தூரி வாசம்
கமழும் மேனியரே !
கவிதை மணக்க நல்லுரை யாற்றும்
காருண்ய நபி நீ (வி) ரே !

ஓதமணக்கும் உயர்மறைக் கனியின்
ஒழுகு நறுஞ்சாறே !
உத்தம நபியே ! தத்துவச் சுடரே !
கொட்டுக சப்பாணி !

5. ஒருநாள் இரவில் ஒளிவான் கடந்தே
இறையைக் கண்டவரே !
ஒருநாள் தொழுகை ஐவேளை யாய்
உணர்த்தி நின்றவரே !

கொடுவாள் ஏந்தும் கொலைஞரி டத்தும்
கொண்டீர் அன்புடமை !
கோமான் நபியே ! பூமான் நபியே !
கொட்டுக சப்பாணி !

தேடிடும் செல்வம் நாற்பதில் ஒன்றை
'ஜக்காத்' செய்யென்று
வாடிடும் ஏழை எளியவர்க் கெல்லாம்
வகையே செய்து (உ) வந்தீர் !

பாடிடும் குயிலே ! பழகிடும் கிளியே !
பாரிலுயர் நபியே !
பரமனின் கொடையே ! அருமையாய் நீங்கள்
கொட்டுவீர் சப்பாணி !

6. அமரருக் கரசர் ஜிப்ரயீல் பிஞ்சில்
அன்புடன் கையேந்தி
அழகொளிர் சுவனப்பதியினிற் சேர்த்தே
அழகுடன் நீராட்டி

இமைகளில் நல்ல மையினை யெழுதி
எண்ணெயும் தலைக்கிட்டே
இனியநல் உணவும் உவப்பா யூட்டி
இதயம் மகிழ்ந்தாரே!

'உமதிறை யோனின் திருப்பே ராலே
ஓதுக' என்றென்னும்
உயர்வறி தன்னை உவப்பா யேற்றீர்
உம்மி நபி நீ(வி)ரே!

எமதரும் நெஞ்சில் இன்னொளி பரப்பி
ஏற்றம் தருபவரே!
இந்நிலம் உய்ய இதமுடன் நீங்கள்
கொட்டுவீர் சப்பாணி!

7. கல்லது கொண்டு தாக்கிய பேர்க்கும்
கருணை புரிந்தீரே!
கடுஞ்சினங் கொண்ட பகைவரி டத்தும்
கனிவை வளர்த்தீரே!

சொல்வது போல செயல்களைச் செய்தே
இரண்டும் ஒன்றாக
சுடரீசு லாத்தைக் காத்து வளர்த்தீர்
சுருதிக் கொப்பாக

வல்லவ னிறையோன் வணக்கத்திற் குரியோன்
வழங்கிய கற்பகமே!
வருமிடர் கடக்க திருமரக் கலமாய்
வந்த அற்புதமே!

சில்லென வீசும் மென்பூங் காற்றே!
தீன்மணம் தந்தவரே!
சிந்தையில் ஒளிரும் நந்தா விளக்கே!
கொட்டுக சப்பாணி!

8. கலிமா தொழுகை நோன்போடு ஜக்காத்
ஹஜ்ஜொடு ஐந்தாகும்
கண்ணெனும் இஸ்லாம் கவின்மாளிகையைக்
கட்டிக் காத்தவரே!

அலிமாத் தாயார் மடியினில் வளர்ந்த
அழகார் ஓவியமே!
அகிலம் புரக்கும் வல்லவன் யாத்த
அருள்சேர் காவியமே!

தொழுவீர் பாவந் தொலைந்திடு மென்றே
சூளுரை செய்தவரே!
தூதர் முகம்மது எங்கள் நபியே!
சோபித மானவரே!

எழில்இறை கஃபா ஏற்றங் காண
என்றும் உழைத்தவரே!
என்னக மெங்கும் பொன்னொளி யானீர்
கொட்டுவீர் சப்பாணி!

## வேறு

9. பொறுமைக் கடலாய் புவியின்மீதில்
புகழாய் வாழ்ந்த புண்ணியரே!
போதம் மணக்கும் அறவாழ்வில்
புதுமைகள் பலவும் செய்தவரே!

கருணை மணக்கும் பொது நோக்கில்
கனிவு மணக்க வாழ்ந்தவரே!
கண்ணூர் நபியே! மஹ்மூதே!
கனிவாய் கொட்டுவீர் சப்பாணி!

பெருமான் பிறந்தீர் ! பிறந்ததுமே
பேரொளி பிறந்தது உலகினிலே
பேதமைய கன்றது வாழ்க்கை யெல்லாம்
பிறைக் கொடியாக உயர்ந்ததுவே !

அருமைக் கதீஜா கரம் பிடித்த
அல் அமீனே ! எம் நாயகமே !
அழகாய் கொட்டுவீர் சப்பாணி !
அன்பாய் கொட்டுவீர் சப்பாணி !

10. எதிர்ப்போர் கணைகட் கஞ்சாமல்
எண்ணிய தேற்ற திண்ணியரே !
உதிர்க்கும் ஒவ்வொரு சொல்லாரம் !
உளமே நிறையும் முத்தாரம் !

கதிர்ச்செந் நெல்லே ! கற்பகமே !
கண்மணி யாகும் நாயகமே
மதித்திட வொண்ணு மணிமுத்தே !
மாண்பாய் கொட்டுவீர் சப்பாணி !

# 5. முத்தப் பருவம்

1. கரும்பின் பாகும் கற்கண்டும்
கனியும் தேனும் சுவைக்காது!
கண்ணூர் நபியே! மஹ்மூதே!
கனிவாய் நீங்கள் முத்திட்டால்

விருந்தாய்ச் சுவைக்கும்; உள்ளத்தின்
வேட்கை தணியும்; விழிமலரும்!
விளையா நிலத்தில் கதிர்முற்றி
விளைவதைப் பார்க்கும் சுகமிருக்கும்!

திருவே! அன்னை ஆமினாவின்
சிந்தை கவர்ந்த ஓவியமே!
திகழும் பவளச் செவ்வாயின்
திருசேர் முத்தம் தந்தருள

வருவீர் வரிசை நபியரசே!
வல்லோன் ஈந்த பெரும் பரிசே!
வந்தே நபியே முத்திடுவீர்!
வள்ளல் நபியே முத்திடுவீர்!

2. பொன்னும் பொருளும் நான்வேண்டேன்!
புகழைக் கூட நான்வேண்டேன் !
புவியே ஆளும் நிலைவரினும்
பொழுதும் சிறிதே வேண்டேன் நான்!

மண்ணில் மாந்தர் மதியினையும்
மயங்கச் செய்யும் பூங்காதல்
மகிழ்வாய் வரினும் நான் வேண்டேன்
மனதைக் கவர பாவாணர்

பண்ணை இசைத்தும் விரும்பேன் நான்!
பாற்சுவை யாக நபிநீங்கள்
பக்கம் வந்தே முத்தாடும்
பாங்கையன்றோ! பெரிதுவப்பேன்!

பொன்னின் வார்ப்பாய் என்கன்னம்
பொலிய முத்தம் தந்திடுவீர்!
புவியே போற்றும் நபியரசே!
புகழ்சேர் முத்தம் தந்திடுவீர்!

3. அலைமுத் தெறியும் கடல்விளையும்
அணிமுத்தினுக்கு விலை யுண்டே!
அகிற் சந்தனம் ஜவ்வாதுவகை
அறிவோம் அதற்கும் விலையுண்டே!

மலைவிட் டொழுகும் அருவிமகள்
மங்கை நதியாம் தங்கையொரு
மாண்பார் கூந்தல் தனில் சூடும்
மலர்க்கும் இங்கே விலையுண்டே!

கலைபட் டொளிரும் கவிவாணர்
கவிதை கூட விலைபெற்றே
கருத்தைக் கவரும்; அரங்கேறும்!
காற்றில் மழையில் மறைந்தேகும்!

விலைமதிப் பில்லா தீன்முத்தே!
விரைந்தே முத்தம் தந்திடுவீர்!
வேதநபியே! முத்திடுவீர்!
வேட்கை தணிய முத்திடுவீர்!

## வேறு

4. பால்வடியும் வெள்ளை முகம்! பார்ப்பதற்கோ
இன்பம் வரும்!
பசி தீர்க்கும் உங்கள் முகமே!
பாருலக மாந்தர்களும் ஓர்முகமாய் போற்றி செயப்
பார்ப்பதற் கரிய முகமே!

நூல்வடிக்க கற்பனைதாம் நூலிழையாய் தொடர்ந்துவர
நூறுநிலா உங்கள் முகமே
நொந்தவுளம் கண்டதுமே சந்ததமும் இன்பமுற
நோய் தீர்க்கும் அன்பு முகமே!

சோலை மலர் வனப்பாமோ? தூயநபி உங்கள் முகம்
சோதியொளிர் முகமாகுமே
தூதர்நபி உங்கள்முகம் ஆதரவு காட்டும் முகம்
சொன்னாலும் மாற்ற மாமோ?

பாலமுதம் ஒழுகிவரும் பவளவாய் முத்தங்கள்
பரிசாகத் தந்துவப்பீர்!
பாட்டுக்கும் என்கவிதை ஏட்டுக்கும் தலைமைசால்
பண்பாளர் முத்தமருள்வீர்:

## வேறு

5. சீரார் நபியே! திருமணியே!
தீன்குலம் ஒளிர வரும் மணியே!
திகழும் கொவ்வைச் செவ்வாயின்
திருசேர் முத்தம் தந்திடவே!

வாரீர்! வாரீர்! அழைக்கின்றேன்!
வாஞ்சை யாக அழைக்கின்றேன்!
வறண்ட பாலையில் நீரூற
வளஞ்சேர் முத்தம் தந்திடுவீர்!

ஊரார் வியக்க உளம்வியக்க
ஒளிசேர் முத்தம் தந்திடுவீர்!
உத்தம நபியே! திருத்தூதே!
உவகை பொங்க முத்திடுவீர்!

சீரார் கமலச் செவ்வாயின்
திகழ்சேர் முத்தம் தந்திடுவீர்!
தீங்கனிச் சுளையின் இதழாலே
திருவே! முத்தம் தந்தருள்வீர் !

6. பாலையிலே நீரூற்றைப் பார்க்க இன்பம்!
பசித்தோர்முன் உணவிருக்க அதுவுமின்பம்
பட்டாடை மினுமினுக்கக் குழந்தை கொஞ்சிப்
பால்நிலவாய் சிரிப்புதிர்க்கும் பார்க்க இன்பம்!

சோலையிலே சுகத்தென்றல் வீசு மின்பம்!
சுட்டும் விழிச் சுடராலே போதை யேற்றி
தோகை மயிலாள் வருவாள் நெஞ்சிற்(கு) இன்பம்!
சோதனைகள் தீர்ந்தக்கால் இன்பம்! இன்பம்!

காலையிலே கடல்குளித்து எழுவோன் தன்னைக்
காணுதற்கு நல்லின்பம்; கமலம் என்பாள்
கட்டான இதழ விழ்ப்பாள் காதலின்பம்!
கழனிக்கு ஏர்செல்லும் காண இன்பம்!

ஆலையிலே உருவாகும் கரும்பின் பாகை
அளவோடு சுவைக்குங்கால் இன்பம்; ஆனால்
அவையெல்லாம் எமக்கல்ல இன்பம், அன்பாய்
அண்ணல்நபி முத்திடுவீர்! அதுபே ரின்பம்!

## வேறு

7. ஆறும் வயதில் அன்னையையும்
ஆறும் திங்களில் தந்தையையும்
அல்லாஹ் அவனே சுவனபதிக்(கு)
அழைத்துக் கொண்டான் அன்புடனே!

மாறா வறுமை ஆட்கொண்டே
மனதைக் குலைத்தும் கலங்காது
மக்க நபியே உமை வளர்க்க
அலிமாத் தாயார் முன் வந்தார்!

தேருதிருந்த அவர் உடம்பு
திருநபி உங்கள் நல்வரவால்
செழுமை பெற்றுப் பூரித்து
சீராய் அமுதம் பெருகியதே!

சீரார் மணியே! திருமணியே!
திருவாய் முத்தம் தந்தருள்வீர்'
தெய்வத் தூதே! மஹ்மூதே!
தேனாய் முத்தம் தந்தருள்வீர்!

O எழுவோன்—சூரியன்

8. தத்தித் தத்தி நடைபயின்று
தவழ்ந்தீர் அன்னை மடிமீதே!
தரணிக் கெல்லாம் உயர்நீதி
சாற்ற வந்த பெருந்தூதே!

முத்துமணி யொளிர் சித்திரமே!
முறுவல் செய்யும் இதழாலே
முத்தாய் முத்தம் தந்திடுவீர்!
மோகம் தீர முத்திடுவீர்!

சித்தம் களிய திருநபியே!
செய்வீர் முத்தம் மனமுவந்தே!
சிவந்த இதழால் முத்திடுவீர்!
சிந்தை களிக்க முத்திடுவீர்!

பித்தாய் ஆனேன் முகம்மதுவே!
பிரியத் தோடு முத்திடுவீர்!
பெருமான் நபியே! முத்திடுவீர்!
பெரும்பேறுகும் முத்திடுவீர்!

9. வல்லோன் அருளால் வந்துதித்த
வரிசை நபியே! செங்கீரை
வளமாய் ஆடிப் பூந்தொட்டில்
வளர்ந்தீர் இனிதே வாஞ்சையுடன்

எல்லோராலுந் தாலாட்டி
எமதுயி ரென்றே பாராட்டி
இனிக்க இனிக்க முத்தமிட்டே
ஏந்தல் உம்மோ டாடிடவே

நல்லார் பலரும் அம்புலியை!
நலமாய் அழைத்துப் பண்பாட
நபியே! நீங்கள் மனம்பூத்து
நல்லின் பந்தான் அடைவீர்கள்!

அல்லாஹ் ஹூவின் நல்லாணை
அன்பாய் உரைக்கும் திருவாயால்
அணிசேர் முத்தம் தந்தருள்வீர்!
அழகாய் முத்தம் தந்தருள்வீர்!

10. சிறியேன் சிற்றில் சிதைக்காமல்
திருமதீனாவின் வீதியெலாம்
சிறுதே ரோட்டி விளையாடி
சிறுபறை யென்னும் தீன்முரசை

பெருமையுடனே முழக்கமிட
பெருமான் வருவீர்! முத்திடுவீர்!
பிணியணு காமல் முத்திடுவீர்!
பேருவகை யோடே முத்திடுவீர்!

அருமைத் தந்தை அப்துல்லா
அன்பால் அன்னை ஆமினா
அண்ணல் நபியே உமையள்ளி
அணைத்தே முத்தம் சொரிந்தார்கள்!

திருவாய் எழிலாய்த் திகழ்கின்ற
தெய்வத் தூதே! மஹ்மூதே'
சிந்தை களிக்கமுத்திடுவீர்!
சிரிக்கும் மலரே முத்திடுவீர்!

# 6. வருகைப் பருவம்

1. பொன்னு ருங்கள் திருமேனி
பொலிவின் மேன்மை புரியாமல்
பொழுதில் உதிரும் மூதாட்டி
புன்மை மனத்தாள் சினங்கொண்டே

அண்ணல் உங்கள் மேனியிலே
அந்தோ? அதைநான் என்சொல்வேன்?
அள்ளியி றைத்தாள் குப்பைகளை
அதையும் பொறுத்தீர் நாயகமே!

என்னே! உங்கள் பண்புடமை!
ஏட்டில் எழுத இயன்றிடுமோ?
எழிலார் மங்கை கதீஜாவின்
இதயங்கவர்ந்த பேரழகே!

மன்னு வருக! திருமறையின்
மாண்பே வருக! மணிவருக!
மதீனு நகரின் பெருவாழ்வே
மனமே களிக்க வருவீரே!

2. அருமை மார்க்கம் இசுலாத்தின்
அறத்தைக் காக்கப் பதுர்ப்போரில்
அளவிற் குறைந்த படைநடத்தி
அகிலம் வியக்க ஜெயம் கண்டீர்!

பெருமை நிறைந்த பேரிறைவன்!
பேசற் கரிய ஓரிறைவன்!
பெரியவன் தூதே! பேரெழிலாய்
பிறந்தீர் இந்த அவனிமிசை!

கருணை பூக்கும் இருவிழிகள்!
காண்பவர்க்(கு) உரைக்கும் தீன்வழிகள்!
கன்னல் நபியே முகம்மதென
கனிவாய் அழைத்தால் சுகம்மலரும்!

பொறுமைக் கடலே! புகழ்முத்தே!
புன்னகை பூத்து வருவீரே!
போதனை தந்த நாயகமே!
புன்னகை பூத்து வருவீரே!

3. அண்ணல் வருக! அறம் வருக!
அகமே களிக்க நபிவருக!
அகிலம் புரக்கும் வல்லோனின்
அன்பே வருக வந்தருள்வீர்!

கன்னல் வருக! கனிவருக!
களிப்பே பொங்க நபிவருக!
கண்ணே வருக! இசுலாத்தின்
காவல் வருக! வந்தருள்வீர்!

பொன்னே வருக! பூவருக!
புகழார் நபியே வந்திடுக!
புவனம் உவக்கும் தீன்பயிரின்
புத்தமு தாகும் நபிவருக!

மின்னே வருக! மிளிர் வருக!
மேன்மை நபியே நீ(வி)ர் வருக!
மேலோன் கொடையே! என்நெஞ்சம்
மிகவும் துள்ள வந்தருள்வீர்!

4. சின்னச் சின்ன நடைபயின்று
திருவே வருக! தீனுக்கோர்
செழுமழை வருக! தெள்ளமுதை
தெளிக்கும் சொல்லார் நபிவருக!

வண்ணக் கிளியே! மக்கநகர்
வாழ்வே வருக! வந்தருள்க!
வாடும் துயரை மேடாக்கி
வனமே இறைக்க வருவீரே!

கண்ணில் இறையருள் தேக்கித்தான்
களிப்பே வருக! வந்தருள்வீர்!
காய்ந்த பாலையில் நீரூற்றே!
கவலை யகல வருவீரே!

மண்ணில் புனிதப் பணிசெய்த
மாண்பே வருக! வந்திடுக!
மணக்கும் உங்கள் புகழ்பாட
மதீனு அரசே வந்தருள்வீர்!

5. மன்ஞ வருக! மயில்வருக!
மலரேவருக! நபி வருக!
மாண்பார் அன்னை ஆமீஞ
மகவே வருக! வந்தருள்வீர்!

பொன்ஞர் மேனி நபிவருக!
புகழே வருக! பூவருக!
புவனம் தழைக்க மழையாக
பொலிவாய் வருக! வந்தருள்வீர்!

கண்ணுல் உம்மைக் கண்டாலே
களிப்பே பொங்கும்! நபிவருக!
கதியே அளிக்க வந்திடுவீர்!
காணு மெழிலே! கனிவருக!

பண்ணே வருக! இதயத்தின்
பாசம் வருக! வந்திடுவீர்!
பண்பார் நலமே! நன்னபியே!
பரிவோ டிங்கே வந்தருள்வீர்!

6. நந்தா விளக்கே! நபிவருக!
நலமே கொழிக்க வந்தருள்க!
நாடும் ஏழை மாந்தர்க்கு
நற்றுணை யாகும் நபிவருக!

விந்தை வருக! மறையொளியின்
விளக்கே வருக! வந்திடுக!
விண்ணின் மதியாய்ப் பொலிகின்ற
வேந்தே வருக! வந்திடுக!

சொந்தம் வருக! சுடர்வருக!
தூயிசு லாத்தின் தூண்வருக!
துலங்கும் அன்னை ஆமீனு
தோளில் ஆடும் கிளியாகும்

எந்தாய் வருக! எழில் வருக!
இனிப்பே வருக! இதயத்தின்
எண்ணம் மலரச் செய்கின்ற
ஏந்தல் நபியே! வந்தருள்வீர்!

7. தத்தித் தத்தி என்னருகே
தவழ்ந்து வருக வந்தருள்வீர்!
தாய்மையின் பரிசே! வந்திடுக!
தழுவுங் கொடியே வந்திடுக!

முத்துமணிச் சிறு புன்னகையில்
மோகம் பிறக்கும் வந்திடுக!
முக்கனிச் சாறே! வந்திடுக!
முத்தமிழ் போல வந்திடுக!

கத்தும் கடல்மகள் கனிந்தேதான்
கதிரின் ஒளியாய்க் கொடுக்கின்ற
கண்ணார் முத்தே! நபிவருக!
காசிம் முந்த பாவருக!

கொத்து மலர்தரும் மணம் வருக!
கொள்கையிற் சிறந்த கோவருக!
குதிக்கும் அருவியாய் மனந்துள்ள
கொற்றவ நபியே வந்தருள்வீர்!

8. செம்பஞ் சாகும் காலெடுத்து
சிந்தை களிக்க வந்திடுக!
சிதறிய சதங்கையில் மணிகொஞ்ச
சிரித்தே வருக! சீர் வருக!

அம்புலி யோடு விளையாட
அன்பாய் வருக! அகில் வருக!
அண்ணல் முகம்மது நபிவருக!
அரசே வருக! வந்தருள்க!

•

நம்பும் நெஞ்சே வெம்பாமல்
நலமாய் அணைக்கும் நபிவருக!
நாயன் தூதே! வந்தருள்க!
நல்லோர் நட்பே! வந்திடுக!

கொம்புத் தேனே! நபிவருக!
கொள்கைக் குன்றே வந்திடுக!
கோமான் நபியே! ஆமீனு
கொஞ்சும் நபியே வந்தருள்வீர்!

9. தீமைகள் மலிந்து திசையெல்லாம்
திறமைகள் நலிந்து கொடுங்கோலே
திகழ்ந்த(து) உலகில் அந்நாளே
நீன்நெறி கீதம் இமைக்காமல்!

[illegible]மைகளானோர் மாந்தரெலாம்
ஒன்றிறைக் கொள்கை தனைமறந்தே
உலகிலோர் பாதி பெண்ணென்றே
உண்மை அறியா [illegible]மல்

பாவங்க ளென்று ,பெண் பிறந்தால்
படுகுழி தோண்டிப் புதைத்தார்கள்!
பாழும் மூடக் கொள்கையிதை
பாங்காய் தடுத்து நிறுத்திடவே

ஆவல்கொண்டே உமையிங்கே
அனுப்பி வைத்தான் அருளாளன்!
அண்ணல்நபியே! முகம்மதுவே!
அன்பாய் வருக! வருகவே!

## வேறு

10. மாதவ அன்னை மகவாய் தோன்றினீர்
மண்ணுங் குளிர்ந்தது வே!
மங்கலம் எங்கெனும் பொங்கிப் பெருகியே
மகிழ்ச்சி பூத்ததுவே!

போதரின் பிறப்பால் பூமியில் நல்ல
புண்ணியம் தழைத்ததுவே!
பொய்வழிக் கொள்கைகள் மெய்நெறிச் சுடரால்
புகைந்து கருகினவே!

நீதராம் எங்கள் நேயநல் நபியே!
நெஞ்சம் களித்திடவே
நித்தில ஒளியாய் முத்திரைப் பொன்னாய்
நபியே வந்தருள்வீர்!

சாதனை புரிந்த மாதவ நபியே!
சடிதில் நெருங் கிடுவீர்!
தாஹா நபியே! எம்முளம் களிக்கத்
தவழ்ந்தே வருவீரே!

## 7. அம்புலிப் பருவம்

1. கற்கண்டு சீனியும் கனியும் கனிந்தொழுகும்
கவிஞர் மெயழி கேட்கலாம்!
கலைமறை முகம்மது காரண முகம் நோக்கின்
கவலைப் பிணி தீரலாம்!

பொற்புடைய ரமலானில் புண்ணிய நோன்பேற்கும்
பொன்னார் உரை கேட்கலாம்!
புயலாகத் துயர்வரினும் அயராத நெஞ்சுறுதி
போற்றுந் திறங் காணலாம்!

விற்புருவ மடமயிலாம் விளங்குபுகழ் கதீஜாவின்
வேந்தரின் எழில் காணலாம்!
வினையோடச் செய்கின்ற கலிமாப் பொருளழகை
விரும்பியே நீ கேட்கலாம்!

அற்புதமாய் வந்ததிரு அண்ணல்நபி நாதருடன்
அம்புலீ ஆடவாவே!
அருளாளன் கொடையாகும் பெருமானார்தம்முடன்
அம்புலீ ஆடவாவே!

2. வானத்தில் நீயென்ன? இரவாட்சி புரிகின்ற
வகை சேர்ந்த அரசாகலாம்!
வருஷத்தில் பாதிதான் உன்னுட்சி; அதற்குள்ளே
வாடியே நீ தேயலாம்!

தேனொத்த மொழியாளர் நபிகளார் பலகோடி
சிந்தைக்கு மரசராமே!
தேய்கின்ற தில்லையவர்; தாயன்புப் பெட்டகம்!
தேர்ந்தறி வாளரன்றோ

தீனுக்கே உரமாகி தீமைக்குப் பகையான
திருநபி இவரல்லவா!
சிந்தித்துப் பார்த்திடு, தரைக்குனை யழைத்தனன்
தீரர் இவரல்லவோ!

விணுக்கு நீயேனோ வித்தையது செய்கிறாய்
அம்புலி ஆடவாவே!
வேந்தர்நபி தம்மோடு சாந்திபெற நீயன்பாய்
அம்புலி ஆடவாவே!

3. முந்திய நபிகளில் முத்திரை நபியாக
முகிழ்த்ததும் இவரல்லவோ!
மும்மல மறுத்துமே எம்மன முறைந்துள
முழுமணிச் சுடரல்லவோ?

பந்துநிலா உனைப்பாம்பு விழுங்கிடுமவ்வேளை
பரிதாப நிலையல்லவோ?
பகருவார் அதனையே சந்திரக்கிரணமென்று
பாரறியு நிலையல்லவோ?

விந்தையாயிருக்கின்ற எம்நபி ஆற்றலை,
விள்ம்பிட அறிகுவாயே
வேந்தவ ரோருந் விளையாட வந்தாலே
விளையும் சுகமல்லவா!

சிந்தையில் பூத்திட்ட எம்நபி பார்த்திடில்
தீமை யகன்றோடுமே!
திருநகர் மக்கமா பதிவளர் நபியோடு
ஆம்புலீ ஆடவாவே!

4. ஈதலறம் பேணிய எங்கோமான் நபிநாதர்
இதயத்தின் உயிரல்லவா!
இறையாணை தலைமேயேற்று முறையாக வாழ்ந்திட்ட
ஏந்தல் நபியல்லவா!

மாதரார் தங்கட்கு சொத்துரிமை யுண்டென்ற
மன்னர் இவரல்லவா!
மறுமணச் சட்டத்தை துணிவோடு சொன்னதும்
மதிசேர்ந்த திறனல்லவா!

போதனைகள் தான்சொல்லிப் புத்தியைத் தெளிவித்தப்
புண்ணிய லரிவரல்லவோ!
பொல்லாங்கைப் போக்கியே புகழ்தீனைக் காண்பித்த
போற்றும் நபியல்லவா!

வாதனையேன் செய்கின்றாய்! வள்ளல்நபி தம்மோடே
அம்புலீ ஆடலாவே!
வரிசைக் குகந்ததிரு வள்ளல்நபி தம்மோடே
அம்புலீ ஆடவாவே!

5. பரிதியிடம் இரவலாய் ஒளிவாங்கி மினிர்கின்றாய்!
பாசாங்கே புரியுகின்றாய்!
பரிந்துன்னை அழைத்தாலோ உயரத்தில் இருந்தேதான்
பரிகாசம் செய்யுகின்றாய்!

அறியோமே யாமுனக் கென்ன தனித்தன்மை!
அம்புலீ சொல்ல வாயேன்!
அழகான நபியோடு விளையாடத் தடையேனோ?
அம்புலியே வந்து நில்லேன்!

பரிகாசம் செய்யாதே! பவச்சேற்றில் மூழ்காதே!
பண்போடு வந்து நில்லேன்!
பாரிலுயர் நபிநாதர் சீர்வளரும் கைகளிலே
பந்தா யடங்கி விடுவாய்

ஏராய நலங்கொழிக்கும் எங்கோமான் நபியோடே
அம்புலீ ஆடவாவே!
ஏட்டுக்கும் என்தமிழ்ப் பாட்டுக்கும் நல்லவரவர்
அம்புலீ ஆடவாவே!

6. கட்டான பூவல்லி கருத்தும் குளிர்ந்திடவே
கனிவாய் மொழி பேசுவாய்!
கைக்கெட்டா வானத்தில் தாரகை படைசூழ
கம்பீர மாயிருப்பாய்!

எட்டாத உயரத்தில் பழுத்தென்ன! எட்டியால்
ஏதேனும் நன்மை யுண்டோ?
எல்லார்க்கும் துணையாகி நல்லதே செய்யாமல்
இருந்திடில் பயனுமுண்டோ?

சிட்டாகமேகத்தில் ஓடுவதும் நிற்பதுமாய்
சிந்துவிளை யாடு கின்றாய்!
சிந்தித்துப் பார்த்திடு; இதனால் உலகிற்குச்
சிறிதேனும் நன்மையுண்டோ?

எட்டாத வானத்தில் ஏனின்னும் நிற்கின்றாய்?
அம்புலி ஆடவாவே!
எங்கள்நபி நாதரொடு பொங்குமெழில் அன்போடே
அம்புலி ஆடவாவே?

7. புகழ்கொள்ளும் பித்தன்நீ! பூவல்லி மங்கைக்கு
போதை யீந்திடுவதும் நீ!
புகழெல்லாம் இறையவர்க்கே எனநீதி புகன்றிட்ட
புண்ணிய நபி உணர்நீ!

முகில்கூட கடல்நீரை மோகப்பூம் பார்வையால்
மழையாகப் பொழிவதுண்டு!
முகிலோடு இரவெல்லாம் உறவாடுகின்றாய்நீ!
உன்னாலே என்ன உண்டு?

அகிலாய் மணந்திடுவார் எங்கள்நபி தங்களை
அவனியே போற்று மன்றோ?
அம்புலியே! அழகாக பெருமானார் நபியோடே
அன்போடு ஆடவாராய்!

மகிழட்டும் எம்முள்ளம் மாறட்டும் உன்எண்ணம்!
அம்புலி ஆடவாவே!
மக்கநகர் பதிவாழ்ந்த ஹக்கனருள் நபியோடே
அம்புலி ஆடவாவே!

8. சூதும் கொலையும் சுடுசொற் பேச்சும்
தீதென ஓதுக் கென்றார்!
துணைநின் றார்க்குத் துரோகம் செய்தலைத்
தொலைத்தே விடு என்றார்!

மாதரார் தம்மைப் பேய்க்குலம் என்றே
மாற்றிப் பேசியதை
மாநபி யவர்தம் தூய்நெறி உரையால்
மடமை சாய்த்திட்டார்!

ஏதும் அறியா எளியோர் குருதி
என்றும் சுவைத்திட்ட
எமனும் வட்டியை ஒழித்திட வேண்டி
எண்ணரும் பணி செய்தார்!

ஆதரவற்ற மாந்தர் தமக்கோர்
அருந்துணை யாயிருந்தார்!
அறிவாயோ ? நீ அம்புலீ; நபியோ(டு)
ஆடிட வாராயோ!

9. நஞ்சை ஊட்டிய வஞ்சகந் தமையும்
வஞ்சம் செய்ததில்லை!
நாடிய பேர்க்குத் தாயக மாகும்
நலத்தில் பிறழ்வ தில்லை!

அஞ்சன விழியார் மையலுக் கிவரே
ஆட்படவே யில்லை!
அவனியே மிளிர உழைத்தா ரன்
யார்க்கும் பகையில்லை!

செஞ்சொற் காவியம் சீருபாடிட
சிந்தை பூத்தவ ராம்
தீந்தமிழ் உமறு கனவினில் அன்று
திருவாய் வந்தவ ராம்!

நெஞ்சினில் வைப்பாய் அம்புலீ இஃதை
ஆடிட வாராயோ!
நின்புகழ் எங்கள் நபித்தூதோடே
ஆடிட வாராயோ?

10. கத்தியைக் காட்டிய கயவர் தமக்கும்
கருணை செய்தவராம்!
கண்ணெனப் போற்றி தீனிசு லாத்தை
கருத்தாய் வளர்த்தவராம்!

புத்தியைப் புகட்டி புகுத்தினர் நேர்வழி
பூமான் எம்நபியாம்!
பூமியில் யாவரும் சோதர ரென்றே
புதுநெறி யுரைத்த வராம்!

எத்தனை இன்னல் தாங்கி நடந்தார்
எங்கள் நபி நாதர்!
எல்லாம் பொதுநலம்! எல்லாரும் ஓர்குலம்!
என்றே தினம் வாழ்ந்தார்!

இத்தனை உரைத்தும் அம்புலீ உன்றன்
சித்தம் பட வி(ல்)லையோ?
எங்கள் நபியோ டாடிட வாராய்
இன்பம் வருமல்லவோ?

# 8. சிற்றில் பருவம்

## வேறு

1. அல்லாஹ் ஒருவன்! அவனே முதல்வன்!
அகிலம் புரக்கும் தனித்தலைவன்!
அண்ணல் உம்மைத் தன்தூதாய்
அனுப்பி வைத்த கொடையாளன்!

வல்லான் அவனே புகழோடு
வணக்கம் ஏற்கும் சீராளன்!
வாழ்த்திட அவனை நெஞ்சார
வறுமை மாயும்; பிணிதீரும்!

எல்லோரி டத்தும் இதுபோன்றே
இனிய உரைகள் பலதந்தே
ஏற்றம் தந்த எம்நபியே!
இசுலாத் திற்கோர் மணிவிழியே!

நல்லார் எங்கள் நபித்தூதே!
நலிந்தவர்க் கென்றும் உறுதுணையே!
நாயகம் சிற்றில் சிதைக்காதீர்!
நன்னபி சிற்றில் சிதைக்காதீர்!

## வேறு

2. அண்ணல் பிறந்தீர்! அவனி மகிழ்ந்தது!
அகமும் மகிழ்ந்ததுவே!
ஆர்த்தன புள்ளினம் ஆடிட மயிலினம்
அதிசயம் நிகழ்ந்ததுவே!

நன்னபி யுங்கள் நல்வர வாலே
நல்லறம் தழைத்ததுவே!
நானில மீதில் சத்திய நெறிவழி
நன்கு பரவினவே!

எண்ணரும் மக்கள் தீனிசு லாத்தை
ஏற்றுப் போற்றினரே!
ஏந்தலர் பெருமான் உங்களின் பெருமை
இனிதாய் உணர்ந்தனரே!

செந்நெல் மணியாய் சிரிப்பினைச் சிந்தும்
தெய்வத் திருத்தூதே!
சீரடி பதிக்கும் பூவடி நோக்கும்
சிற்றில் சிதைக்காதீர்!

3. கல்லும் மண்ணும் வணங்கிடும் பொருளாய்
கலைவடி வானதுவே!
காற்றும் மழையும் நெருப்புங் கூட
கடவுளாய் ஆனதுவே!

சொல்லும் செயலும் வெவ்வே றாகி
சூது நிறைந்தனவே!
தொல்லுலகில் நபி தோன்றிடு முன்னே
துயரம் மலிந்ததுவே!

எல்லாம் வல்ல இறையோன் அல்லாஹ்
இரக்கம் காண்பித்தான்!
இத்தரை மடமையை முற்றிலும் மாய்க்க
எண்ணம் கனிந்திட்டான்!

வல்லோன் கொடையாய் நபிவந் துதித்தீர்!
வசந்தம் மலர்ந்ததுவே!
வளமார் நபியே! தயவா யென்றன்
சிற்றில் சிதைக்காதீர்!

4. மதியினைக் கெடுக்கும் மதுவினை யருந்தி
மாந்தர் அலைந்தார்கள்!
மாதரார் யாரும் பெண்மக வின்றால்
மண்ணிற் புதைத்தார்கள்!

உதிரத்தை உறிஞ்சும் வட்டியே வாங்கி
உடலை வளர்த்தார்கள்!
உலுத்தர்கள் ஆயிரம் பிறர்மனை விரும்பி
ஒழுக்கம் இழந்தார்கள்!

பதிநகர் மக்கா பாங்குயர் நபி(யு)டன்
பல்லையும் உடைத்தார்கள்!
பதறிடவில்லை நபிமணி நீங்கள்
திருந்திடச் செய்தீர்கள்!

புதுமலர் மணமே! புகழ்நிறைக் குணமே!
பூமான் நபித் தூதே!
பொறுமையே. நிறைந்த கடல்மனத்தரசே
சிற்றில் சிதைக்காதீர்!

5. கங்குலில் ஒளியில் காற்றில் மழையில்
கடவுள் இருக்கின்றான்!
காரியம் ஒன்றை ஆற்றும் திறமும்
அவனே அளிக்கின்றான்!

இங்கிதமாக உணரிதை மனிதா!
எரிநெருப் பாகாதே!
எல்லோரி டத்தும் அன்பினைச் செலுத்த
இதயம் மறவாதே!

ஈங்கைக் குரிய நாயகம் இதுபோல்
நல்லுரை தந்தீர்கள்!
சத்தியம் தர்மம் தவநெறி காத்தே
தரணியில் வாழ்ந்தீர்கள்!

பொங்கிடும் அழகே! எங்களின் நபியே!
புன்னகைத் திருவுருவே!
பூவடி நோகப் போகிற தன்பாய்
சிற்றில் சிதைக்காதீர்!

6. வரம்பிலாக் கருணையும் வரம்பிலா இரக்கமும்
வழங்கிடும் அருளாளன்!
வருதுயர் தீர்க்கத் திருவுளங் கொள்ளும்
வற்றா அன்பாளன்!

நேர்வழி காட்டும் நித்திலம் அவனே!
நீள்புகழ் கொண்டவனே!
நீதிநாளென்னும் "கியாமத்" தன்று
நேயம் அளிப்பவனே!

மறைவழி சென்றே இறையருள் பெறுவீர்!
மாய்ப்பீர் நும்கவலை!
மாண்புடன் ரமலான் நோன்பினை ஏற்றே
மகத்துவம் கண்டிடுவீர்!

உரையிது போல பலநெறி புகன்றீர்!
உத்தம நபித் தூதே!
உம்மரும் பாதம் மண்படிந் திடுமே!
சிற்றில் சிதைக்காதீர்!

7. எத்தனை பிழைகள்? எத்தனை கொடுமை?
நித்தமும் செய்கின்றோம்?
ஏழையர்க் கின்றிங் கெத்தனை பேர்தான்
இரக்கப் படுகின்றோம்!

அத்தனை பிழையும் மொத்த உருவாய்
ஆகிடும் ஓர்நாளே!
அமைதியைக் குலைத்தே அச்சம் வளர்க்கும்
அறிவீர் மானிடரே

அத்தனாய்! சித்தனாய்! அன்னையாய் விளங்கும்
அல்லாஹ்வைத் தொழுவீர்!
அவனருள் பெற்றே இனியேனும் உய்ய
அனுதினமுந் தொழுவீர்!

முத்திரைப் பொன்னாய் தத்துவம் உரைத்தீர்!
முஸ்தபா நன்நபியே!
முதலோன் கொடையே! ரசூலுல்லாவே!
சிற்றில் சிதைக்காதீர்!

8. நெஞ்சின் இருளையும் பஞ்சாய்ப் போக்கி
நேர்த்தியா யாக்கிவிடும்
நிமலோன் அல்லாஹ் நித்தில அன்பில்
நித்தம் சேர்த்துவிடும்!

மிஞ்சும் துயரே அஞ்சியே யோடிடும்
மீட்சி கிடைத்திடுமே!
மேலோன் அருளை நமக்கெனவாக்கி
மேன்மை அளித்திடுமே!

அஞ்சிடல் ஏனோ? மாந்தரே நீங்கள்
அன்பாய் தொழுவீர்கள்!
அல்லாஹ் அவனின் நாட்டம் பெற்றே
அகமே மகிழ்வீர்கள்!

நெஞ்சும் நிறையும் நலமார் நீதி
நபியே உரைத்தீர்கள்!
நேயமுடன்யாம் வேண்டுகின்றோமே
சிற்றில் சிதைக்காதீர்!

9. கவனம் சென்றிட சுகமே கண்டிட
தொழுகை செய்யுங்கள் !
துயரம் மாறிடும்; சுகமே சேர்ந்திடும்
நினைவில் வையுங்கள்!

கவனம் வைப்பீர்! காலையில் மதியம்
நல் அந்திப் போழ்தும்
கருத்துடன் தொழுவீர் மாலையில் இரவில்
கவலை பறந்தோடும் !

சுவனபதியின் வாசல் திறந்திடத்
தொழுகை துணையாமே!
தொழுகையே சுவனத்தின் சாவியுமென்றே
சுவையாய் யுரைத்தீர்கள்!

புவனம் தழைக்க பூமழை யாக
வந்த முகம்மதுவே!
பூஞ்சிறு காலால் அடியேன் சிற்றில்
சிதைக்கவே செய்யாதீர்!

10. எளியோர் பசியை எல்லோர்க்குணர்த்தும்
இணையில்லா நோன்பே
இருப்பவ ரென்றும் இல்லா தார்க்கே
ஈந்திடச் செயும் நோன்பு!

வலிமா ரோடே ஒலிமார் பலரும்
ஏற்றநன்நோன்பு!
வறுமைகள் பிணிகள் வாட்டந் தீர்த்திடும்
வரிசை நிறை நோன்பு!

உளமதில் மகிழ்ச்சி ஊற்றினைப் பெருக்கும்
உன்னத நன் நோன்பே!
உயர்தனித் திங்கள் ரமலான் பெருமை
உணர்த்திடும் திருநோன்பே!

அழகார் எங்கள் அண்ணல் நபியே!
அன்புடன் கேட்கின்றேன்!
அடியேன் சிற்றில் சிதைக்கா வண்ணம்
அழகாய் சிரித்திடுவீர்!

# 9. சிறுபறைப் பருவம்

## வேறு

1. தேன் மறை தந்த மாயிறை யோனின்
செல்வக் களஞ்சியமே!—ஒரு
தீங்கறி யாத பாங்கினை யுடைய
சின்னப் பூமுகமே!—பெரு

வான்மறை இலக்கணம்! வாழ்வே இலக்கியம்!
வாழும் தத்துவமே—இதை
வந்து புகன்றிட சிந்தை கனிந்ததே
என்ன அற்புதமே! -இனி

தாந்தினித் தோம் உயர் தரிகிடத் தோமென
சந்த மொலித்திடவே—அந்தச்
சந்தமொ லித்திடும் இனிமையி லெங்கள்
நெஞ்சம் குதித்திடவே—எழில்

தீன்தீன் என்றே தீன்முரசு ஆகும்
சிறுபறை முழக்கிடுவீர்—உயர்
திருநகர் மக்காப் பதிநல் வாழ்வே!
சிறுபறை முழக்கிடுவீர்!

2: இல்லற வாழ்வில் இணைந்திடும் ஆண்பெண்
இருவரும் ஆடைகளே!—இதை
இங்கிதமாக நன்னபி யுரைத்தீர்
ஏற்றம் கண்டிடவே!—நல்

இல்லாள் வரனொடு இனிதா யிருந்திட
இல்லாத தொன்றில்லை!—அன்பே
இல்லா திருந்தால் இல்லலாள் தாமும்
இருந்தும் பயனில்லை!--என

நல்லார் நபியே! சொல்லே ராக
நெஞ்சில் பசித்தீரே!.-இந்த
நன்மை யுணர்ந்து மாந்தர் திருந்திட
நாளும் உழைத்தீரே!--நபி

சில்லென் றுரும் சிறுகை யசைத்தே
சிறுபறை முழக்கிடுவீர்!
திருநகர் மக்காப் பதிநல் வாழ்வே!
சிறுபறை முழக்கிடுவீர்!

3. முத்தமிழ் வித்தக இரத்தின மென்றே
எத்தனை பேருண்டு?...அதில்
முசுலீம் புலவர்கள் பலருண் டென்பேன்
எண்ணில் மிகையாகும்!--புது

கொத்துமலர் மணம் கூட்டி இறைத்திடும்
கோட்டாற்றுப் பதியில்--சுகம்
கொட்டி யளந்திட ஆலிம் புலவரே
மிஃராஜ் மாலையினை—பல்

வித்தகர் நடுவே நூலரங் கேற்றம்
செய்யும் வேளையிலே--தன்
விழியினை இழந்த அந்தகன் பெற்ருன்
ஒளி மணிப் பார்வைகளே--நல்ல

சித்தம் கனிந்திட சிறுகை யாட்டி
சிறுபறை முழக்கிடுவீர்!—உயர்
திருநகர் மக்காப் பதிநல் வாழ்வே.!
சிறுபறை முழக்கிடுவீர்!

4. சினம் சென்றும் சிரார் அறிவைச்
சேர்த்திடச் சொன்னீர்கள்!—நற்
சிந்தையில் கல்விப் பயிருண் டாகச்
செழிப்பே என்றீர்கள்!--திரு

நானம் கமழும் மேனியை நீங்கள்
நலமாய்க் கொண்டீர்கள்!--எந்த
நாளும் மறவா ஆளும் இறையை
அன்பாய்த் தொழுவீர்கள்!--நல்ல

கானமிசைக்கும் கவிஞர் குயிலாய்க்
கருத்தை யுரைத்தீர்கள்!--நற்
கண்ணூர் நபியே!' மஹ்மூ தெங்கள்
கண்ணைத் திறந்தீர்கள்!--புது

தீனம் ஏற்ற திருநபி அழகாய்
சிறுபறை முழக்கிடுவீர்!—மக்கத்
திருநகர் சேர்ந்தப் பதிநல் வாழ்வே
சிறுபறை முழக்கிடுவீர்!

5. பொங்கியே ஆற்றில் நீர்மிக வந்தால்
சேல்கள் விளையாடும் !-நபி
பொன்முகங் கண்டால் என் மன மெல்லாம்
இன்பாய் உறவாடும் !-நிறை

திங்கள் உலாவர தேனல்லி கண்டால்
சிந்தை குதித்தாடும் -நபி
திருமறை யுரைக்கும் அருள்நெறி கேட்டால்
தீமை பறந்தோடும் ! -காண

எங்கணும் ஒற்றுமை, எல்லாம் ஓர்குலம் !
இசுலாம் வழியாகும் ! -இதை
எம்மதத் தவரும் சம்மதித் தாலே
இன்பம் உருவாகும் ! -நற்

செங்கரும் பாக உள்ளம் இனித்திடச்
சிறுபறை முழக்கிடுவீர் ! -புதுத்
திருநகர் மக்காப் பதிநல் வாழ்வே !
சிறுபறை முழக்கிடுவீர் !

## வேறு

6. காதம் மணக்கும் கஸ்தூரி
கமழும் மேனி நாயகரே !
கண்ணூர் நபியே ! மஹ்மூதே
கவிதை பிறக்க வருந்தாதே !

ஓத மணக்கும் நாவெல்லாம்
ஒளிவான் மறையைக் கையேந்தி
உலகம் தழைக்க அல்லாஹ்வை
உள்ளன் பாகத் தொழுதிட்ட

போதம் மணக்கும் அறவாழ்வே !
பூமியில் வாழ்ந்த புண்ணியரே !
பொறுமை மணக்கும் பெருந்தூதாய்
புகழ் மணக்க வாழ்ந்தவரே !

நாதம் முழங்க நன்னபியே !
நலமாய் சிறுபறை முழக்கிடுவீர் !
நன்னகர் மக்காப் பதிவாழ்வே
நலமாய் சிறுபறை முழக்கிடுவீர் !

7. மத்தளம் கொட்டி வரிசங் கூத
மனத்தில் மகிழ்வில்லை!-கேட்க
மற்றென்ன வாத்தியம் எப்படி முழங்கினும்
சிறிதுஞ் சுகமில்லை!--இங்கே

எத்தனை பேரோ கீதமி சைத்தும்
ஏற்கும் மனமில்லை!-மண்ணில்
என்மனம் களிக்க எவரா லேனும்
இசைத்திட வகையில்லை!-ஞான

உத்தம நபியே! தத்துவச் சுடரே!
உள்ளந் துள்ளிடவே-நீங்கள்
ஒருமுறை யேனும் சிறுபறை முழக்கி
உவகை சேர்த்திடுவீர்!-என்

சித்தம் களித்திட தரிகிடத் தோமெனச்
சிறுபறை முழக்கிடுவீர்!-காணத்
திருநகர் மக்காப் பதிநல் வாழ்வே!
சிறுபறை முழக்கிடுவீர்!

8. வானவர் ஜிபுரயீல் தோழர்க ளோடே
வந்து களித்தாட--விழி
வாசலில் ஆயிரம் ஆசையின் தீபங்கள்
அழகாய் மிளிர்ந்தாட--எழில்

கானக் குர லுடை கலைஞர்கள் பல்லோர்
கவிதைப் பண்பாட--உயர்
கதிதர வந்த மரக்கல மென்றே
எளியவர் கொண்டாட—சுவைத்

தேனார் மொழியில் திருமறைப் பொருளைச்
செப்பிடும் திருவாயில்--சற்றுச்
சிந்திடப் புன்னகை; விஞ்சிட இன்பம்
சிறுபறை முழக்குதலால்--அந்த

வானைப் பிளந்திடும் வகையினில் அண்ணல்
சிறுபறை முழக்கிடுவீர்!-எமை
வாட்டிடும் துயரம் கேட்டோ டிடவே
சிறுபறை முழக்கிடுவீர்!

9.. அலிமாத் தாயார் மடிமேல் வளர்ந்த
அழகார் ஓவியமே!-காண
அருமா மறையின் பொருளாய் வாழ்ந்த
அன்பின் இருப்பிடமே!-திருக்

கலிமா வுரைக்க வருமா யிறையோன்
கருத்திற் கிசைந்தவரே!-நல்
கதீஜா மங்கையின் கண்ணாய் நிறைந்த
கன்னல் மொழியரசே!-என்றுஞ்

சலியா மனமும் தயவாம் குணமும்
நிறைந்து வாழ்ந்தவரே!–இந்தச்
சகமே தனிலே சுகமே பரவிட
வழிகள் சொன்னவரே!–மிக்க

நலமே கொழிக்க நாற்றிசை யொலிக்கச்
சிறுபறை முழக்கிடுவீர்!–தீ
நரகம் கடக்க சுவனம் கிடைக்க
சிறுபறை முழக்கிடுவீர்!

10. சல்லல் லாஹு அலாமு ஹம்மது
சல்லல் லாஹு அலைஹிவ
சல்லமே யென்று சலவாத் தோத
சாந்தி கிடைத்திடுமே!–அந்த

வல்லவன் இறையோன் நல்லரு ளாலே
வந்தீர் கற்பகமே!–வாழ்வில்
வருந்துயர் கடக்க மரக்கலம் நீங்கள்
என்ன அற்புதமே!–காண

நல்லவ ரிதய நட்பே வருவீர்!
நலமாய் முழக்கிடுவீர்!–இந்தக்
நானில மெங்கும தீன்குலம் தழைக்க
சிறுபறை முழக்கிடுர்வீர்!–இந்த

நானில மெங்கும் தீன்குலம் தழைக்க
சிறுபறை முழக்கிடுவீர்!–தென்றல்
சில்லென வீசும் மென்பூங் காற்றே
சிறுபறை முழக்கிடுவீர்!–காணத்
திருநகர் மக்காப் பதிநல் வாழ்வே
சிறுபறை முழக்கிடுவீர்!

# 10. சிறுதேர்ப் பருவம்

1. மாண்பார் அன்னை ஆமி னாவின்
மகவாய் வந்தவரே!
மதியிற் சிறந்த முகமதே யெங்கள்
மன்னவ ரான வரே!

வான்மீதி ருந்தே இசுலா மென்னும்
வளமாம் பூந்தேரை
வல்லோன் துணையால் வையகம் உய்ய
உருட்டப் பிறந்தீரே!

தேன்போல் பேசும் திருநபி இசுலாம்
திருத்தேர் சாரதியோ?
சிந்தையில் அன்புச் சுடர்மணி ஒளிரும்
தீனோர்க் குறுதுணையோ?

மானின் துள்ளலும் மழைநீ ராடலும்
மகிழ்வைத் தருவது போல்
மாநபி நீங்கள் சிறுதே ரோட்டி
மகிழ்வை யூட்டிடுவீர்

## வேறு

2. சுற்றி இழைத்த மாணிக்கம்!
சுடர்கள் வீசும் பூந்தேரில்
சுகிர்த நபியே! இனிதமர்ந்து
சொகுசாய் உருட்டி மகிழ்ந்திடுவீர்!

வெற்றிச் சங்கும் ஒலிக்கிறது!
விண்ணே அதிர்ந்து வெடிக்கிறது!
வேந்தர் நீங்கள் நாயகமே
வேட்கை பொங்கச் சிறுதேரில்

சுற்றிச் சுற்றி வருவதினால்
சூழும் இருளும் மாய்கிறது!
சுகமே நெஞ்சில் பாய்கிறது !
தூய நபியே நாயகமே !

கற்றறி வாளர் இதயங்கள்
கனிந்தே போற்றச் சிறுதேரே
காதம் ஒலிக்கக் கவி பிறக்கக்
களிப்பாய் உருட்டி மகிழ்த்திடுவீர்!

3. ஆயிரம் மணிகள் கிண்கிணி யென்றே
அதிர்க்கும் நல்லோசை !
அண்ணல் நபியுமைக் காண்பதற்கு அங்கே
அடடாவோ...வரிசை!

சேயிழை மாதர்கள் சின்னநல் அரும்புகள்
தீன்நெறி யாளர்கள்!
சிந்தையே பூத்து விந்தையே காண
சிற்றெறும் பாகின்றார்!

பாயிரம் பாடிடும் பாவலர் பலரும்
பரிவாய் உமை நோக்கி
பாட்டெனும் கோட்டையில் ஏற்றி வைத்தே
பாசம் சொரிகின்றார்!

மாயிறை யோனின் மாண்புயர் னொடையோ
மகிழ்வும் பொங்கிடவே
மாநபி நீங்கள் சிறுதே ரோட்ட
மனமே பூத்திடுங்கள்!

4. நன்னபி நீங்கள் சிறுதே ரோட்டி
நகரும் பாதையெலாம்
நன்மைகள் விரியும்; ஏழையர் நெஞ்சில்
நலமே தான் நிறையும்!

பொன்னபி யுங்கள் போதனை கேட்டுப்
புவனம் கடைத் தேறும்!
புகழ்நபி யுங்கள் பூமுகம் கண்டால்
போம்மனயிரு ளெல்லாம்!

மண்ணக மெல்லாம் பொன்னக மாகும்
மனக்குறையே மாறும்!
மற்மு தன்பாய் சிறுதே ரோட்ட
மாண்புகள் வந்தடையும்!

கண்ணோர் நபியே! சிறுதே ரோட்டி
காணச் சிரித்திடுவீர்
கதிதர வந்த மரக்கலம் நீங்கள்
சிறுதே ருருட்டிடுவீர்!

5. தோழர்கள் பலரும் பாடிட அங்கே
சூழ்ந்தே நிற்கின்றார்!
சகிர்த நபியின் வரவுக்காக
காத்தே கிடக்கின்றார்!

ஏழிசை வாணர் இன்னிசை முழக்கி
இனிதாய் அழைக்கின்றார்!
எம்நபி ஏனோ? மௌனம் இசைத்தீர்
சிறுதேர் உருட்டிடுவீர்!

நாழிகைப் பூக்கள் மலர்ந்தே இரவும்
நகர்ந்தே வருகிறதே!
நன்னபி நீங்கள் சிறுதே ரோட்டும்
நாட்டம் வளர்கிறதே!

தூள்தூ ளாகித் துயரங்க ளோடச்
சிறுதே ரோட்டிடுவீர்!
தோழர்க ளோடே ஆடிம கிழ்ந்தே
சிறுதே ரோட்டிடுவீர்!

6. வானத்தில் சந்திரன் வருகையைக் கண்டே
மலர்வது ஒரிதயம்
வள்ளல் நபி நீ(வி)ர் சிறுதே ரோட்டி
வருவதைக் கண்டாலே

வானமி சைத்தே விரிந்திடும் இதயம்
காணக் கண் கோடி
கவிஞர்கள் போற்றி பூங்கவி விரிப்பார்
இன்பப் பண்பாடி

தானமும் தர்மமும் நிலைத்திடச் சிறுதேர்
தயவாய் உருட்டிடுவீர்
தாழ்மை யகன்றிட நேர்மை உயர்ந்திட
சிறுதேர் உருட்டிடுவீர்

நானமே கமழும் நல்லெழில் தூதே
நலமாய் உருட்டிடுவீர்
நாயனின் தூதே ! சிறுதே ரோட்டி
நன்மை பெருக்கிடுவீர்!

7. பாலுந் தேனும் ஆறாய்ப் பெருகி
பசுமை குலுங்கினவே
பாங்குடன் நீரும் வாழ்ந்திட மலர்கள்
பரிசாய்க் குவிந்தனவே

பாலையில் நீரும் ஊற்றாய்ப் பொங்கி
இன்பம் அளித்ததுவே
பனியெனப் படர்ந்த் கவலைகள் எல்லாம்
பாங்காய் மறைந்தனவே!

ஆலமா நபிகள் பிறந்தீர்! இங்கே
அறங்கள் தழைத்ததுவே
அருமறை "ஆயத்தை" ஆன்றோர் நாவும்
அழகாய் உரைத்தனவே

சீலமே மிக்க திருநபி இனிதாய்ச்
சிறுதே ரோட்டிடுவீர்
தீனெனும் சோலையில் தான்வினை யாடி
சிறுதே ரோட்டிடுவீர்!

8. மறைநெறி யமுதம் மகிழ்வோ டுண்டு
மாண்பாய்ப் பிறந்தீர்கள்
மணிமொழி புகன்று நேர்வழி செல்ல
மாந்தரைப் பணித்தீர்கள்

பிறையொளிர் வானின் வெற்றியைப் போலப்
பெருமான் பிறந்தீர்கள்
பிணியிருள் அகலவும் பேதமை ஒழியவும்
தினமும் உழைத்தீர்கள்

அறிவுளார் செய்கை எதுவென அன்றே
அழகாய் உரைத்தீர்கள்
அயல்மனை விரும்பிப் பழியினைச் சுமக்கும்
அழிவைத் தடுத்தீர்கள்

நறைதீங் கனியே ! நன்னபித் தூதே
சிறுதே ரோட்டிடுவீர்
நாயனின் கொடையே ! நானில வாழ்வே
சிறுதே ரோட்டிடுவீர்

9. திருமேவும் இசுலாம் தீனென்ற மார்க்கம்
திக்கெட்டும் பரவுதற்காய்
சிறுதேரு ருட்டிப் புனித ஹஜ்ஜேதான்
சீராகத் தொடக்கி வைப்பீர்

அருளாளன் அன்பில் அழகாய் பழுத்த
ஆசை நறுங்கனியே
அகம்வாழ்ந் தின்னல் இருள்மாய்ந் தோடும்
அண்ணல் நபித் தூதே

பெருமான் முகம்மதே ! உவகையே பொங்கச்
சிறுதேரு ருட்டிடுவீர்
பிணியெலாம் நீங்கிப் பெருமைகள் சேர்த்துச்
சிறுதேரு ருட்டிடுவீர்

கருவா யன்னை ஆமினா தமக்கோர்
கன்னல் மொழியா னீர்
கலிமா மறையே காரண நபியே
சிறுதே ரோட்டிடுவீர்!

10. ஆதிதன் தூதே ! பேரின்ப விளக்கே
அண்ணல் முகம்மதுவே
அறநெறி வழுவாத் தவத்துறை வேந்தே
அகமொளிர் முழுநிலவே

நீதிநற் போதனை நெஞ்சிற்(கு) உரைத்த
நேய்நல் நபியரசே
நினைவில் வையுங்கள் சொர்க்கமிருப்பது
தாய்மடி என்றவரே

சாதியைப் போக்கிச் சகலோர்க் கன்பென்னும்
சஞ்சீவி யானவரே
சன்மார்க் கத்தின் சால்புக ளெல்லாம்
தந்த மணிச்சுடரே

காதல் பெருகிடக் கனிவாய் அழைத்தேன்
சிறுதேரு ருட்டிடுவீர்
கண்ணூர் மணியே ! பொன்னூர் நபியே
சிறுதே ரோட்டிடுவீர்!

# நபிச் சக்கரவர்த்தி

# நபிகள் நாயகம் [ஸல்]

# பிள்ளைத் தமிழ்

கவிமணி த. கா. காதர்கனி

விற்பனை உரிமை:

தமிழ்மணி புத்தகப் பண்ணை

281, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை சென்னை-600005

# நபிச்சக்கரவர்த்தி நபிநாயகம் [ஸல்]

# பிள்ளைத்தமிழ்

## இறை வேண்டல்

உலகெலாம் படைத்தே உயிரெலாங் காத்தே
உன்னதப் புகழெலாங் கொண்டே
ஒப்புமை இல்லா அன்புடன் அருளை
உவப்புடன் அளித்திடும் இறைவா!

உலவிடும் மனித உயர்வு தாழ் வறிந்தே
இறுத்திடு மறுமைநாள் தலைவா!
உன்னையே நினைந்தே உருகியே வணங்கி
உன்னையே நாடிடும் எம்மை

நலமுடன் உன்றன் அருள்பெறு சான்றோர்
நன்னெறி செலுத்துவாய், தீமை
நாடியேயுன்றன் சாபத்திற் கானோர்
நவின்றதைப் பேணாது காப்பாய்

உலகினைக் காக்க உனதருந் தூதால்
உயர்ந்தநன் முஹம்மது நபியால்
ஒப்பிலாப் பிள்ளைத் தமிழினைப்பாட
ஒப்பினேன் எனக்கருள் புரியே!

# 1. காப்புப் பருவம்

ஒப்பிலா அருளே ! உருவிலாத் திருவே !
உவமையில் ஆனந்த விருந்தே
உள்ளொளி பரப்பி உட்பகை விரட்டி
உறுதுணை யாகிடும் மருந்தே !

இப்புவி தன்னில் இவ்வுடல் பண்ணி
இன்னுயிர்க் காற்றினை ஊதி
இம்மெனும் போதில் சந்திரன் ஏகி
இசைபெற வைத்தநல் சோதி !

உப்புநீர்த் துளியால் உள்ளொளி விழியுள்
உப்புநீர் ஊறிடச் செய்தாய் !
உவர்க்கடல் தேக்கி உண்மழை யாக்கி
உன்னருள் மாரியைப் பெய்தாய் !

தொப்பிலாக் கனியாம் குவலய மணியாம்
குலப்புகழ் முஹம்மது நபியால்
குறைவிலா சாந்தி நிறைந்திட வேண்டிக்
குழைகுவம் இறைவநீ காப்பே !

தலைக்கன இபுலிசின் தருக்கினை அழித்திட
தரணியி லாதத்தைப் படைத்து,
தனிப்பெருந் திறத்துடன் தரம்பிரித் தறிந்திட
தகுதியாம் பகுத்தறி வளித்து

தலைநிமிர்ந் துயர்ந்திட தனிவழி வகுத்துடன்
தாய்தாரம் பிள்ளையுணர் வூட்டி,
தகைமையை விஞ்ஞானத் துறையினில் வெளியிட
தணிந்திடா ஆர்வத்தை மூட்டி,

இலையிது போலொரு படைப்பென வியந்திட
இகமதில் புகழுடன் விளங்க
இபுலிசின் தடையின்றி அறத்துடன் உயர்ந்திட
எண்ணற்ற நபிகளை அனுப்பி,

நிலையிலா உலகத்தில் நிலைபெறும் வழிபெற
நிகரிலா மறையினை யளித்த
நிறைபுகழ் இறைவனே! திருநபி மீதினில்
நிறைவுடன் அருளினைப் பொழிவாய்

(3)

**வேறு**

ஆதிநபி தாதர் ஆதமுடன் அவ்வா
அல்லாஹ்வுன் நெறிகண்ட மனத்தால்
ஆண்டிருந்த சுலைமான் ஆரணங்கு பல்கீஸ்
அருளான வழிசென்ற குணத்தால்

சோதியெழில் யூசுப் சுந்தரியாம் சுலைகா
சன்மார்க்கந் தனைக்காத்த முறையால்
சுடர்முத்தம் மூஸா நபியோடு சபுரா
சுத்தநெறி போதித்த சிறப்பால்

தூதரிபு ரூஹிம்தோகை மயில் சாரா
தூயநெறி போற்றிட்ட திறத்தால்
துணையில்லா ஈசா நபிமார்கள் எல்லாம்
தூயோனுன் நெறியேற்ற தொடர்பால்

வேதனையில் நின்று சோதனையில் வென்று
வெற்றிபல பெற்றிந்த் உலகில்
உயர்ந்தோங்க வந்த பெருமானுக் காக
உன்னடியை வேண்டுகிறு ரருளே!

(4)

எழுவானம் சென்றே இறையுன் னைக்கண்டே
ஏற்றமுடன் வந்தநபி நாதர்
ஈடற்ற செயலை ஏற்றுமெய்ப் பித்த
ஏந்தல ராம் அபுபக்கர் சித்தீக்

எழுந்தோடி யண்ணல் சிரங்கொய்ய வென்றே
எடுத்திட்ட வாள்மண்ணில் வீழ
எம்பிரானின் நெறியைத் தம்முயிர் மூச்சாய்
இதயத்தில் வைத்தனர் உமறு

பழுதிலாப் பக்தி பாசத்தோ டென்றும்
படைத்தோனைத் தொழுதேத்தும் உதுமான்
பனிச்சென்று காரி உமிழ்ந்தோரைப் போரில்
பலிவாங்கா தகன்றனர் அலியார்

ஒழுங்கோடே ஆண்டனர் உலகிற்குச் சான்றாய்
உயர்ந்திட்ட கலிபாக்கள் உன்னை -
ஒருசேர வேண்டி நிற்கின்றூர் நபிபால்
உயர்ந்தோனே அருள்மாரி பொழிவாய்!

(5)

நீஞோர்கள் போற்றும் பாக்தாதுச் செல்வம்
தீன்முஹைதீன் ஜெயிலானி யோடு
தீன்போற்றும் சஹாபா இமாமானோ ரோடு
தீன்முஹாஜிர் அன்சாரி கூடி

ஆனை உலகில் அதிசயமே புரிந்த
அவ்லியா ஒலிமார்கள் ஸூபி
அருள்மார்க்கந் தெளிந்த உலமாக்க ளோடே
அறிஞர்கள் மௌல்விகள் சேர

தேனை மறையைத் தன்னெஞ்சில் ஏந்தும்
திகழ்ஹாபிஸ் முத்தகீன்க ளோடு
தீதறியா மூமின் தீனேற்ற முஸ்லிம்
திக்கெட்டும் உயிர்ஜந்து இயற்கை

வானோர்கள் எல்லாம் வல்லோனே உன்னை
மனமார வேண்டுகிறுர் நபிபால்
வளமார்ந்த கருணை மலர்தூவி எங்கள்
மனமெல்லாம் நிறைவாக அருளே!

(6)

நீயிட்ட பிச்சை நிலமீது வாழ்க்கை
நீசொன்ன நெறிதன்னிற் செல்வேன்
நெருப்போடு கல்லைத் துதிப்போரின் கொள்கை
நிலமீ தில்லாது வெல்வேன்

நீகேட்ட போதும் துயருற்ற போதும்
தூயோன்நின் நாமத்தைச் சொன்னால்
தீபூங்கா வாகும் துயர்நீங்கிப் போகும்
தித்திக்கும் நாவென்றே சொல்லி

பூவட்ட மீது புதுவட்டம் போட்டுப்
புகழிஸ்லாம் மணமீந்த புனிதர்
பாசத்தின் கொழுந்தைப் பரிசாக உனக்குப்
படைத்திட்ட இபுருஹீம் மீது

மேவிட்ட உந்தன் மேலான கருணை
மேவட்டும் நாயகத்தின் பாலும்
மேலோனே அருளின் சீமானே, இதயம்
மன்றுடி தினம்வேண்டு வேனே!

( 7 )

வேறு

மண்ணினிக்கும் மாமணி மனமினிக்கும் பூமணி
மறையினிக்கும் வழிநடக்கும் தூமணி
மாசறுக்கும் ஒளிமணி மடமறுக்கும் நபிமணி
மரபினிக்க வந்துதித்த மகள்மணி

பெண்குலத்தின் கண்மணி பூதலத்தின் நன்மணி
பொற்புடைய நற்றிலகப் பொன்மணி
பூமணக்கும் பெருமணி பாமணக்கும் திருமணி
பாத்திமுத்து வயிற்றுதித்த நறுமணி

விண்ணொளிரும் இருமணி வேதமுணர் அருள்மணி
விகற்பமிகு ஆட்சியினுக் கெதிர்மணி
வீரமிகு விரிமணி தியாகமிகு சுடமணி
விந்தைமிகு ஹஸன் ஹுஸைன் எழில்மணி

கண்மணியாம் நபிமணி குலமுதித்த எம்மணி
காசினியில் ஒளியாத வெறுமணி?
கருணைமிகு இறைவநீ காசிமுஸ்த பாமணிக்
கருள்புரிக வேண்டிடுது காணே!

(8)

## வேறு

பூமியி லுதித்தமதி புன்னகை செழித்தமதி
பூகாக்க வந்த மதியை
பொய்யிரு ளவித்தமதி புண்ணியங் குவித்தமதி
புன்மையை யொழித்த மதியை

ஆமினு வயிற்றுமதி அப்துல்லா குலத்துமதி
அலிமாபா லுண்ட மதியை
அரபியா மணக்குமதி அன்புள்ள மதினமதி
அழகான மக்க மதியை

மாமத மறுத்தமதி மன்பதைக் குழைத்த மதி
மாசில்லாப் பூர்ண மதியை
மார்க்கத்தைக் கொடுத்தமதி மூர்க்கத்தைத்
தடுத்தமதி
வானேற்றங் கண்ட மதியை

தீமைக ளழித்தமதி தீன்குலத் தரசமதி
தித்திக்கும் இன்ப மதியைத்
தாய்பிள்ளைக்கிரங்குமுன்னே தானுவந் திரங்குமல்லா
தவமானேம் காத்த ருள்கவே!

(9)

## வேறு

மணல்படர் பாலை மலர்வளர் சோலை
மாறியே எழில் மணம் நாற
மாவிருள் கூடம் மாணிக்க மாட
மாகியே மணியொளி சேர

நிணம்நிறை கூடு நெறியுணர் வோடு
நிலைபெறு புகழுடன் மின்ன
நெடுமறை சொல்லும் அரும்பொரு ளொன்றே
நிலமதில் வழியெனச் சொன்ன

குணம்நிறை கோமான் குலம்பெறு பூமான்
கொடைதரும் புகழ் நபி நாதர்
குளிர் நிழலாக சுவையமு தாக
குவலயம் போற்றிறைத் தூ தர்

இணையிலா உன்னை இதயத்தில் கண்ணாய்
ஏந்தியே ரசூலுல்லா வென்றும்
இறைவனின் சாந்தி எழிலுடன் ஏந்தி
இலங்கிட வேண்டுதென் நெஞ்சே !

(10)

வேறு

அருளேந்தி யன்போடே அகிலத்தைக் காப்போனே!
அளவின்றிக் கொடுப்போனே, அல்லாவே !
அன்புருவம் எம்பெருமான் அறவாழ்வின் விளக்கங்கள்
அரியநற் பிராட்டிமார் பாராயோ !

பெருமாளின் துணையாகும் பேரிஸ்லாம் ஏற்றமுதல்
பெண்ணரசி கதிஜாப் பிராட்டியுடன்
பெருமையுடன் கன்னியினம் பருவத்தே மணம்புரிந்த
பேரறிவு ஆயிஷா வம்மையார்

தருமத்தில் ஸவ்தாவும் தானத்தில் ஹப்ஸாவும்
தனிப் பெருமை உம்முசல் மாவுடனே
தண்ணழகு சைனப்பும் உம்முஹபீ பாவுமே
தாராள மனமுடைய ஜைனப்பும்

அருமையாய்த் தன்னினத்தை விடுவித்த ஜுவைரியா
அருஞ்செல்வி மாரியா ஸஃபியா
அருளோங்குந் திருநபிக்காய் அகமுருக வேண்டுகிறேன்
அளவின்றி அருள்மாரி சொரிவாயே !

# 2. செங்கீரைப் பருவம்

## வேறு

பாறையினைச் சுமந்திருந்து பசிதாங்கும் மணிவயிறு
பாறையில் தோய்ந்தாட
பசித்தோருக் கருளோடு உவக்கின்ற ஒண்கைகள்
பளிங்கெனப் பாய்ந்தாட

தேறுடைய[1] இறையவனைத் தொழுதுதினம் மண்டி யிடும்
தீங்கால் பதிந்தாட
தேயத்தில்ஆண்டவன் துணையென்று வழிகாட்டித்
திருத்திய முகமாட

சூறையிலா[2] உலகினுக்குச் சொர்க்கமதன் வாயிலுக்கு
சுடரென விழியாட
சுவையூறும் மறையோதும் [illegible]
சிந்திடு மெழிலாட

ஆறுதலாய் இறைவனின் மறையீந்த வருள்நபியே
ஆடுக செங்கீரை
அல்லா (ஹ்)வின் திருத்தூதேமுல்லைப்பூஞ் சரமாக
ஆடுக செங்கீரை!

---

1. தேறு - தெளிவு
2. சூறை - கொள்ளை.

இறையோனின் புனிதநெறி இபுறுஹீம் கண்டநெறி
இசுலாம் நெறிதன்னை
இசுமாயில் சென்றவழி இகமுய்ய வந்தவழி
ஈடிலலா வழிதன்னை

மறையோதின் நாவினிக்கும் மண்டுமிரு காதினிக்கும்
மார்க்க மொழிதன்னை
மண்மீது சவமினிக்க மங்காது குணமினிக்க
மலர்ந்த ஒளிதன்னை

நிறைவான நெஞ்சிலிறை நம்பிக்கைத் திடத்தோடு
நேர்மைக் குணத்தோடு
நிகரில்லா வாழ்க்கையிலே நிறைவேற்றி எங்களது
நெஞ்சில் நிறைந்தோரே !

அறமோங்க அறிவொளிர அருளோங்க அன்புடனே
ஆடுக செங்கீரை !
அல்லா(ஹ்)வின் திருத்தூதே முல்லைப்பூஞ் சரமாக
ஆடுக செங்கீரை !

[illegible]
டைக்கியம் உண்டாக
ஆசையோ டகம்பாவம் அக்கிரமப் பேயெல்லாம்
அவனியில் திண்டாட

ஐவேளைத் தொழுகையினல் ஆத்மீக சாந்தியுடன்
அருங்குணம் உருவாக
அடக்கத்தோ டன்புகட னற்றும்பொ றுப்புணர்வு
அழகுற அமைவாக

ஐயாறு தினநோன்பு இரக்கத்தின் வித்தாக
அகந்தையும் மறைந்தோட
அருளான ஜக்காத்தால் பொருளாசை போய்நல்ல
அமல்செய மனம்நாட

ஐயமிலா மெய்பக்தி ஹஜ்ஜாலே மனம்விரிய
அருட்குணம் கனிவாக
அல்லா(ஹ்) வின் திருத்தூதே முல்லைப்பூஞ் சரமாக
ஆடுக செங்கீரை !

(4)

இபுலீசின் கட்சிப்பலர் இர்றதென அச்சமுடன்
இமிருணம் மிரண்டோட
இகமதில் பெரும்பாவம் இருந்துய்ய இடமின்றி
இடிந்தொடிந் தாண்டோட

அபுஜஹிலின் அறியாமை அகங்காரம் அட்டூழியம்
அடிமுடி யறுந்தோட
அநியாய அரக்கர்கள் அனுச்சார வெறியர்கள்
அடிபட விரைந்தோட

நபுசென்னும் மனயிச்சை விபசாரம் கயமைகள்
நல்வுற்று மெலந்தோட
நரிபோனும் நயவஞ்சம் திமிர்வாதம் மதுபோதை
நடமிடப் பயந்தோட

அபுலஹப் தோற்றோட அஞ்ஞானம் மறைந்தோட
ஆடுக செங்கீரை
அல்லா(ஹ்)வின் திருத்தூதே ஆணிப்பொன்
முத்தாக
ஆடுக செங்கீரை !

## (5)

பெற்றவரில் லனுதையாய்ப் பெருமைமிகு அல்அமினும்
பெறற்கரிய பெரும்பேருய்
பிரியமுடன் வளர்த்தோர்க்கும் உற்றவர்க்கும் மற்றவர்க்கும்
உறுதுணை நண்பருமாய்

நற்றவத்தின் நாயகராய் நல்லறத்தின் போதகராய்
நற்குணச் சீலருமாய்
நாணயத்தின் இருப்பிடமாய் வாணிகத்தின் புகழிடமாய்
நல்லறி வாளருமாய்

கொற்றவ ராப் மந்திரியாய் வீரமிகு தளபதியாய்க்
கொடைதரும் வள்ளலுமாய்
குணமுள்ள கணவருமாய்க் குடும்பத்தின் தலைவராய்
குடிப்பிறப் பிறப்பேதும்

அற்றவரின் தூதுவராய் அழகியமுன் மாதிரியாய்
அணிபெறும் பெருமானே !
அல்லா(ஹ்)வின் தூதுவரே, ஆணிப்பொன் முத்தாக
ஆடுக செங்கீரை !

## (6)

### வேறு

பொன்னொளி மேனியில் கஸ்தூரி வாசனை
முழுநில வழகோடு
பூகடல் அலையெனப் புறஞ்சுருள் தலைமுடி
பதினெழு நரையோடு

முன்நுதல் அகன்றடர் புருவங்கள் மத்தியில்
வெள்ளியின் விரிப்போடு
மின்னெனக் கண்ணொளி செவ்வரி கருவிழி
மதிகதி ரொளியோடு

முன்னிலே நீண்டதன் முனையிலே சாய்ந்திடும்
முச்செழில் அமைப்போடு
மலரொளி முத்தங்கள் கறுப்புடன் கன்னங்கள்
மனங்கவர் எழிலோடு

அன்பெனும் நெறியினில் அனைவரும் ஒன்றிட
ஆடுக செங்கீரை
அருமறை முஹம்மது திருநபி, புகழுடன்
ஆடுக செங்கீரை!

(7)

படர்ந்தொரு தசைதட்டா மழமழ வெண்ணொளிர்
பளிங்குபோல் மார்போடு
பார்த்தவர் மனங்கவர் முடிவளர்ந் தடர்ந்தெழில்
பொலிந்திடுந் தோளோடு

முடிபடர் வலதுதோள் எலும்பரு காமையில்
முத்திரைக் குறியோடு
முடியுடன் கருமஞ்சள் நிறத்துடன் அதைச்சுற்றி
முகிழ்ந்திடும் மருவோடு

சுடரொளி திகழ்ந்திடும் சதைபற்றிச் செறிந்திடும்
சுந்தரக் கையோடு
சுகமணை உள்ளங்கை சதையுடன் பாதங்கள்
சிறப்புறு காலோடு

ஆடிடா மடமைகள் அழிந்திடக் களிப்புடன்
ஆடுக செங்கீரை
அருமறை முஹம்மது திருநபி புகழுடன்
ஆடுக செங்கீரை!

( ; )

அறநிலை திரிந்திட அறிவொளி மழுங்கிட
ஆணவம் பெரிதாக
அன்புடன் அருளினை பண்புடன் பரிவினை
ஆசையே பசியாற

சிறப்பினை மறந்துசிற் றின்பத்தி லாழ்ந்துநல்
லில்லறம் பாழாக
இரக்கமில் லரக்கராய் இதயமில் வெறியராய்
இழிநெறி மேலாக

முறையினை மறந்துமுன் மரபினை யிழந்துபெண்
மதிப்பினைக் கருதாது
மோகத்தி லாழ்ந்துவீண் போகத்தில் வீழ்ந்திழி
மிருகமா யலைந்தோரை

அறவழி காட்டிநல் விறைநெறி யூட்டினீர்
ஆடுக செங்கீரை
அருமறை முஹம்மது திருநபி மகிழ்வுடன்
ஆடுக செங்கீரை!

(9)

கொன்றிட வந்தவர் கண்திறந் தழகிய
கொள்கையில் சேர்ந்திடவே
குடித்தவர் திருந்தியே குவலயம் திருந்திட
குணமுடன் ஏகிடவே

குன்றெனக் குற்றமே புரிந்தவர் நாணியே
குழைந்தழு தேங்கிடவே
குற்றங்கள் புரிந்தவர் தண்டனை தேடியே
கொற்றவை நாடிடவே

மன்றினில் மனிதர்கள் புனிதராய் மாறியே
மார்க்கத்தைப் பற்றிடவே
மன்னரும் மக்களின் நிதியினைத் தீண்டிடா
மகிமையைப் பெற்றிடவே

அன்றலர் மலரொளி சிந்திடும் வதனமே
ஆடுக செங்கீரை
அருமறை முஹம்மது திருநபி மகிழ்வுடன்
ஆடுக செங்கீரை!

## (10)

காற்றினில் கீற்றினில் நாற்றினில் பாட்டினில்
கடலினில் அலையொலியில்
கதிரினில் மதியினில் காட்டினில் மேட்டினில்
கவர்ந்திடும் இயற்கையினில்

ஆற்றினில் கழனியில் அருவியில் சுனையினில்
அகழியில் ஆழ்கிணற்றில்
ஆலையில் சோலையில் பாலையில் தீவினில்
அதிர்வினில் எதிரொலியில்

ஊற்றினில் ஏரியில் வருநீர் பரப்பினில்
உலகத்தின் எண்திசையில்
உறுமிடும் இடியினில் முகிலினில் மழையினில்
உம்பரின் உலகெங்கும்

ஆற்றலில் வெளியெலாம் ஒலித்திடும் நபிமணி
ஆடுக செங்கீரை
அருமறை முஹம்மது திருநபி மகிழ்வுடன்
ஆடுக செங்கீரை!

# 3. தாலப் பருவம்

## வேறு

வானக் கதிரின் காற்றினிலே
வண்ண வில்லைப் பொருத்தியந்த
வல்லோ னமைந்த தொட்டிலிலே
வளரும் பிறையே, தாலேலோ!

தேனே, உமக்குப் பாட்டிசைக்கத்
தெவிட்டாக் குயிலும் இசைந்ததுவே
திங்கள் ஒளிரும் சடந்தொட்டுத்
தென்றல காற்றும் வீசியதே

கான மயிலும் உமக்கென்றே
கவினுர் நடனஞ் செய்ததுவே
காவின் மலரும் உம்மொழியில்
கமழ்மணம் பெற்று மலர்ந்ததுவே!

தீனின் ஒளியே, உம்பொருட்டே
தேவன் எல்லாம் படைத்திட்டான்.
திரளும் மேகம் குடை பிடிக்கும்
தீம்பா லமுதே, தாலேலோ!

(2)

அன்னை ஆமினா தாலாட்ட
அன்பே, உறங்கு தாலேலோ!
அப்துல் லாவின் குலக்கொடியே,
அரும்பே, உறங்கு தாலேலோ!

முன்னே சென்ற தந்தையவர்
முகம்பா ராயே, தாலேலோ
முத்தே, முகையே, முக்கனியே,
முகிலே, தாலோ தாலேலோ

பின்னே சென்ற அம்மையவர்
பிஞ்சுக் கரும்பே பெற்றவரைப்
பிரிந்தா லென்ன? புவியுந்தன்
பின்னே வருமே, தாலேலோ!

சின்ன மலரே, செம்பவளம்
சிந்தும் அழகே தாலேலோ
சொர்க்கத் தொளியே, மக்கநகர்
சுடரே, தாலோ தாலேலோ!

(3)

பாச மலராம் அலிமாபால்
பருகும் திருவே, தாலேலோ!
பழகும் பண்பால் அல்அமினப்
படரும் கொடியே, தாலேலோ!

நேசக் கரமே வணிகத்தின்
நேர்மை விளக்கே, தாலேலோ!
நிகரில் கதிஜா பணங்கொண்ட
நித்தில மணியே, தாலேலோ!

மாசில் லொளியே; ஹீராவின்
மாதவக் கொழுந்தே, தாலேலோ!
முதல்வன் அருளால் மறைதந்த
முத்திரை நபியே, தாலேலோ!

தேசு[1] நிறைந்த மக்கநகர்
துரையே தாலோ தாலேலோ!
சொர்க்கத் தொளியே, செழுமழையே,
சுவையே, தாலோ தாலேலோ!

(4)

நிலைப் பொருளை இறையென்று
நித்தம் வணங்கும் பலதெய்வ
நெறியை நம்பும் மக்களைநன்
நெறியில் திருப்ப உளங்கொண்டு

விண்ணும் மண்ணும் கதிரொளியும்
கடலும் நெருப்பும் மதியொளியும்
காற்றும் மழையும் தெய்வ மில்லை,
காட்சிப் பொருளே, அழிபொருளே!

அல்லாஹ் ஒருவன் தானிறைவன்
அவனே வணக்கத் தவனே தகுதியோன்
என்றே சாஃபா குன்றேறி
இகத்தை அழைத்தோய், தாலேலோ!

இல்லை வல்ல இறையோனின்
ஏவல் மலைக்கு மலர்தூவ
இன்ப ஊற்றே, மக்கநகர்
எழிலே, தாலோ தாலேலோ!

1. தேசு — ஒளி

## (5)

கல்லால் அடித்தோர் கரையேறக்
கலத்தை யமைத்தீர், தாலேலோ!
கண்ணின் மணியே, குப்பையிட்டோர்
கண்ணைத் திறந்தீர், தாலேலோ!

சொல்லா லடித்தோர் சுகங்காண
சோலை யமைத்தீர், தாலேலோ!
சமுகம் விட்டுத் துரத்தியவர்
சாந்திக் குழைத்தீர், தாலேலோ!

பல்லை உடைத்தோர் வாழ்க்கையிலே
பாலை வார்த்தீர், தாலேலோ!
பாதை தன்னில் முள்ளிட்டோர்
பாவம் துடைத்தீர், தாலேலோ!

கொல்ல வந்த பாவியர்க்கும்
குணத்தைத் தந்தீர், தாலேலோ!
குறைஷி குலத்தேன், மக்கநகர்
கோவே, தாலோ தாலேலோ!

## (6)

இதய மலராம் கதிஜாவை
இழந்தும் அயரீர், தாலேலோ!
இனிதே வளர்த்த அபுதாலைப்
இறந்துங் கலங்கீர், தாலேலோ!

சதிகள் எதற்கும் அஞ்சாத
சத்திய சோதி, தாலேலோ!
சுடர்வாள் மனையைச் சூழ்ந்தாலும்
சோரா நெஞ்சே, தாலேலோ!

பயதிரம் மக்கா நகர்விட்டு
படரும் கொடியே, தாலேலோ!
பதுங்கும் தௌரில் சிலந்தியதால்
படைத்தோன் அருளின் பெருக்கென்னி

புதிய மதிஞ நகர்தன்னில்
புண்ணியம் சேர்த்தீர், தாலேலோ
புகழோன் நெறியே உயிரென்று
போற்றும் நபியே, தாலேலோ!

(7)

எளிய மஸ்ஜித் நபவியை
எழுப்பி மார்க்கம் போதித்தே
எழிலார் இஸ்லாம் குடியரசு
இனிதே கண்டீர், தாலேலோ!

புளிய பழம்பே ரீத்தத்துடன்
புகுந்தாற் போல தீ ஞரில்
பொல்லார் யூதரு டன்சேர்ந்து
புரிந்த புன்மை பொறுத்தீரே!

ஒளியே, நஞ்சை உணவோடே
ஒன்று யிட்ட ஜைனப்பை
ஒறுவா தன்றே மன்னித்த
உத்தம குணமே, தாலேலோ!

வளரும் தருவே, நாணயத்தின்
வார்ப்பே, தாலோ தாலேலோ!
மண்ணின் மதியே, மதினநகர்
மணமே, தாலோ தாலேலோ!

## (8)

அரும்பும் தீனை வேரறுக்க
ஆயிரம் பகைவர் பதுர்ப்போரில்
அருமைத் தீனோர் முன்னூறுவர்
அடைந்தீர் வெற்றி, தாலேலோ!

பொருது தோற்ற பகைவெள்ளம்
பொங்கிப் பாயும் உஹதினிலே
பொல்லா வாசைக் கிறைபாடம்
போதித் தானே, தாலேலோ

பெருகுங் கடல்போல் குறைஷியர்கள்
பெருமை தீனோர் மூன்றிலொரு
பங்கே, அல்லாஹ் அகழ்போரில்
படைத்தான் வெற்றி தாலேலோ!

மருளும் நெஞ்சில் உறுதிதரும்
மறையின் விளக்கே, தாலேலோ!
மண்ணின் மதியே மதினநகர்
மணமே, தாலோ தாலேலோ!

## (9)

நபி வென்று [illegible]
களத்தில் குருதி பாயாமல்
கருணை யோடு மக்காவை
கைப்பி டித்தீர், தாலேலோ!

மருவி யஞ்சி நின்றோரை
மருளேல், காய்ந்த ரொட்டியுண்ட
மாதின் மகனே யானென்று
மருட்சி களைந்தீர் தாலேலோ!

அருமைத் தோழர் தமைக்கொன்ருேர்
அன்புத் தீனுக்கு ஊறுசெய்தோர்
அறியாப் பாவம் பலபுரிந்தோர்
அனைத்தும் பொறுத்தீர், தாலேலோ !

மருந்தே பாவ நோயோட்டும்
மறையின் விளக்கே, தாலேலோ !
மண்ணின் மதியே, மதினநகர்
மணமே, தாலே தாலே லா !

(10)

சுற்றுக் காவல் கதவின்றிச்
சுகபோ கங்கள் செலவின்றிச்
சுற்றி எடுபிடி ஆளின்றிச்
சுயவி ளம்பரம் செருக்கின்றிப்

பற்று மின்றிப் பாசத்துடன்
பகட்டு மின்றிப் பரிவோடு
பசியும் பிணியும் பாவங்க[illegible]
[illegible] இன்மை நெறி[illegible]

[illegible]ற்றித் தீனின் குடியரசின்
வேந்த ராகி இறையோனின்
வேத வொளியில் எளிமையுடன்
விண்ணேர் வியக்க ஆண்டநபி !

சுற்றி வானேர் சீராட்ட
சுவர்க்கப் பெண்கள் தாலாட்ட
சுவனப் பதியின சுடரொளியே,
சுகமாய் உறங்கும் தாலேலோ !

# 4. சப்பாணிப் பருவம்

## வேறு

உண்ணாத கடல்நீரை உண்கின்ற மழையாக்கும்
ஒப்பில்லா முகில்வண்ணமே !
உடல்தாளாக் கதிர்வாங்கி இதமாகத் தருகின்ற
உயர்வான மதிவண்ணமே !

மண்ணூட்டும் எந்நீரும் சுவையூட்டும் இளநீராய்
மகிழ்ந்தூட்டும் மரவண்ணமே !
மண்ணோர்கள் தோண்டினென் அன்னோர்க்கே
வளமூட்டு
மங்காத மண்வண்ணமே !

புண்ணாகி மனம்நோகப் பொல்லாங்கு செய்தோரைப்
பொறுத்தோரே நபிநாதரே !
புழுவாக உழன்றோரைப் பூவாக மணம்வீசப்
புதுப்பித்த இறைத்தூதரே !

தாண்டாத பாவங்கள் தரைமீது மறைந்தோட
தருமத்தை நாட்டுங்களே !
சன்மார்க்க ஒளியாலே துன்மார்க்க இருளோட
சப்பாணி கொட்டுங்களே !

(2)

அல்லா(ஹ்)வே புகழ்ந்தேற்றும் அரியநற்குணங்கொண்ட
அருள்வேத உரையாக்கமே !
அமைந்தநற் துணைவியர் அன்போடு பாராட்டும்
அழகான குணவாக்கமே !

இல்லார்க்கு இரங்கியே எளிமையாய் விளங்கியே
இகமாளும் எழிலாக்கமே !
இத்தரையில் சத்தியமே நித்தியமென் றோதுகிற
இதயத்தின் ஒளியாக்கமே !

அல்லா(ஹ்)வின் வேதத்தின் சாரத்தைத் திரட்டியோர்
அணுவாக ஆக்கியதிலே
அமைதியே உருவாக ஆழகுநற் றிருவாக
அமைகின்ற இறைத்தூ தரே !

சல்லாபம் வேண்டாம்வீண் சந்நியாசம்வேண்டாம் நற்
சற்குணத்தை நாடு(ம்) நபியே !
சன்மார்க்க ஒளியாலே துன்மார்க்க இருளோட
சப்பாணி கொட்டுங்களே !

(3)

கடனுக்காய் வட்டியினைக் கைநீட்டிப் பெறுபவனே
கயவனும் என்றநபியே !
கடன்தன்னை ஒழுங்கோடு திருப்பிக் கொடுப்
போனே
கண்ணியவான் என்றநபியே !

உடல்வேர்வை உலருமுன் உழைப்போனின் கூலிகொடு
உவப்பாகும் என்ற நபியே !
உண்மையுடன் வஞ்சமின்றி உழைப்பதுவே உயர்
வென்றே
உலகோர்க்குச் சொன்ன நபியே !

உடல்பார்க்கும் தொழிலாலேஉருவாகும் பேதத்தை
உளமாரச் சாடும் நபியே !
ஒழுக்கந்தான் உயர்வென்றும் ஒழுங்கின்மை தாழ்வென்றும்
உணர்த்திட்ட வேந்தர்நபியே

சடங்கெல்லாம் வீணென்றும் சத்தியமே நலமென்றும்
சாத்வீக வழிசொல்லியே
சன்மார்க்க ஒளியாலே துன்மார்க்க இருளோட
சப்பாணி கொட்டுங்களே !

## 4

## வேறு

மக்காவில் ஹஜ்ருல் அஸ்வத்தால் விளைந்த
மாபெரும் கலகத்தையே
மதிநுட்பத் தாலே நியாயமாய்த் தீர்த்த
மண்போற்றும் மாணிக்கமே !

விக்ரஹம் வணங்கும் மாற்றோரும் விரும்பும்
விதமாக வழக்குகளை
வேற்றுமையின்றிப் பொதுவாகி நின்று
விசாரிக்கும் நீதிபதியே !

மக்ஜூமு வர்க்க சீமாட்டி திருட்டை
மறைக்கின்ற குறைஷியர்முன்
மகளான பாத்தி மாவென்றபோதும்
மாறாது நீதியென்றே

இக்கெல்லாம் விளங்க நியாயத்தை வழங்கித்
திகழ்கின்ற தேனமுதே !
தீயோர்கள் ஏற்ற வானோர்கள் போற்ற
சப்பாணி கொட்டுங்களே !

(5)

இனிதான முறுவல் எப்போதும் தவழ
எதிர்நோக்கும் எழில்வேந்தரே !
எதிர்வந்த எவர்க்கும் சலாஞ்சொல்ல முந்தும்
இயம்பான குணவேந்தரே !

மனதாலுந் தன்னை மேலாக எண்ணி
மயங்காத பேரண்ணலே !
மண்மீது ஏவல் புரிவோரை மதிக்கும்
மன்னர்க்கும் மாமன்னரே !

கனிவான குழந்தை கண்டாலே போதும்
களிப்பேந்தும் அருளாளரே !
கந்தையை உடுத்திக் காசினி யாண்ட
கருணையின் விரிவாளரே !

தினையேனும் ஆண்டான் அடிமையென றேதும்
திரிபேற்கா நபிநாதரே !
தீனோர்கள் ஏற்ற வானோர்கள் போற்ற
சப்பாணி கொட்டுங்களே !

(6)

வேறு

இறைவ னுக்காய் நட்பாடி
இறைவ னுக்காய்ப் பகையாகி
இறைவ னுக்காய் வாழ்வதுதான்
இறைவ னேற்கும் ஈமானும் !

சிறையாம் உலகம் மூமினுக்கு
சொர்க்க மாகும் காபிருக்கு !
சோத ரனையே தன்னைப்போல்
சோதிக்காதான் விசுவாசம்

குறையாம்; நன்மைக் காய்மகிழ்ந்து
குற்றத் திற்காய் வருந்துவதே
குன்று ஈமான் என்றநபி !
குன்றும் அசையும் அசையாத

இறைநம் பிக்கைப் பலங்கண்டே
இகமே போற்றும் அற்புதமே !
ஈமான் விளக்கே எழிற்கரத்தால்
இனிதே கொட்டுங்கள் சப்பாணி !

(7)

உறையின் வாளை உருவியவன்
ஓங்கு முன்னே, இப்பொழுதுன்
உயிரைக் காப்போன் யாரென்றே
உரத்த குரலில் கேட்டதுமே,

இறைவன் அவனே ஒருவன்தான்
என்னை உன்னை இவ்வுலகை
என்றுங் காப்போன் " என்றுரைத்த
இதய மலரே, எம்மானே !

இறைவன் பெயரைக் கேட்டதுமே
எடுத்த வாளும் வீழ்ந்திடவே
இளைஞன் அன்றே அப்பொழுதே
இஸ்லாம் மார்க்கம் ஏற்றனனே !

இறைநம் பிக்கைப் பலத்தாலே
எதையும் வெல்ல வழிகாட்டும்
ஈமான் விளக்கே, எழிற்கரத்தால்
இனிதே கொட்டுங்கள் சப்பாணி !

(8)

அரும்பைக் கொல்லத் துணிந்தபெரும்
அரக்கர் வெளியில் வாளுடனே
அஞ்சும் இருளில் கொலைவெறியில்
அலையும் வேளை தௌர்குகையில்

"இரும்பை ஒத்தார் இருள்மனத்தார்
எண்ணில் லாதோர் தெரிகின்றார்!
இருவர் தானே நாமிங்கே
என்செய் வோ"மென் றபுபக்கர்

பெரும்ப யத்தால் கேட்டதுமே
"பெருமைக் குரிய இறைவனைப்
போதும் மறவல் மூவ ருள்ளோம்:
புனிதன் காப்பான்" என்றுரைத்ததே

இரும்பு நெய்த வைத்தநபி
இடிவீழ்ந் தாலும் இறைமறவா
ஈமான் விளக்கே எழிற்கரத்தால்
இனிதே கொட்டுங்கள் சப்பாணி!

(9)

"மண்ணி னாட்சி வழங்கிடுவோம்
மானாச் செல்வம் அளந்திடுவோம்
மாபே ரழகி பரிசளிப்போம்
மார்க்கக் கொள்கை மற"வென்றே

கண்ணில் லாதோர் பலசொல்லிக்
கரைத்துங் கரையா உத்தமரே!
கடலே பொங்கி யெழுந்தாலும்
கலங்கா தொளிரும் சத்தியமே!

“விண்ணின் மதியைப் பெயர்த்தெடுத்து
விருந்தாய்த் தந்த போதிலுமே
வேதஞ் சொல்லுங் கொள்கைவிட்டு
விலகேன்” என்ற நாயகமே!

எண்ணில் லாத சோதனைகள்
எதிர்த்து வென்ற இறைத்தூதே!
ஈமான் விளக்கே, எழிற்கரத்தால்
இனிதே கொட்டுங்கள் சப்பாணி!

(10)

பாலை மணலில் இழுத்தாலும்
பாவி கசையால் அடித்தாலும்
பகரும் ‘அஹதுன்’ விட்டிசையாப்
பிலாலைப் போன்று திடம்பெறவே

காலைக் கட்டி ஒட்டகத்தால்
கவடு கிழிய இழுத்தாலும்
கயவர் உயிரைப் பறித்தாலும்
கலங்கா யாசிர் உரம்பெறவே

சூளை நெருப்பில் மல்லாத்தி
சூழ்ச்சி வல்லார் சுட்டாலும்
தூய மார்க்கம் விட்டகலாத்
துணிவைக் கப்பார் போல்பெறவே

தோலைக் கரும்பாய்த் துவண்டாலும்
‘அஹதுன்’ மறவா உளம்பெறவே
ஈமான் விளக்கே எழிற்கரத்தால்
இனிதே கொட்டுங்கள் சப்பாணி!

# 5. முத்தப் பருவம்

பாரினில் நாளுமே ஊறிடும் பேதமே
பகலினை விரட்டிடும் புலியாய்
பணமினம் நிறம்பலம் பலவகைப் பிரிவினால்
பணிகொள்ளும் வேளையில் "உன்னதி

காரியாய் இருப்பவன் மூக்கழு கிடுமிழி
றபஷியர் குலத்தவன் எனினும்
கசப்பிலா தவனிடும் பணியினைச் செய்திடல்
கடமை"யென் றோதிடும் நபியே!

பேரிருள் நிறத்தவன் நீக்ரோ குலத்தவன்
பிலாலினை மூதன்முத லாகப்
பாங்கினைச் சொல்லிடச் செய்துநல் விகலாம்
பண்பினை விளக்கிடு வீரே!

வாரியே வழங்கிடும் உள்ளமே மெல்லிதழ்
வழங்கிடும் இன்பமே தருவீர்!
வறுமையை விரும்பியே இறைவனை வேண்டிடும்
வள்ளலே, வாய்முத்தம் அருள்வீர்!

(2)

துஞ்சிடும் போதினில் விருந்தினன் கழித்த
தொட்டிடக் கூசிடும் மலத்தை
தும்பைப்பூ போன்றெழில் பொங்கிடும் கரத்தினால்
துப்புர வாக்கிய நபியே!

அஞ்சிடும் நெஞ்சுடன் அவையினில் ஒதுங்கியே
அமர்ந்திடா ஏழையின் தோளை
அன்பினைச் சிந்திடும் கரத்தினால் அணைத்துதம்
அருகினில் அமர்ந்திடச் செய்தீர்!

பஞ்சினும் மெல்லிய பிஞ்சிதழ் கூப்பியே
பாறையாம் உழைத்திடும் கையில்
பரிவுடன் முத்திட்டு, 'உழைத்திடுங் கரங்களே
பாக்கிய மாகிடும்'' என்றீர்!

விஞ்சையர் வேந்தரே எமக்கொரு முத்திட்டு
விதனம்1 மறைந்திடச் செய்வீர்!
வறுமையை விரும்பியே இறைவனை வேண்டிடும்
வள்ளலே, வாய்முத்தம் அருள்வீர்!

1. விதனம் — மனத்துயர்

(3)

''பகலவன் வெம்மையால் குதிரையில் சென்றிடும்
பயணிதன் களைப்புடன் சிறிது
பசுமர நிழலினில் தங்கிடல் போன்றதே
பாரினில் வாழ்க்கையாம்'' என்றீர்!

அகத்தினில் பொருளிலா வறுமையில் பலதினம்
அடுப்பினை மூட்டிடா நிலைமை
அடுத்தவர் வறுமையைப் போக்கிட நாளுமே
அவனியல் அயரா துழைத்தீர்!

மகளரும் பாத்திமா கழுத்தினில் பளிச்சென
மின்னிடும் பொன்னணி கண்டு
"மேனியை எரித்திடும் நரகத்தின் நெருப்"பென
மேதினிக் கறிவுரை தந்தீர்!

வகித்து[1] மண் குடிசையில் வாழ்ந்துல காண்டுநல்
வளமாம் சொர்க்கத்தைக் கண்டீர்!
வறுமையை விரும்பியே இறைவனை வேண்டிடும்
வள்ளலே வாய்முத்தம் தருவீர்!

1. வகித்து — பொறுத்து

(4)

பகட்டுடன் பட்டும் பொன்னணி யிட்டும்
பரவசம் கொண்டிடாப் பெற்றி
பூவிதழ் மெய்யில் முரட்டுடை சுற்றி
பூரிக்கும் நபிச்சக்ர வர்த்தி!

அகன்றதோர் ஸ்தூபி மனையினைக் கண்டே
அகத்தினில் வருத்தமே கொண்டே
" அளவுக்கு மேலே கட்டுவ தாலே
அவதியே மிஞ்சிடும் " என்றீர்!

மகள்விருந் தேற்று மனமகிழ் வுற்று
மனையினை அடைந்தலங் கார
மறைசலைக் கண்டு வருத்தமே கொண்டு
மகளினைத் திருத்திடும் தூதே!

இகல்பகை வெல்லும் உமறுவின் உள்ளம்
இளகிடும் வறுமையின் கோலம்!
ஏந்தலே, எந்தன் இதயமே இன்பம்
ஏந்திட முத்தமய தாரீர்!

(5)

" உடலினைப் போன்ற சமூகத்தில் புண்ணால்
உறுப்பொன்று நொந்திடும் போதில்
உடலெலலாம் நோவால் துயருறு''மென்றே
உறவினை வளர்த்திடுங் கோவே!

' அடுத்தவர் வீட்டில் நெருப்பினைக் காணா
அடுப்பினை கண்டவர் துன்பம்
அகற்றிடா துன்போன் அழகிய மூமின்
ஆகிடா'' னென்றிடும் நாரே!

" கொடுப்பவர்க்(கு) அல்லாஹ் குறையின்றி ஈவான்;
குவிந்திடும் பொன்னடிமைக்குக்
கொடியதோர் சாபம் தொடர்ந்திடு'' மென்றே
குணத்தினை வழங்கிடும் சோதி!

" இடக்கரங் காணா வலக்கரம் ஈயும்
ஈகையே சிறந்தது'' என்னும்
ஏந்தலே, எந்தன் இதயமே யின்பம்
ஏந்திட முத்தமே தாரீர்!

(6)

வேறு

பகுத்தல் கொடுத்தல் விருந்தோம்பல்
பண்பு நலன்கள் யாவையுமே
பாட மாகப்பரிமளிக்கப்
பாங்காய் வாழ்ந்த பெருமானே!

பகுரைன் தேசப் பொருளெல்லாம்
பகுத்துக் கொடுத்து வெறுந்துணியைப்
பளிங்குத் தோளில் போட்டில்லம்
பார்த்து நடந்த பூமானே!

வெகுவாய் வலீமா விருந்துக்கு
வேண்டிக் கொண்ட சஹாபிக்கு
வீட்டுக் குணவாய் இருந்ததனை
விரும்பிக் கொடுத்த கோமானே !

இகலார் ! போற்றும் பண்பாடே
இலங்கும் இதய நாயகமே!
ஏந்தல் நபியே, மெல்லிதழால்
இனிக்கும் முத்தம் தருவீரே ?

இகலார் - பகைவர்

(7)

தாம டைந்த பொருளெல்லாம்
தானம் செய்யா விடிலுணவில்,
ஊக்கம் கொள்ளா துள்ளத்தில்
துக்கங் கொள்ளும் நாயகமே !

மாம லையாம் உஹுதேதான்
மாறிப் பொன்னாய் வந்தாலும்
மூன்றே நாளும் தருமத்தில்
முழுதும் கரைக்கும் நாயகமே !

காமத் சொன்ன போதிலுமே
கரத்தை நீட்டி வேண்டியவன்
கருத்தை அறிந்து குறையெல்லாம்
களைந்து தொழுத நாயகமே !

ஏமம் சாமம் எப்பொழுதும்
ஈதல் மறவாப் பெருமானே !
ஏந்தல் நபியே, மெல்லிதழால்
இனிக்கும் முத்தம் தருவீரே !

(8)

நல்லஸ் ஹாபுஸ் ஸஃப்பாக்கள்
நச்சுப் பசியால் நலிகின்ற
நரக வறுமை கண்டவரை
நயந்து காத்த நாயகமே!

கொல்லும் பசியில் மிக்தாதின்
கூட்டம் கண்டே ஆட்டின்பால்
கொடுத்து யென்றும் பசிதீரக்
கொடைதந் துவந்த நாயகமே!

"நல்ல தல்ல இரந்துண்ணல்
நன்றும் விறகு வெட்டியதை
நாளும் விற்று வாழ்வ"தென்று
நயமாய்ச் சொன்ன நாயகமே!

இல்லை யென்று தள்ளித்தரும்
ஈகை வேந்தே. பெருமானே!
ஏந்தல் நபியே, மெல்லிதழால்
இனிக்கும் முத்தம் தருவீரே!

(9)

"மலையின் வலிதாம் இரும்பதனை
மாற்றும் தீயோ மாவலிது
மாயாத் தீயை அணைக்கும்நீர்
மண்ணில் வலிதே எனினுமதை

அலைக்கும் காற்று மிகவலிதே
அதனின் வலிது யெதுவென்றால்
ஆதம் பெற்ற பிள்ளைகளின்
அள்ளிக் கொடுக்கும் உள்ளமெ"ன.

உலகைப் படைத்த இறையோனே
உரைத்தான் வானோர்க் கொன்றெங்கள்
உள்ளம் நிறைய நல்லறங்கள்
உணர்த்தும் நபிகள் நாயகமே!

இலம்பை[1] யோட இருப்பெல்லாம்
ஈயும் வள்ளல் பெருமானே!
ஏந்தல் நபியே மெல்லிதழால்
இனிக்கும் முத்தம் தருவீரே!

1. இலம்பை — வறுமை

(10)

ஆவின் பாலும் கனியமுதும்
அருந்தேன் கரும்பும் கற்கண்டும்
ஆட்டின் இறைச்சி மீன்குழம்பும்
அறுசுவை உணவும் விரும்பேனே!

பூவின் மணமும் புதுப்பன்னீர்
புகையும் அகிலும் சந்தனமும்
பரிமள வாசனைத் திரவியங்கள்
பற்பல அத்தரும் வெறுத்தேனே!

கூவும் குயிலும் வண்டிசையும்
குழலும் யாழும் ஏழிசையும்
கிளியின் பேச்சும் கிண்ணரமும்
கீழ்மேல் நாட்டுப் பண்ணிசையும்

பூவின் ஆட்சி பொன்மணியும்
பூவை சுகமும் வேண்டேனே!
புனித நபியும் முத்தமே
பொழுதும் வேண்டி நிற்பேனே!

# 6. வருகைப் பருவம்

தூய்ய வாழ்க்கைத் துலக்கமே !
துயரக் கடலில் விளக்கமே !
தொடரும் வழிக்கோர் இலக்கமே !
துளியும் குறைபா ஒழுக்கமே !

மெய்யாம் வைரம் விளங்கவே
மினுக்கும் வைரம் விளங்கவே
மினுக்கும் பொய்கள் மழுங்கவே
மனிதச் சோலை மணக்கவே
மறையின் நாதம் முழக்கவே

கையும் காலும் உழைக்கவே
கயமை சோம்பல் அறிக்கவே
கடமை நெஞ்சில் சுரக்கவே
கண்ணில் காட்சி இனிக்கவே

வையத் தாசை வெட்டவே
வாக்கும் செயலும் ஒட்டவே
வாழ்க்கைப் பாடத் திட்டமே
வருக, வருக, வருகவே !

(2)

அளவும் நிறையும் அமையவே
அசலும் நகலும் புரியவே
அழிக்கும் வட்டி அகலவே
அருமை நபியே, வருகவே !

களவு காமம் மறையவே
கள்ளும் கொலையும் விலகவே
கல்வி யோங்கி வளரவே
ஹாஷிம் குலத்தேன், வருகவே !

பிளவு பேதம் நீக்கவே
பித்தம் பேயைப் போக்கவே
முஹாஜிர் அன்ஸார் போலவே
முஸ்லிம் மக்கள் வாழவே

வளமும் நலமும் சூழவே
வண்ணப் பூவே, வருகவே !
வாழ்க்கைப் பாடத் திட்டமே,
வரிசை நபியே, வருகவே !

(3)

நெஞ்சில் கலிமா நிறையவே
நேசக் கயிற்றைப் பற்றவே
நெருங்கி நின்று தொழுகவே
நெறியோர் உறவு வளரவே

பஞ்சம் பசியை உணரவே
பண்பாய் நோன்பு யிருக்கவே
பசியும் பிணியும் விலகவே
பரிவாய் ஜக்காத் வழங்கவே

விஞ்சி யுள்ளம் விரியவே
விரும்பி ஹஜ்ஜு புரியவே
உயிரும் உடலும் வளரவே
ஒருவன் தனக்கே பணியவே

வஞ்ச நெஞ்சம் உருகவே
வாஞ்சையோட ஓதவே
வாழ்க்கைப் பாடத் திட்டமே,
வாகாய் நடந்து வருகவே !

(4)

குடியின் நிதியை எடுக்கவே
கூசும் மதத்தைக் கொடுக்கவே
கூடும் வருவாய் தன்னையே
கொற்றேன் அவையில் சேர்க்கவே

கொடிய வறுமை நசுக்கவே
கொள்கை தன்னைச் சுமக்கவே
குறைவி லுணவு ஆடையே
குடும்பந் தோறும் ஈயவே

உடமை யெல்லாம் வழங்கவே
உதவும் எண்ணம் வளரவே
உமறு புபக்கர் போலவே
உள்ளம் சிறக்க வாழவே

வடியும் கண்ணீர் துடைக்கவே
வள்ளல் தபியே, வருகவே !
வாழ்க்கைப் பாடத் திட்டமே,
வாஞ்சை யோடு வருகவே !

(5)

அணியும் ஆடை கிழிசலை
அறுந்த செருப்பைத் தைத்துமே
ஆவின் பாலைக் கலந்துமே
அழகுக் கைகள் மிளிரவே

அணியின் தலைவ ராயினும்
அடியா ரோடு சேர்ந்துமே
அகழைத் தோண்டும் வேளையில்
அள்ளி மண்ணைச் சுமந்துமே

பணியில் இல்லை இழிவென்றே
பாரில் செய்து காட்டியே
பண்பு நபியே, அருளவே
பரிவாய் நடந்து வருகவே!

வணிதம்1 செய்து வாழ்க்கையில்
வனப்பைத் தந்த பெருமானே!
வாழ்க்கைப் பாடத் திட்டமே
வளமே, நலமே, வருகவே!

1. வணிதம் — செப்பம்

(6)

வேறு

திருவே வருக! மெஞ்ஞானத்
தெளிவே வருக! சன்மார்க்கத்
தேனே வருக! சமுதாயத்
தெம்பே வருக! இறையோனின்

அருளே வருக! புவிபோற்றும்
அறமே வருக! மண்ணுட்டா
அறிவே வருக! தெவிட்டாத
அமுதே வருக! தீனிஸ்லாம்

முருகே வருக! நம்பிக்கை
முகையே வருக! நற்பண்பின்
முத்தே வருக! நல்வாழ்வின்
முகிலே வருக! நல்லறத்தின்

தருவே வருக! ஒப்பிலாத்
தவமே வருக! வருகையால்
தழைக்கும் உலகம் மகிழவே
தாஹா நபியே, வருகவே!

## (7)

சீரே வருக! வேதத்தின்
செறிவே வருக! விஞ்ஞானச்
சிறப்பே வருக! வியனுலகச்
செழிப்பே வருக! நெஞ்சத்தின்

ஏரே வருக! நாணயத்தின்
இருப்பே வருக! நல்லொழுக்க
ஏடே வருக! நானிலத்தின்
ஏந்தல் வருக! திண்மைமிகு

மேரே வருக! புண்ணியத்தின்
மிசையே வருக! புனிதவொளி
மணியே வருக! புகழ் சிந்தும்
மலரே வருக! விண்ணொளிரும்

நூரே[1] வருக! மிஹ்றாஜின்
நுதியே[1] வருக! பூவடைந்த
நிலவே வருக! புன்னகைக்கும்
நபியே வருக! வருகவே!

1, நுதியே — புகழ்

(8)

பூவே வருக! நெருப்புநக்காப்
பொன்னே வருக! இறையீந்த
புலமே வருக! எளிமைமிகு
புனேவே வருக! வாடாப்பூங்

காவே வருக! கோதுபடாக்
கனியே வருக! கொள்கைபூங்
காற்றே வருக! குவலயத்தின்
கண்ணே வருக! சீர்மணக்கும்

பாவே வருக! பெருந்தவத்தின்
பயனே வருக! இரவோட்டும்
பகலே வருக! பகைபோற்றும்
பண்பே வருக! நபிமாரின்

கோவே வருக! ரஹ்மானின்
கொடையே வருக! இறைபோற்றும்
குணமே வருக! குறைஷிகுலக்
கோமான் வருக! வருகவே!

(9)

திங்கள் நடக்கத் தீன்நடக்கத்
திகழும் சொர்க்கத் தொளிநடக்கத்
தருமம் நடக்கத் தவம்நடக்கத்
தரையில் ஒழுக்கந் தான்நடக்கச்

செங்கோல் நடக்கச் சீர்நடக்கச்
செம்மை நடக்கச் செயல்நடக்கச்
செழிப்பும் சிறப்பு மேநடக்கப்

பொங்கல் நடக்கப் புகழ்நடக்கப்
புதுமை பொதுமை நெறிநடக்கப்
புனிதம் நடக்கப் பொறை நடக்கப்
புண்ணியத் தோடே புவிநடக்க

அ[illegible]கம் மணக்க அறம்மணக்க
அங்கால் படிந்துத் தரைமணக்க
அன்பு மணக்க அருள்மணக்க
அஹ்மது நபியே, வருவீரே !

(10)

வேதம் மணக்க வழியறிந்து
வேலை மணக்க வினைபுரிந்து
விளைவு மணக்கப் பயன்துய்த்து
வெற்றி மணக்கப் பாங்கொலியின்

நாதம் மணக்கப் பள்ளிசென்று
நன்மை மணக்கக் கொடைவழங்கி
நாடு மணக்கக் கடனாற்றி
நாவில் மணக்கும் திக்ரொலியின்

[illegible]தம் மணக்கப் படைத்தோனின்
கிருபை மணக்க இதயத்தில்
தூய்மை மணக்க வாழ்க்கையில்
துங்கம்! மணக்க இறையோனின்

வேதம் மணக்கும் பெருமானே!
விழியில் நறுந்தேன் பாய்ந்திடவே
வண்ணச் சீரடி மெல்லெடுத்து
வாழ்வின் ஒளியே, வருவீரே !

1. [illegible]கம் — பரிசுத்தம்

# 7. அம்புலிப் பருவம்

நீணொளி பரப்பிஇம் மாநிலம் திருத்திய
திருநபி எம்கோவே !
திகளொளி பரப்பிஇந் நிலமதில் ஒளிதரல்
திங்களுன் தொழிலாமே !

வானுல கடைந்திறை நேரிருந் துரைசெய்த
வள்ளலார் எம்கோவே !
வளர்வதும் தேய்வதும்மறைவதும்நிகழ்ந்திடும்
வானமுன் உறைவிடமே !

நானிலம் போற்றிடும் நான்மறை ஏற்றிடும்
நாயகம் எம்கோவே !
நாவலர் புனைவதும் காதலர் புகழ்வதும்
நறைமதி யுன்மதிப்பே !

மாநில மாமணி மாதவப் பூமணி
மாநபி மணியுடனே
மலர்வன மதில்விளை யாடிட வருகவே
மறுமதி மகிழ்வுடனே

(2)

ஆண்டிடும் மன்னரும் அடிமையும் ஒன்றெனும்
அண்ணலார் எம்கோவே !
ஆண்டிக்கும் நிலவுநீ அரசுக்கும் நிலவுநீ
அனைவர்க்கும் பொதுவாமே !

வேண்டிடும் கலையெலாம் விரும்பியே மண்டிடும்
வித்தகர் எம்கோவே !
விரிந்திடும் பத்தறு கலையுடன் விளங்குதல்
வெண்ணிலா வுன்நிலையே !

நீண்டிடும் புகழெழு வானிலும் நிலவிடும்
நிலத்திலம் எம்கோவே !
நிலமதில் யாவரும் தெரிந்திடத் தவழ்கிறும்
நிலவுன் புகழிதுவே !

மாண்புறு கோமளம் சேண்புகழ் கோகிலம்
மாநில நபியுடனே
மலர்வன மதில்விளை யாடிட வருகவே
மறுமதி மகிழ்வுடனே

(3)

திருநபி பெயர்சொலின் தித்திக்கும் நாவினில்
தீம்பா லூறிடுமே !
திருப்பெயர்செவியுறின்தெவிட்டிடாமலைதரும்
தேன்பாய்ந் தோடிடுமே !

கருவடு மதியுந்தன் பெயரென்ன தேன்பால்
கனிந்திடச் செய்திடுமோ?
கலைநிறை நபியுடன் கலந்துற வாடிடின்
களங்கமும் இருந்திடுமோ !

உருவினில் சிதைவுறும் குறைநிலா ஓரிரா
ஒளியெலா மிழந்திடுவாய்!
உலகமே வியந்திடும் உத்தம நபிபுகழ்
ஓய்ந்திடா தமிழ்ந்திடுவாய்!

முருகொளி சிந்திடும் முத்திரை நபியுடன்
முத்தொளித் தாடிடவே
முஹம்மதின் புகழொளி முகமதின் ஒளிபெற
முனைப்புடன் வாமதியே!

(4)

ஒருசிறு முகிலுந்தன் ஒளிமுகம் மறைத்திடும்
உறுபகை யானதுவே!
உருக்கிடும் பாலையில் உத்தம நபிக்கது
உறுகுடை யானதுவே!

வருமுகிற் பகையினைத் தடுத்திடும் வல்லமை
வாய்த்ததோ உன்னிடத்தே!
வளநபி தலைகொய்ய வந்தவன் வாளுமே
விழுந்தது மண்ணிடத்தே!

பிரிவினில் வருந்திடும் மங்கையை வருத்திடும்
பகைமதி நீயெங்கே?
பரிவுடன் விதவையர் வாழ்ந்திட வகைசெய்த
பயகம்பர் புகழெங்கே?

முரியினில்[1] சொர்க்கத்தை அமைத்திட்ட நபியுடன்
முத்தொளித் தாடிடவே
முஹம்மதின் புகழொளி முகமதின் ஒளிபெற
முனைப்புடன் வாமதியே!

1. முரி — பாலை

(5)

புவிக்கறி வளித்திடும் நபிக்கொரு கலையினைப்
புனிதர வியன்றிடுமோ ?
புனிதருக் கறிவினைப் புகட்டிட உலகினில்
போதகர் எவருமுண்டோ?

பவித்திர1 தௌரெனும் பல்கலைக்கழகத்தில்
படைத்தவன் பாடத்தினைப்
பாங்குறப் படித்திறைப் பரிசென நபியொளிப்
பட்டத்தைப் பெற்றவராம்

பவக்கடல் கடந்திட தவப்பயன் அடைந்திட
பரிசுத்த இறைமறையைப்
பாருக்கே அளித்துநற் பாதையை வகுத்துக்கண்
பார்வையைத் திறந்தவராம் !

நவமணி யுடனொரு நொடியினை யாடிடில்
நலமொரு கோடிவரும்;
நற்றவப் பயனிது நழுவிட லாகுமோ
நலம்பெற வாமதியே !

1. பவித்திரம் — தூய

(6)

"வீரனின் குருதியிற் சிறந்திடும் அறிஞன்மை
விழுமிய வாயுதமாம்!
விரைந்தது சினந்தி லிருப்பினும் அடைந்திடு
விலையிலாக் கேடயமாம்!

பேரறி வாளர்முன் பெருந்தவத் தோர்நிலை
பெருநிலா முன்மீனும் !
பெறற்கருங் கல்விக்காய் நடப்பவன்
சொர்க்கத்தின்
பாதையில் நடப்போனும்!

சிருயர் கல்விக்காய் உயிர்கொடுத் தோரென்றும்
செகத்தினில் மறைவதில்லை!
சிறப்புறப் பயன்படாக் கல்வியோ இறைவழி
செலவிடா நிதிக்குவியல்!"

நேரிய கல்வியைப் போற்றிடும் நபியுடன்
நிலவுநீ யாடிடவா!
நிறைவுறு கலைபல குறைவற அடைந்திட
நிலவுநீ யாடிடவா!

(7)

ஒருவரின் துணையுடன் சென்றவர் படையுடன்
ஊர்வந்த அற்புதத்தை,
உறுதுணை யற்றவ னுதையே மன்னராய்
உயர்ந்திட்ட வதிசயத்தை,

பெருகிடும் எதிரிமுன் பிழைத்திடல் அரிதெனும்
போதினில் துணிவோடு
பெருநிலம் சிரியாவில் ஈரான் எமனிலே
பெருகுந்தீ னென்றதனை

கருவமே கொண்டிடும் நிலவுனைப் பிளந்திரு
கரங்களில் கொடுத்தாலும்
ஒருக்கலை மறந்திடா மக்கத்து மாதவம்
கடமையின் ஆற்றலினை

மருளுடை நிலவுநீ மறதியி லிருந்திடில்
மக்கத்தில் கேட்டறிவாய்!
மறுவிலா மதியுடன் ஆடிநல் லின்பத்தை
மண்டிட வந்திடுவாய்!

(8)

மதியுனை இறையவன் மறையினில் பேசிடும்
மதிப்பினை மறந்தனையோ ?
மனத்தினில் 'கமரெ'னும் ஒரதி காரத்தால்
மமதையுங் கொண்டனையோ ?

மதியுனக் கொளியினைத் தந்நிலைக் குயர்த்திய
மாலக்கைத் தினந்துதித்தும்
மாநபி யோடுற வாடிடத் தயக்கமேன்
மகிழ்வுடன் வந்திடுவாய்

விதியினை யமைத்தவன் வட்டத்தின் எல்லைக்குள்
விலங்குடன் விளையாடும்
வெண்மதி உனக்குநற் புண்ணியம் விளைந்திட
வேந்தரோ டாடிடவா !

கதியென பிறைவரைப் பலநிலை யடைந்திட
கணித்தவன் தூதுவராம்
கண்மணி நபியுடன் தண்மதி, யாடியே
கண்ணியம் பெற்றிடவா !

1. கமர்–திருக்குர்ஆனில் கமர (நிலவு) என்று ஓர் அத்தியாயம் உண்டு

(9)

புனிதரை மதித்துடன் வந்திட மறுத்திடில்
புவியுனைப் பழிக்காதோ?
பொறுமையின் சிகரமாம் திருநபி சகிக்கலாம்
புகழிறை சகிப்பானோ!

மனிதரின் தந்தையை மதித்திடா இபுலிசும்
மமதையா லழிந்தானே !
மாநபிக்(கு) ஊறுசெய் பாவியை இறையவன்
மறையினில் சபித்தானே !

சினமுறு உமரிதை யறிந்திடில் நொடியினில்
சிதைந்திடும் உன்னுருவே!
செங்கதிர் கடனொளி தந்திட மறுத்திடில்
செத்திடும் உன்நகையே!

நினைந்திட இ...ற்றிறும் க...ரிவுறு நபியுடன்
நிலவநீ யாடிடவா!
நெஞ்சினில் ஆணவம் அழிந்திட நபியுடன்
நிலவுநீ யாடிடவா

(10)

அருள்நபி நூஹுவை அணைந்திடாக் கூட்டத்தை
அழித்தது பிரளயமே!
அறநெறி 'ஹூது' எதிர் 'ஆத்' இனம் அழிந்திட
ஆர்த்தது பெரும்புயலே!

பெருங்குண சாலிஹின் ஒட்டகங் கொன்றவர்
புவியதிர்ந் தழிந்தனரே!
புகழ்பு ருஹிமின் பெரும்பகை நம்ருதை,
பொடிக் கொசு கொன்றதுவே!

திருவளர் மூஸாவின் வைரியிர் அவ்வினை
திரைநதி விழுங்கியதே!
தொண்டரைச் சபித்ததால் யூனுசை இறைவனின்
துயர்தொடர்ந் தாட்டியதே!

அருள்மிகு திருவளர் அஹமது நபியுடன்
அம்புலி யாடிடவா!
ஆணவத் தாலிறை சாபத்தை அடையுமுன்
அம்புலி யாடிடவா!

# ௮. சிற்றிற் பருவம்

உலகினில் எவரையும் இழிமொழி பகர்ந்திடா
உத்தம ரெத்தினமே!
உண்டிடும் பொருளினைச் சுண்டிடும் முகத்துடன்
ஒதுக்கிடா முக்கனியே!

பலமுள விசமுள உயிரெதும் ஒறுத்திடாப்
பரிமள நறுமணமே!
பகைவரை வெறுத்திடா எவரையும் சபித்திடா
பரிவுள திருவனமே!

உலவிடும் மனிதரின் குறைகளை அலசிடா
ஒழுக்கத்தின் புத்தகமே!
உதவியை நாடிய எவருக்கும் மறுத்திடா
உன்னதப் பெட்டகமே

சபைமாய் முறிந்திடும் விலாப்புற எலும்புகள்
சேர்ந்துரு வாக்கியதாம்
சினமொரு கணமிலாச் சிரித்திடும் வதனமென்
சிற்றிலைச் சிதைத்திடுமோ!

(2)

பருந்திடங் குருவியாய்ப் பாம்பிடந் தவளையாய்
பாலையிளங் கொடியாய்
பாய்ந்திடும் புலியிடம் பதுங்கிடும் மானுமாய்
பாவியிடஞ் சிசுவாய்க்

குரங்கிடம் மாலையாய்க் கூன்பிடைக் கிளியுமாய்க்
கோட்டானிடங் குயிலாய்க்
கொடுக்கிலா உடலெலாங்கொடுவிசமிருகங்கள்
கூட்டத்திடம் மயிலாய்

நரம்புகள் அறுந்திட நாதமில் வீணையாய்
நாயினிழி பிறப்பாய்
நஞ்சனை ஆடவர் வஞ்சனை உலகினில்
நலிவுறு பெண்ணினத்தின்

சிருங்கலை 1 யகற்றியே சுதந்திரம் வழங்கியே
சிந்தைவாழ் நாயகமே
சினமொரு கணமிலாச் சிரித்திடும் வதனமென்
சிற்றிலைச் சிதைத்திடுமோ!

1. சிருங்கலை - கைவிலங்கு

(3)

உடல்மேல் உயிர்வந்தே ஒன்றிடும் இயல்பினை
உள்ளம்மறந் திடுமோ?
உலகினில் இருமனம் கலந்திடல் திருமணம்
உண்மைமறுத் திடுமோ?

சுடர்வெண் பாவினில் மாமுன் நேர்வரின்
செவ்வோசை வருமோ ?
சீர்சமு தாயத்தில் சீதனம் வளர்ந்திடின்
செம்மைமலர்ந் திடுமோ?

முடமெய் உயிரினால் ஒலிபெறல் மொழியியல்
முறைதரும்விதி யன்றோ?
மங்கைக் (கு) ஆடவர் மஹர்தந்து மணப்பதே
மறைதரும்விதி யன்றோ?

இடருறும் பெண்களின் துயர்களைந் தருளிய
இறைபோன்றா ருவரே!
இளமதி தவழ்பநம் எமதரும் சிற்றிலின்
எழிலைச்சிதைத் திடுமோ?

(4)

கொஞ்சிடும் அஞ்சுக வஞ்சியை நஞ்செனக்
கொன்றிடும்வன் செயலைக்
கொடிதென தடுத்துநல் விடுதலை யளித்ததால்
குதூகலமா கியுள்ளம்

மஞ்ஞையாய் யாடியே மானென வோடியே
மாநபிவாழ் கவென்றே
மகிழ்வுடன் சிறுமியாம் அமைத்தநற்சிற்றிலின்
மதிப்பொருகோடிபெறும்!

நெஞ்சினில் நிறைந்திடும் செஞ்சமே 1 புகழ்மிகு
நெடியவன்கொடைப் பொருநனே!
நினைவினில் மணந்திடும் மனங்கவர் மல்லியே
நெய்யுநிர்மென் தருவே!

பஞ்சினும் பிஞ்சடி கண்டிடக் கண்டெங்கள்
பால்விழிகலங் கிடுமே!
பானுவின் கதிரெழில் பங்கயம் சிதைக்குமோ
பாவையெம் சிற்றிலையே!

1: செஞ்சம் — முழுமை

(5)

நபியொளி யடைந்துடல் நடுங்கிடு பொழுதினில்
நலமுறு பெருந்துணையாய்
நயவுரை பகர்ந்துள பயமகற் றிடுமனை
நாயகியாம் கதீஜா

அபரித நினைவுடன் அறிவொளி துலங்கிட
அமைவுறு பெண் மணியாய்
அதிகநல் ஹதீதுனை அகிலத்திற் களித்திட்ட
ஆயிஷாமரி யமுமே

நபியுங்க ளருமணி வறுமையில் ஒளிர்மணி
நற்றவத்திரு மணியும்
நங்கையர் குலந்தரு மங்கிடாத் தங்கங்கள்
நாநிலச்சுடர் களன்றோ?

குபிரிரு ளோட்டியே தீனொளி நாட்டிய
கோதிலாப் பூச்சரமே!
குளிர்தரு இளமுகில் சிறுபதம் சிதைக்குமோ
கோதையெம் சிற்றிலையே?

(6)

உருக்கிடும் துயரினில் உருகிடாப் பொறுமையின்
உன்னதப்பொன் னணியாம்
ஓரிறை மறுத்திடும் பிர்அவ்னின் கொடுமையில்
ஒளிவிடும்ஆ சியாவும்

இருக்கின்ற ஒருமகன் எழிலுறு அருமகன்
இறைபலியா கிடவே
இபுறாஹிம் நபியுடன் அனுப்பிடும் குலமணி
இறைநெறிஹா ஜிராவும்

அருட்குண சாலை அழகுடன் ஈன்றிட்ட
அன்னைமரி யமமே
அருள்மிகு திருவினைச் சுமந்திட்ட ஆமினா
அமுதளித் தஹலிமா

திருவளர் பெண்குலம் வாழ்ந்திடும் பரிசன்றோ
தீனின்சிறு மியரெம்
சிற்றிலைச் சொர்க்கத்தில் நடமிடும் சுந்தரச்
சிறுபதம்சிதைந் திடுமோ?

(7)

[ வேறு ]

புதைய லென்னும் அரியமதிப்
புதையல் தன்னை யென்னுள்ளே
புதைந்தும் பாவச் செயலினையே
புதைந்து யர்ந்த நாயகமே !

சிதைய லான ஓவியமாய்ச்
செல்ல ரித்த காவியமாய்ச்
சீரி ழந்த பூவினமாய்ச்
சிறகொ டிந்த புல்லினமாய்க்

கதையி ல்லாச் சோதனையாய்க்
கசடர் தந்த வாதனையாய்க்
கருகி வேகும் வேதனையில்
கண்ணீ ராடும் மாதரினைச்

சுதையி னின்றும் மீட்டவரின்
சுதந்தி ரத்தை நாட்டியொளி
சிந்தும் கருணைக் களஞ்சியமென்
சிற்றில் தன்னைச் சிதைத்திடுமோ ?

(8)

"ஆடவர் மங்கையர்க் காடையாம்
அணிவையர் மாந்தருக் கதுவே யாம்"
அறிவுரை பகர்ந்திடும் இறைமறையால்
அகிலத்தில் மங்கையர் பிழைத்தோமே!

தேடிய சொத்திலே சுகத்தினிலே
திருவளர்ச் செல்விக்கும் பங்கெனவே
திருமறை செப்பிய பிறகன்றோ
திசையெலாம் விழித்தொளி பெற்றதுவாம்!

பாடிய புலவனே இறந்துவிட்டால்
பாடலும் இறந்ததோ? விதவைகளும்
பாரினில் வாழ்ந்திட வழிகாட்டி
பரிவுடன் விதவையை மணம் செய்தீர்!

பீடையென் றொதுக்கிய பெண்ணினத்தைப்
பீடென உயர்த்திய பெருமானே!
பிறையெழில் சிந்திடும் மென்பதங்கள்
பேதையெம் சிற்றிலைச் சிதைத்திடுமோ?

(9)

தூய தீனின் அரும்புகளைத்
தூய்மை யோடு வளர்க்கின்ற
தாயின் காலே சொர்க்கமென
தாஹா நபியால் புரிந்தோமே!

பாயும் பாசச் சுனையுள்ளே
பாவக் கறைகள் படிந்தாலே
பாரின் இளைய தலைமுறையே
பாழாய்ப் போகு மறிந்தோமே!

ஈயும் மரத்தின் வேரழிந்தால்
இனிதாய்ப் பூத்துக் கனிந்திடுமோ?
இறையோ னுனக்கிங் கிணைவைத்தால்
இயற்கை தாங்கா துணர்ந்தோமே!

நேய நபியே, நாயகமே!
நிச்சயம் நாங்கள் திருந்திடுவோம்!
நெருப்பை நிலவாய்க் குளிர்விக்கும்
நெஞ்சம் சிற்றில் சிதைத்திடுமோ!

(10)

மணக்கும் அன்ஸார் மாதொருத்தி
மதியே தங்கள் ஒளிசிந்தும்
முகத்தைக் காணப் போர்க்களத்தும்
முனைந்து வந்தாள்; வழியெங்கும்

"துணையாம் தந்தை தனயனுமே
தொடரும் உஹதுப் போரினுயிர்
துறந்தா" ரென்று பலருரைத்தும்
தூரே காற்றில் மிதக்கவிட்டுத்

தணியா வேட்கை யுடன்கண்டு
தானும் தந்தை தனயனுமே
தங்கட் கர்ப்பணம் என்றுரைத்துத்
தனிப்பே ருவகை கொண்டனளே!

மணியே, உயிராய் மதிக்கின்ற
மங்கையர் எங்கள் சிற்றிலினை
மடங்காப் புலியை மானுக்கும்
மனமொரு போதும் சிதையாதே!

# 9. சிறுதேர்ப் பருவம்

வண்மையும் தண்மையும் வறுமையும் பொறுமையும்
வறியவர்க் கிரக்கமுமே
வாய்மையும் தூய்மையும் எளிமையும்
இனிமையும்
வளர்மதி நுணுக்கமுமே

உண்மையும் நன்னெறி உறுதியும் ஒருமையும்
ஒழுக்கமும் விழுப்பமுமே
ஓர்மையும் நேர்மையும் உலகியல் பொதுநலம்
உறவறம் துறவறமே

திண்மையும் மென்மையும் நாணயம் நாணயம்
தீரமும் வீரமுமே
சத்தியம் பக்தியும் நாணமும் நம்பிக்கை
சாந்தமும் நீதியுடன்

கண்ணிய நபியுமைப் புண்ணியந் தேடியே
கருக்கொண்ட பண்புகளே
கருத்தினில் புகுந்துனம் மணம்பெற சிறுதேர்
கனிவா யுருட்டுகவே!

(2)

''கொடுத்திடா வன்மனச் செல்வர்கள் சொர்க்கத்தில்
குடிபுகா'' ரென்றீரே!
''கொடுக்குப்போல் நாவினால் அவதூறுகூறுதல்
கொடி''தென்று சொன்னீரே!

''அடுத்தவர் சொத்தினை அபகரிப் பதுபெரும்
அழி''வென்று மொழிந்தீரே!
''ஆசையும் வேசமும் மோசமும் நாசத்தை
அளிக்கு''மென் றுரைத்தீரே!

அடைக்கலங் காத்ததை உயிரெனச் சேர்ப்பிக்க
அறவுரை பகன்றீரே!
ஆருயிர்க் காபத்தாம் போதிலு மடைக்கலம்
அனைத்துமொப் படைத்தீரே!

''படைத்தவன் தனக்கிணை வைப்பவன் பாவியில்
பாவி''யென் றறைந்தீரே!
பயகம்ப ரும்மொழி மனம்புக சிறுதேர்
பாங்கா யுருட்டுகவே!

(3)

தன்னுடன் இருந்திடும் பயணிகள் கூட்டத்தில்
தன்னையே மேலாகத்
தருக்கிடும் ஒருவனை இறைவிரும் பானெனத்
தற்புகழ் வெறுத்தீரே!

மன்னரும் வியந்திட கிழவியின் கதையினை
மனமொப்பிக் கேட்டீரே!
மனையினில் துணையிலா மக்களுக் குதவியே
மகிழ்வினைப் பெற்றீரே!

பொன்னருங் கைகளால் பள்ளியில் காரலைப்
பெயர்த்தெடுத் தெறிந்தீரே!
படுத்தெழும் போதினில் தழும்புகள் மேனியில்
படிந்திட வாண்டீரே!

கன்னலின் சாறென இன்னமு தூறிடும்
கனிவாய் மொழியெல்லாம்
கருத்தினிற் புகுந்துள மினித்திடச் சிறுதேர்
களிப்பா யுருட்டுகவே!

(4)

அருநகர் மக்காவை அடக்கிய வேளையில்
அசைந்திடில் சிறுவிரலே
அண்டிடும் பகையுயிர் கண்டிட முடியுமோ?
அருளுடன் பொறுத்தீரே!

திருமகள் சைனப்பின் உயிர்பிரித் துவந்திட்ட
தீயவன் ஹப்பாரினை
சிறுதந்தை ஹம்சாவைக் களந்தனில்
கொன்றிட்ட
சிறுமதி வக்ஷியினை

செருகளத் துயிர்விட்ட சிறுதந்தை ஈரலைச்
சுவைத்திட்ட ஹிந்தாவினை
சிரந்தனைக் கொய்திடும் சூழ்ச்சியில் வந்திட்ட
செறுநரின் ஆள் உமைரை

பெருமனத் தாலன்று மன்னித்த மாண்பினைப்
புகழ்ந்திடச் சொல்லிலையே!
பொறுமையின் சிகரமே, புண்ணிய மாமதி,
பொற்றேர் உருட்டுகவே!

(5)

உண்மையின் மீது எழுப்பிய வீடு
உங்களின் வாழ்வன்றோ?
உறுபகைகூட மதித்திடும் வாய்மை
உன்னதப் பேரன்றோ ?

கன்னியத் தோடு வாக்கினைக் காக்கும்
கடமையே உயிரன்றோ?
கசடுறு பொய்யால் கருகிடும் ஈமான்
கனிவாய் மொழியன்றோ ?

புன்னுடன் வந்த அபுஜந் தலினைப்
பகையிடம் ஒப்படைத்த
புண்ணிய நபியே, ஹுதைபியா சாசனப்
புகலுரை காத்தீரே !

மண்ணகம் மாற்ற மாதுளை சிந்தும்
மாண்புறு மொழியெல்லாம்
மனத்தினிற் புகுந்தே இனித்திடச் சிறுதேர்
மகிழ்வா யுருட்டுகவே !

(6)

[ வேறு ]

பாவிகள் பல்லினை உடைத்துதிரம்
பல்கியே பெருகிட மயக்கமுற்றுப்
பள்ளத்தில் கிடந்திடும் வேளையிலும்
பகைவருக் கிரங்கிடும் பரிவுளமே !

"நாவினால் சபித்திந்த கொடியவர்கள்
நாசமா யழிந்திடச் செய்க"வென
நாடிய தோழருக் குரைத்தமொழி
நறுந்தே னெனச்செவி பாய்ந்திடுதே !

"பூவினில் மன்பதை சபிப்பதற்கோ
புகழுக் குரியவன் அனுப்பிவைத்தான்
புரிந்திடா மாந்தரைப் புதுப்பிப்பதே
புவியினில் என்கடன்'' என்றுரைத்த

கோவிற்கும் கோவெங்கள் நபிக்கோவே,
குணமாய்ச் சிறுதேர் உருட்டுகவே!
கொடுமைகள் அழிந்திடக் குறையகலக்
கொள்கைச் சிறுதேர் உருட்டுகவே!

(7)

கூலகம்[1] முனிகளின் மெய்தொட்டுக்
குமுதத்தின் வாசனை பெற்றிடுமே!
குன்றிடா மேனியின் மணம்பட்டுக்
குப்பையு மிழிகுணம் அற்றிடுமே!

சீலமே யறிந்திடாப் பேதைப்பெண்
சிந்திடா மணியினிற் கூளத்தைச்
சிந்தை மகிழ்ந்திடக் கொட்டுவதைச்
சிலநாள் காணா துளம்நோவும்

கோலமா மணியே, அவள்வாழும்
குடிசையிற் சென்றவள் நோய்தீரக்
குணமாய் ஆறுதல் மொழிகூறும்
கோமே தகமே, குணக்குன்றே!

ஞாலமோர் குழியுடன் குன்றின்றி
நற்சமத் துவமா யாகிடவே
நறுமணச் சந்தனக் கையாலே
நறுந்தே குருட்டி வருவீரே!

1. கூலகம்—கரையான் புற்று

(8)

(வேறு)

உலகங் காணு முறையோடே
ஒன்றி அன்சார் முஹாஜிர்கள்
உறவு கொள்ள உள்ளங்களை
ஒருமைப் படுத்துங் கோமானே!

சலன மின்றிச் சொத்துசுகம்
சகல உறவும் விட்டுவந்த
சத்திய மக்கள் முஹாஜிர்கள்
சரிதம் படைத்த பூமானே!

குலவிக் கூடி உறவாடிக்
குடும்பச் சொத்திற் சரிபாதி
கொடுக்க (உ) வந்த அன்சாரிக்
குழுவை யமைத்த சீமானே!

மலரும் பாசப் பிணைப்பீந்து
மகிழுந் துரையே. மலர்க்கையால்
மண்டும் பாவக் களையோட
மார்க்கச் சிறுதே ருருட்டுகவே!

(9)

செம்மை யறியாக் காட்டரபி
சிறுநீர் பெய்து மஸ்ஜிதைச்
சிறுமை செய்த போதவனைச்
சினந்த டிக்கத் துணிந்தோரை,

"உம்மை யிந்தப் பாருலகில்
ஒருவருக் கின்னல், தருவதற்கோ
உயர்வாய் அல்லாஹ் படைத்தானென்"
றுரைத்தே அவரைத் தடைசெய்து

தம்மென் கையால் நீரிட்டுத்
தரையைத் தூய்மை செய்தீரே !
தரையின் பாவக் கறைதீரத்
தாருல் இஸ்லாம் தந்தீரோ !

இம்மை மறுமை ஈருலகில்
இனிதாய் வாழ வழிசெய்தோய் !
இன்ன லகல எழிற்கரத்தால்
இனிதே சிறுதே ருருட்டுகவே !

(10)

பேரின் பத்தின் இருப்பிடமே !
பேரிரக்கத்தின் புகலிடமே !
பெரும்வீ ரத்தின் உறைவிடமே !
பேரச் சத்தால் முஸ்லிம்கள்

போரில் பின்ன டைந்தந்தோ
புறத்தொ துங்கிப் போனாலும்
போரின் முன்னே பாய்ந்தீரே !
"புலியின் தூதர் முத்தலிபின்

பேரன் யானே" என்றவுரை
புரிந்த மாயம் அறியோமே !
புறத்த கன்ற தீனோர்கள்
புலிபோற் பாய்ந்து வென்றாரே !

வேரின் வேராய் உள்ளத்தில்
விரியும் இறையின் நம்பிக்கை
ஒளியே, தீனின் கரத்தாலே
வெற்றித் தேரை உருட்டுகவே !

# 10. சிறுமுரசுப் பருவம்
## (சிறுபறைப் பருவம்)
### (வேறு)

ஓரிறைவன் நெறியினிலே உலகெல்லாம் ஒழுங்குடனே
ஓரினமாய்வாழ
ஒப்பில்லான் திருமறையை உலகத்தின் பரிசாக்கி
உவக்கும் பெருமானே!

பாரறிய தீன்நெறியைப் பலதிசையும் முழங்கிடவே
பாயும் அலையாகப்
பாரெங்கும் அல்லா(ஹ்)வின் பேரறிய புகழறியப்
பண்புடன் சென்றாரே!

சீருடைய வாழ்வுடைய சிறப்பான இலக்கணத்தைச்
சிந்தையில் சுமந்தாரே!
ஜெகமெங்கும் புகுந்திட்ட இளந்தென்றல் காற்றாக
ஜெயமுடன் உயர்ந்தாரே!

சீருடன் செழிப்போடு வாழ்ந்திட்ட நாளெங்கே?
செம்மைத் திறமெங்கே?
செந்தேனே, அந்நாளை இந்நாளில் கண்டுவிடச்
சிறுமுர சதிரட்டுமே!

(2)

கரங்களிலே இஸ்லாத்தின் கொடியேந்தி மிடுக்கோடு
கடமையைச் செய்திடவே
காடுருவி மலைகடந்துகடல்தாண்டிபுயல்மோதி
களிப்புடன் சென்றனரே!

பெருங்கடலாம் இந்தியமா சமுத்திரம் "அட்லாண்டிக்"
"பசிபிக்" அலைகடந்தே
பாய்மரத்தில் படகுகளில கட்டுமரக்
கலங்களிலே
பாரெங்கும் பரவினரே!

இருண்டஐ ரோப்பாவில் அறிவூட்டி விஞ்ஞான
எழுச்சியைப் பெய்தனரே!
இடந்தாங்கி ஆப்பிரிக்கா ஆசியா அமெரிக்கா
எழிலுறச் செய்தனரே!

குரலோங்க அல்லாஹு அக்பரென் றோதியே
குவலயம் ஆண்டனரே!
குணமாளே, அந்நாளை இந்நாளில் கண்டுவிடக்
கொட்டுக சிறுமுரசே!

(3)

மாசின்றி உலகாண்ட மாமகுடம் ஒளியேந்த
மாநிலம் வாய்மைபெற
மறைகூறும் நெறியேயிம் மண்ணுலகுஞ்
சட்டமாய்
மனமெலாம் தூய்மைபெற

தேசத்தில் சமதரும வாசத்தில் புலியோடு
நெருங்கியே மான்வளர
நிலமான அரண்வேண்டாம் நிழலீயும்
குடில்போதும்
நிறைவுடன் வாழ்ந்துயர

ஈசலாய் ஆண்டவனின் காதலால் தீநெறியில்
இன்னுயிர் ஈந்துயர
இகமெங்கும் என்றென்றும் வசந்தத்தில்
பொலிவோடே
இனியபூங் காவிரிய

பாசத்தின் மலரேநல்வாழ்க்கைக்கு மணமேதேன்
பாய்ந்திட நெஞ்சினிலே
பாராண்ட கையாலே பரிவோடு
கொட்டுங்கள்
பரவட்டும் தீன்முரசே !

(4)

தேகந்தான் கபுருக்குத் தீனுக்கே உயிரென்னும்
தியாக உணர்வோடு
தித்திக்கும் மறைதூக்கி எத்திக்கும்
மணமூட்ட
தீன்தேன் குரலோடு

சோகந்தான் சூழ்ந்தாலும் சூழ்ச்சிகள் எழுந்தாலும்
சோரா மனத்தோடு
சன்மார்க்கம் தனைக்காக்க சமருக்கும்
அஞ்சாத
சத்தியத் திடத்தோடு

ஏகத்துவக் கொள்கைக்காய்ச் சிந்திட்ட இரத்தத்தில்
எரியும் தீன்விளக்கை
இறைநேசத் தியாகிகள் விட்டநல் மூச்சாலே
இலங்கும் தேன் பிறையை

மேகங்கள் மறைக்காமல் மோகத்தில் மயங்காமல்
மூச்சாய்க் காத்திடவே
முத்தேநின் கரத்தாலே முகையேதேன்
விரலாலே
முரசம் முழங்குகவே !

(5)

சிற்றெறும்பும் சுலைமானும் சமமென்றே இறைதந்த
சிறப்புறு தீனொளியில்
சாதிமதச் சண்டைகள் ஓய்ந்ததுவே
ஜெகமெங்கும்
சமத்துவ மானதுவே!

கொற்றவனும் மஹ்மூதும் தொத்தடிமை ஐயாசும்
குணந்தரு பள்ளியிலே
கூடியொரு தோளோடு தோளிணையத்
தொழுதாரே
குதூகல மானதுவே!

குற்றமிகு பாலைவனம் ஏகத்துவ நெறியேற்று
குணமுடன் உயர்ந்தது போற்
குழப்பத்தில் தடுமாறும் குவலயம் முழுதுமே
கொள்கையில் இணைந்திடவே

நற்றவத்தின் நாயகரே! நன்மறையின் போதகரே!
நறுமணக் கரத்தாலே
நாவிலமும் தீன்பாயமுழங்கட்டும் கொட்டுங்கள்
நலமுறு சிறுமரசே!

(6)

வேறு

இரும்பாய் இருந்த இதயத்திலே
இரக்கம் சுரந்து பாய்ந்ததுவே!
எரியும் மணலாய் கண்களிலே!
இனிய மலர்கள் பூத்தனவே!

சுரும்பாய் மதுவைச் சுற்றுமனம்
சுத்த சித்தி பெற்றதுவே!
சூதிலாடும் கையிரண்டும்
சோதி மறையைப் பற்றினவே!

துரும்பாய்ப் புயலில் துவளுமுடல்
தூய்மை பெற்றுத் துலங்கிடுதே!
தொல்லை தொடரும் புவிவாழ்வு
துப்புரவாகி விளங்கிடுதே !

கரும்பாய் இனிக்கும் கைகளினுல்
கனிவாய் முரசு கொட்டுகவே!
காசிம் முஸ்த பாநபியே,
ஹக்கின் முரசு கொட்டுகவே!

(7)

பாங்கின் குரலைக் கேட்டதுமே
பாங்காய்க் கால்கள் எழுகின்றதே!
பசியின் கொடுமை கண்டதுமே
பரிவாய்க் கண்கள் கசிகின்றதே!

ஏங்கும் விதவை நிலைகண்டே
இதயம் விம்மி அழுகின்றதே!
ஏழை யனுதை துயர்போக்க
இருகை மழையைச் சொரிகின்றதே!

தூங்கும் உலகம் விழித்ததுவே
துயரக் கனவு மழிந்ததுவே
தூய ரப்பில் ஆலமின்
தூதர் முகம்மது ஸல்லல்லாஹு

தேங்கும் குழப்பக் கடல்தாண்டி
தேம்பும் மாந்தர் நிலைமாறித்
தீனை ஏற்று ரென்றின்பத்
தேனும் முரசு கொட்டுகவே!

(8)

நாரே தக்பீர் என்றதுமே
நாவில் அல்லாஹ் அக்பரென்ற
நாதம் பொங்கிப் பாய்ந்திடவே
நான்கு திசையும் மலர்கின்றதே!

நேரும் தொல்லைத் தூசகற்றி
நெறியாம் மறையைச் சிரமேற்று
நெஞ்சில் ஈமான் திடத்தோடு
நிலமெல் லாமே மணக்கிறதே!

வேரின் அசையா உறுதியினால்
விரும்பும் அமைதி நிழலினிலே
உண்மைப் பூவின் மணங்கொண்டே
ஒழுக்கக் கனியின் சுவையுண்டு

சீரே, நூரே, ஜீவியமே
சிந்தை யள்ளுங் காவியமே,
ஜெகமே சாந்தி ஏற்றதெனத்
தீனின் முரசு கொட்டுகவே!

(9)

கலகம் களவு கொலையோடு
கயமை காமம் கள்போதை
கடந்த கால மானதென
கண்ணே, கொட்டுக தீன்முரசு!

உலக மாந்தர் உத்தமராய்
உயர்ந்தார், பூட்டுச் சாவிக்கினி
வேலை இல்லை யென்றெங்கள்
விழியே, கொட்டுக தீன்முரசு

நிலவில் லாநள் ளிரவினுமே
நடுக்க மின்றிப் பெண்தெருவில்
நடக்கும் காலம் வந்ததென
நபியே, கொட்டுக நின்முரசு!

உலகில் நீளும் விழிதந்தே
உள்ளத் தோர்மை ஒளிதந்தே
ஓரிறைப் பாடங் கற்பித்த
உயிரே, கொட்டுக நின்முரசே!

(10)

வாழை தென்னை கரும்புடன்நெல்
வயிரம் வெள்ளி பொன்மணிகள்
வளமே பொங்கி நிறைந்தாலும்
வாரிக் கொடுத்தால் பெறுவதற்கோர்

ஏழை இல்லை; தெருவெங்கும்
இரப்போர் இல்லை; ஜக்காத்தும்
ஈய வழியைக் காணேமே!
ஈனச் சைத்தா னுக்கஞ்சும்

கோழை இல்லை; குணத்திற்கோ
குறைவே இல்லை; கொள்கையிலாக்
குருடரில்லை; கொக்குமீன்
கொத்தும் நிலையும் ஈங்கில்லையே!

ஆழி சூழும் உலகமதே
அமுதாய் மாறிப் போனதுவே
அருமை நபியே, நின்கரத்தால்
அழகு முரசு கொட்டுகவே!

நலம்